# தமிழ்மொழி இலக்கண இலக்கியத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

தொகுப்பாசிரியர்

முனைவர் த.மகேஸ்வரி

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் உவமைகள்

முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட்ராணி

சங்ககாலத் தமிழரின் மட்கலத் தொழில்நுட்ப உத்திகள்

முனைவர் ந. கார்த்தி

வைணவ இலக்கியங்களில் அஃறிணைகளின் தூது

முனைவர் நா.குமாரி

வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்: ஒரு வரலாற்று ரீதியான நோக்கு

பே. சச்சிதானந்தம். & பேரா. நா. ஞானகுமாரன்

தமிழ் இலக்கணச் சொற்றொடர் அமைப்புமுறை

முனைவர் ப. சசிரேகா

கட்டமைப்பு நோக்கில் *ஆண்டாள் பிள்ளைத்தமிழ்*

ஜெ.பா.சாம் செல்வகுமார்

சங்க மாந்தர்களின் வாழ்வில் நாள்மீன்

முனைவர். அ. புஷ்பா

# தமிழ்மொழி இலக்கண இலக்கியத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

தொகுப்பாசிரியர்

முனைவர் த. மகேஸ்வரி

# Title Verso



| | | |
|---|---|---|
| **TITLE OF THE BOOK** | : | **Tamil Mozhi Ilakkana Ilakkiyathin Thonmayum Valarchiyum** |
| **புத்தகத்தலைப்பு** | : | **தமிழ்மொழி இலக்கண இலக்கியத்தின் தொன்மையும் வளர்ச்சியும்** |
| **தொகுப்பாசிரியர்** | : | **முனைவர் த.மகேஸ்வரி** |
| **முதல் பதிப்பு** | : | 2023 |
| **பக்கங்கள்** | : | 142 |
| **விலை** | : | 350 |
| **ISBN NUMBER** | : | 978-93-91115-98-2 |

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu



**பதிப்புரிமை/Copyright © 2023 – ஆசிரியர்/Author**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# என்னுரை

**முனைவர் த. மகேஸ்வரி**
நிறுவனர்,
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் - 626001.



உலகம் முழுவதும் மொழி மற்றும் கலாச்சார பன்முகத் தன்மையை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21 ஆம் தேதி உலக தாய்மொழி தினம் கொண்டாடப்படுகிறது. இந்நாளில், தாய் மொழியையும் அதன் கலாச்சார முக்கியத்துவத்தையும் மக்கள் தங்கள் வாழ்க்கையில் கொண்டாடுகிறார்கள். உலகம் முழுவதும் சுமார் 80 மில்லியன் பேர் பேசும் பழமையான மற்றும் மிகவும் பரவலாகப் பேசப்படும் மொழிகளில் தமிழ் ஒன்றாகும். இது இந்திய மாநிலமான தமிழ்நாட்டின் உத்தியோக பூர்வ மொழியாகும். மேலும், இது இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் பேசப்படுகிறது.

தமிழ்ப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட செழுமையானக் கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இம்மொழி 2,000 ஆண்டுகளுக்கும்

மேலாக உள்ளது. தென்னிந்திய கலாச்சாரத்தை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்கப் பங்கைக் கொண்டுள்ளது. தமிழ் இலக்கியம் பழங்காலத்திலிருந்தே கவிதைகள், நாடகங்கள், காவியங்கள் ஆகியவற்றைக் கொண்டு உலகின் மிகப் பழமையானதும் வளமானதுமான ஒன்றாகக் காட்சியளிக்கின்றது. தமிழ் இசை, நடனம் மற்றும் கலை ஆகியவையும் உயர்வாகக் கருதப்படுகின்றது. பல நாடுகளின் கலாச்சார மரபுகளில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

உலகத் தாய்மொழி தினத்தன்று, தமிழ் நாட்டிலுள்ள மக்களும், உலகெங்கிலும் உள்ள தமிழ் பேசும் சமூகத்தினரும் மொழியையும் அதன் கலாச்சார முக்கியத்துவத்தையும் கொண்டாடுகிறார்கள். அவர்கள் தமிழ் மொழியையும் அதன் இலக்கியத்தையும் மேம்படுத்துவதற்காகப் பல நிகழ்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளை ஏற்பாடு செய்கிறார்கள். உலகெங்கிலும் உள்ள மொழியியல் பன்முகத் தன்மையைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இந்த நாள் நினைவூட்டுகிறது.

தமிழ்நாட்டில் பல கல்வி அமைப்புகள் மொழி மற்றும் அதன் கலாச்சார முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றன. மாணவர்கள் தமிழ் கவிதைகளை

வாசிக்கிறார்கள்; தமிழ்ப் பாடல்களைப் பாடுகிறார்கள்; தமிழ்ப் பாரம்பரிய நடனங்களை நிகழ்த்துகிறார்கள். தமிழ் மொழியில் இலக்கியப் போட்டிகளும் விவாதங்களும் நடத்தப்படுகின்றன.

உலக தாய்மொழி தினம் என்பது உலகம் முழுவதும் மொழியியல் பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான நாள். உலகின் பழமையான மற்றும் வளமான மொழிகளில் ஒன்றாகத் திகழும் தமிழ், இந்நாளில் சிறப்பு அங்கீகாரத்திற்குத் தகுதியானது. இது நமது தாய்மொழியையும் கலாச்சாரப் பாரம்பரியத்தையும் பாதுகாத்து மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தைத் நினைவூட்டுகிறது.

**முனைவர் த. மகேஸ்வரி**

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் உவமைகள்<br>முனைவர் சு. ஏஞ்சல்ஜெயலெட்ராணி | 1-10 |
| 2. | சங்ககாலத் தமிழரின் மட்கலத் தொழில் நுட்ப உத்திகள்<br>முனைவர் ந. கார்த்தி | 11-25 |
| 3. | வைணவ இலக்கியங்களில் அஃறிணைகளின் தூது<br>முனைவர் நா. குமாரி | 26-50 |
| 4. | வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்: ஒரு வரலாற்று ரீதியான நோக்கு<br>பே. சச்சிதானந்தம்.<br>பேரா. நா. ஞானகுமாரன், | 51-83 |
| 5. | தமிழ் இலக்கணச் சொற்றொடர் அமைப்பு முறை<br>முனைவர் ப. சசிரேகா | 84-98 |
| 6. | கட்டமைப்பு நோக்கில் *ஆண்டாள் பிள்ளைத்தமிழ்*<br>ஜெ. பா. சாம் செல்வகுமார் | 99-119 |
| 7. | சங்க மாந்தர்களின் வாழ்வில் நாள்மீன்<br>முனைவர் அ. புஷ்பா | 120-142 |

# சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் உவமைகள்

**முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட்ராணி,** தமிழ் உதவிப்பேராசிரியர்,
புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சூசைபுரம்.
**ORCiD: https://orcid.org/0009-0003-5792-9486**
**DOI: 10.5281/zenodo.7997982**

## ஆய்வுச்சுருக்கம்

*சங்க பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அணிநலன் குறித்த சிந்தனைகள் அதிகம் உள்ளன. அகம் புறம் ஆகிய இரு நிலைகளிலும் அவை இடம்பெற்றுள்ளன. இயல்பான நிகழ்வை மேலும் சிறப்புற விளங்கச் செய்வதற்காகப் பெண்பாற் புலவர்கள் அணிநலன் உத்திகளைக் கையாண்டுள்ளனர். இவை பாடலுக்கு மேலும் அழகு சேர்ப்பதாய் அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் உவமையினைப் பலவகையாகப் பயன்படுத்தி உள்ளனர். இதனை இக்கட்டுரையின் வழியாக அறியலாம்.*

**திறவுச்சொற்கள்:** சங்கம், பெண்புலவர்கள், உவமைகள்.

## முன்னுரை

சங்க பெண்பாற் புலவர்களின் பாடல்களில்

அணிநலன் குறித்த சிந்தனைகள் அதிகம் உள்ளன. அகம் புறம் ஆகிய இரு நிலைகளிலும் அவை இடம்பெற்றுள்ளன. இயல்பான நிகழ்வை மேலும் சிறப்புற விளங்கச் செய்வதற்காகப் பெண்பாற் புலவர்கள் அணிநலன் உத்திகளைக் கையாண்டுள்ளனர். இவை பாடலுக்கு மேலும் அழகு சேர்ப்பதாய் அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் உவமையினைப் பலவகையாகப் பயன்படுத்தி உள்ளனர். இதனை இக்கட்டுரையின் வழியாக அறியலாம்.

**புறப்பொருள் உவமை**

பெண்பாற்புலவர்களின் பாடல்களில் காணப் பெறும் புறம் சார்ந்த செய்திகள் அடிப்படையில் வரும் உவமைகளைக் கொண்டு அமைவது புறப்பொருள் உவமையாகும். அவை மன்னர், முதின் மகளிர், போர், புராணம் என்னும் வகையில் அமைகின்றது.

**மன்னர் பற்றிய உவமைகள்**

கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய அதியமான் மிகுந்த கொடைத்தன்மை கொண்டவன். தன்னை நாடிவரும் இரவலர்க்குத் தன பெயர் நீண்ட காலம் நிலைபெற்று இருக்குமாறு தேர்களைப் பரிசாக அளிப்பான். இத்தகைய கொடைத்தன்மை கொண்ட அதியமானின் நாள் மகிழிருக்கை போல் மழை பெய்யத்தொடங்கி மாறாத தன்மை உடையதாய்


Isbn Number: 978-93-91115-98-2

விளங்கியது என்று ஔவையார் உவமைப்படுத்திக் காட்டுகின்றார். இதனை,

**தேர்வீசு இருக்கை போல**
**மாரி யிரீஇ மான்றன்றால் மழையே**

**(நற்., 381: 9-10)**

என்று வரும் பாடலடிகள் காட்டுகின்றன.

**அகப்பொருள் உவமை**

பெண்பாற் புலவர்களின் அகத்திணைச் சார்ந்த பாடல்களில் தலைமக்களது வாழ்வியல் சூழலை மையமிட்ட சில உவமைகள் காணக்கடைக்கின்றன. அவை தலைமக்களது கனவு, கற்பு, ஆகிய இரு நிலைகளில் ஏற்படும் நிகழ்வுகளை மையமிட்டதாக அமைந்துள்ளன. அதன் அடிப்படையில் பொதுநிலை உவமை பிரிவு வழி உவமை என இரண்டாய் பிரிக்கலாம்.

**பொதுநிலை உவமை**

தலைவியைச் சந்திக்கக் கூட இயலாது தவிக்கும் நன்;மைகள் ஒருவன் சுடப்படாத பசுமண் கமலம் மழைத்துளிகளை எதிர்த்து நிற்க இயலாது கரைவது போன்று சிறு துன்பத்தையும் தாங்க இயலாததாய் தன் நெஞ்சம் உள்ளது என்றும் இத்தகைய நெஞ்சத்தைக் கொண்டு துன்பம் என்னும் வெள்ளத்தைத் தம்மால் கடக்க அரிதாய் உள்ளது என்றும் கூறி வருந்துவதை உவமை நயம்பட ஔவையார் காட்சிப்படுத்துகின்றார். இதனை,

 Isbn Number: 978-93-91115-98-2

**பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல**
**உள்ளந் தாங்கா வெள்ளம் நீந்தி**
**அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்**
**(குறுந்., 20: 2-4)**

என்று கூறுவதன் வழி அறியலாம். தலைவனது உள்ளம் சுடப்படாத பசுமண் கலத்திற்கு உவமைக் கூறப்பட்டது.

**பிரிவு வழி உவமை**

பரத்தையார் பிரிவால் தலவி ஊடல் கொண்டிருப்பதை அறிந்த தலைவன் அவனது நிலையை அறிய தூதுவரை அனுப்புகிறான். தலைவனுக்காக வாயில் வேண்டி வந்தோரிடம் கடுகைப் போன்ற சிறிய பூக்களை உடைய ஞாழல் மரம் மருத மரத்தின் மலர்களோடு சேர்ந்து நீர்த்துறையை அழகு செய்தது. அதுபோல் தலைவனும் பலரும் காணுமாறு நீராடுதுறையில் பரத்தையருடன் சேர்ந்து ஆடினான் என்பதைத் தலைவி நயம்படக் கூறி வாயில் மறுப்பதைக் குன்றியனார்.

**ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்**
**செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்**
**துறையணிந் தன்றவ ளூரே யிறையிறந்**
**திலங்குவளை நெகிழச் சாஅய்ப்**
**புலம்பணிந் தன்றவர் மணந்ததோளே. (குறு., 50)**

என்று கூறி காட்சிப்படுத்துகின்றார்.


Isbn Number: 978-93-91115-98-2

**கலையியல் உவமை**

மன மகிழ்விற்காகவும் தமது திறனை வெளிப்படுத்தும் பொருட்டும் எங்க கால மக்கள் பலர் கலைஞர்களாகத் திகழ்ந்தனர். பழங்கால மன்னர் அவைகளில் ஆடற்கலை சிறப்பிடம் பெற்றிருந்தது. ஆடுமகள் தன் உடலை வளைத்தும் நெளித்தும் ஆடுவதைப்போன்று கடவுள் குடி கொண்டிருக்கும் இமயத்தில் மணிகளை உடைய பாம்புகள் படமெடுத்து ஆடின என்றும், ஒளிபோல் விளங்கும் பற்களையும் அமுதம் போன்ற சொற்களைப் பேசும் சிவந்த இதழ்களையும் உடைய விறலியின் ஆடலை ஆடுகோட்பாட்டுச் சேலாதன் கண்டு ரசித்தான் என்றும் நச்செள்ளையார்,

**…வாணகை யிலங்கெயிற்**

**றமிழ்து பொதீது வர்வா யசைநடை விறிலியர்**

**(பதிற்று., 51: 19-21)**

என்ற தமது பாடலடிகள் வாயிலாக குறிப்பிடுகின்றார். ஆடற்கலை மட்டுமல்லாது ஓவியக் கலையும் அக்காலத்தில் சிறப்புற்றிருந்தது.

**விலங்குகள் பற்றிய உவமை**

சங்கப் பெண்பாற் புலவர்கள் விலங்குகள் குறித்து நமது பாடல்களில் உவமை மூலம் விளக்கியுள்ளனர். யானை, குதிரை, புலி, அணில் போன்ற விலங்குகள்

 Isbn Number: 978-93-91115-98-2

அவர்களால் சிறப்பிக்கப்பட்டுள்ளன. யானைப் படைகளும், குதிரைப் படைகளும் அணி அணியாக போர்க்கொடிகளை ஏற்றி வந்தன. அவை வேற்று நாடுகளிலிருந்து பொருள் ஏற்றிக்கொண்டு அசைந்தவாறு கடலில் வரும் கலம்போல் காட்சியளித்தன என்பதைக் காக்கைப்பாடினி நச்செள்ளையார்,

**கொடி நுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து**
**வடிமணி நெடுந்தேர் வேறுபுலம் பரப்பி**
**அருங்கலந் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்**

**(பதிற்., 52: 1-3)**

என்று காட்சிப்படுத்துகிறார். படைக்களத்திற்கு மரக்கலம் இங்கு உவமைப்படுத்தப்பட்டது.

**பறவைகள் பற்றிய உவமை**

இயற்கையும் அதனைச் சார்ந்து வாழும் உயரினங்களும் சங்கப் புலவர்களைப் பெரிதும் கவர்ந்தன. அகப்புறப் பாடல்கள் அனைத்திலும் இத்தகைய காட்சிகள் புலப்படுகின்றன. சங்கப் பெண்பாற் புலர்கள் மயில், கிளி, குயில், குறும்பூழ், நாரை, ஆந்தை, சிச்சிலி வண்டு போன்ற பறவை இளங்களைப் பற்றி உவமைப்படுத்தியுள்ளனர். வளம் நிறைந்த காடுகளில் உள்ள பயிர்கள் கிளிக்குஞ்சின் சிறகினைப் போன்று இருந்தன என்பதை ஒக்கூர் மாசாத்தியார்.

**தளிரீயற் கிள்ளை யீனிதீனி கொடுத்த**


Isbn Number: 978-93-91115-98-2

**வளராப் பிள்ளைத் தூவி யன்ன**

**(அகம்., 324: 3-4)**

என்று கூறுகின்றார். காடுகளின் பசுமை கிளிக்குஞ்சின் நிறத்திற்கு உவமம் செய்யப்பட்டது.

**தாவரம் பற்றிய உவமை**

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டிருந்தனர். சங்கப் புலவர்கள் மரம், செடி, கொடிகளையும் இயற்கை சார்ந்த பல நிகழ்வுகளையும் தமது பாடலில் புனைந்துள்ளர். காயா மரங்கள் பூத்தள்ள மலைப்பகுதியில் கொன்றை மரங்கள் ஆங்காங்கே பொன்னிறமான மலர்களைக் கொண்டிருந்தன. இவ்வாறான மலைப்பகுதியில் இடி மின்னலுடன் மேகங்கள் மழை பெய்வித்தன என்பதை ஔவையார்.

**காயாங் குன்றத்துக் கொன்றை போல**
**மாமலை விடரகம் விளங்க மின்னி (நற்., 371: 1-2)**

என்று பாடியுள்ளார். மலர்ந்த காயா மரங்கள் நீர் நிறைந்த மேகத்திற்கும் கொன்றை மலர்கள் மின்னலுக்கும் உவமை கூறப்பட்டன.

**களவும் புனைவில் உள்ளுறை**

சங்கப் பெண்பாற் புலவர்கள் தலைமக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை மேலும் சுவைபடக் கூறுவதற்கு உள்ளுறையைக் கையாண்டுள்ளனர். தன் துணையாகிய


Isbn Number: 978-93-91115-98-2

களிற்றைப் புலி கொன்றதனால் பிடியானது தன் கன்றை அணைத்தவாறு பெருந்துன்பத்துடன் தளர்வுற்று நடந்து சென்றது. ஆற்ற முடியாத பெரும் புண்பட்டவரைப் போல் வருந்தியது. அதுபோல் தலைவனால் ஏற்பட்ட பசலைக்கு வருந்தும் தலைவியோடு தானும் சேர்ந்து வருந்துவதாகத் தோழி கூறுகின்றனாள். இதனை நல்வெள்ளியார்,

**பைதலங் குழவி தழீஇ பொய்யென**
**வரும்புணி ணுறநரின் வருந்தி (நற்., 47: 4-5)**

என்று உரைப்பதனால் துணையைப் பிரிந்த பிடிக்க பெருவருத்தமிருந்தாலும் தன் கன்றினைக் காக்கும் பண்புடையதாய் அதனைத் தழுவி நின்றது என்பதும் அதுபோல தலைவனின் பிரிவுத் துன்பத்தால் பசலை ஏற்பட்டு பொலிவிழந்து வருந்தியபோதும் தலைவி நாணுடைமையால் தான்கொண்ட கனவினைக் காத்து வந்தாள் என்பதும் உள்ளுறையாகப் பெறப்படுகின்றன.

**கற்பு வாழ்க்கைப் புனைவில் உள்ளுறை**

எருமையானது தான் கட்டப்பட்டிருந்த கொட்டிலை நீராலும், சாணத்தாலும் சேறாக்கி கயிற்றை அறுத்துக்கொண்டு வேளியைக் கொம்பால் சிதைத்து வள்ளைக் கொடிகளை நீக்கித் தாமரை மலரை உண்டது. அதுபோல், தலைவன் தன்னால் ஆதரித்துக் கொள்ளப்பட்டத் தலைவியை வேறுபடுத்தி நாணமாகிய கட்டுக்களை அறுத்து பரத்தையர்க்குக் காவலாகிய


Isbn Number: 978-93-91115-98-2

வேலியைப் பணன் என்னும் கோட்டால் நீக்கிப் பரத்தையரின் தாய்மாரையும் மயக்கி, பரத்தை மகளிரை நுகர்ந்தான் என்பது இங்கு உள்ளுறையாக அமைந்தது.

> **…நீர்முதிர் பழனத்து மீனுடரிய**
> **வந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை**
> **வண்டுது பனிமலர் ஆரூமூர (அகம்., 46: 1-6)**

இதனை நன்முல்லையார் பாடியுள்ளார்.

**முடிவுரை**

சங்ககாலம் பெண்கல்வியில் சிறந்து விளங்கியது என்பதற்குப் பெண்பாற் புலவர்களே எடுத்துக்காட்டாக அமைந்தனர். உணர்ச்சி ததும்பும் பாடல்களைப் பாடிச் சிறப்புறப் பெற்றுள்ளனர். ஆண்பாற் புலவர்களுக்கு இணையாகப் பாடல்கள் பாடியுள்ளனர். அகவாழ்வு, புறவாழ்பு பற்றியும் பெண்களின் வீரவாழ்வு குறித்தும் சிறப்புறப் பாடியுள்ளனர். தன்மனம் போன போக்கில் பாடாமல் உவமை நயத்துடன் மிகச் சிறப்பாகப் பாடியதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

[1] உ.வே.சா. *புறநானூறு மூலமும் உரையும்.* உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

[2] உ.வே.சா. *குறுந்தொகை மூலமும் உரையும்.* உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

 Isbn Number: 978-93-91115-98-2

[3] உ.வே.சா. *நற்றிணை மூலமும் உரையும்.* உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

[4] உ.வே.சா. *அகநானூறு மூலமும் உரையும்.* உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

[5] இரா. சாரங்கபானி. *பரிபாடல் திறன்.* மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1972.

[6] புலியூர் கேசிகன். *சங்க இலக்கியம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 1985.

[7] க.சுப்பிரமணியன். *சங்க இலக்கியம் பன்முக வாசிப்பு.* பரிசில் புத்தக நிலையம், சென்னை, 2012.

[8] மு.சண்முகம் பிள்ளை. *சங்கதமிழர் வாழ்வியல்.* உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.



**Isbn Number: 978-93-91115-98-2**

# சங்ககாலத் தமிழரின் மட்கலத் தொழில்நுட்ப உத்திகள்

**முனைவர் ந. கார்த்தி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெய்ராம்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர் - 639003.
**ORCiD: https://orcid.org/0000-0002-4361-5887**
**DOI: 10.5281/zenodo.7998008**

## ஆய்வுச் சுருக்கம்

இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழ்ந்த பழந்தமிழர்கள் வாழ்வினைத் திறம்பட நடத்த தொழில்களை மேற்கொண்டனர். அவர்கள் மேற்கொண்ட தொழில்கள் அனைத்தும் கைத்தொழில்களாகவே இருந்தன. மனிதன் தொடக்ககாலம்முதல் படிப்படியாக அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் எடுத்துக்கொண்ட முயற்சியே தொழில்நுட்பமாக வளர்ந்துள்ளது. பழந்தமிழர்கள் களிமண்ணை கொண்டு வாழ்விற்குத் தேவையான பலவகையான பொருட்களை உருவாக்கும் தொழில்நுட்ப அறிவினைப் பெற்றிருந்தனர். அவ்வகையில் சங்ககாலத் தமிழர்கள் மட்கலத்தொழிலில் கொண்டிருந்த அறிவு வளர்ச்சியினையும், தொழில் நுட்பக் உத்திகளையும் வெளிக்கொணரும் வகையில் இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

 **Isbn Number: 978-93-91115-98-2**

**கலைச்சொற்கள்:** கைவினைத்தொழில், மட்கலம், மண்பாண்டங்கள், சக்கரம், களிமண், சூளை, வர்ணம், ஓவியம் தீட்டுதல், மட்பாண்ட ஓடுகள், தொழில்நுட்பம்.

**முன்னுரை**

மக்கள் வாழ்வில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் நாளும் தொழில் வளம் பெருகிப் புழங்குப் பொருள் வகையிலும், பயன்பாட்டிலும் புதுமை உருவாகி வருகின்றது. வாழ்க்கை முன்னேற்றம் கருதி நாம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளோம். எனினும், அன்றாட வாழ்வில் ஆடம்பரம் இல்லாத கலைநயமிக்க கைவினைப் பொருட்களான மண்பானை பாய், முறம், கூடை போன்ற பலவிதமான பொருட்களையும் பயன்படுத்தி வருகிறோம். சங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில்களில் கலை நுட்பம் மிகுந்த மட்கலத்தொழில் குறித்து இவ்வாய்வில் எடுத்தாளப்படுகின்றன.

**கை (வினை)த் தொழில்**

எளிய மூலப்பொருள்களைக் கொண்டும், ஒருவரின் செயல்திறனை ஆதாரமாகக் கொண்டும் செய்யப்படும் தொழில்களைக் கைத்தொழில்கள் எனலாம். கைத்தொழில்களே கைவினைக் கலைகள் என்றும் குறிப்பிடப்பெறுகின்றன. சங்க காலத்தில் மக்கள் மேற்கொண்ட தொழில்கள் அனைத்தும் எளிய


Isbn Number: 978-93-91115-98-2

கைத்தொழில்களாகவே அமைந்திருந்தின. சங்க கால மக்களின் வாழ்வியல் பொருளாதாரத்தில் கைவினைக் கலைகள் பெரும் பங்கினை வகித்துள்ளது. கைவினைக் கலைகள் இன்றளவும் ஒரு குறிப்பிட்ட இன மக்களால் செய்யப்படும் மரபு வழிப்பட்ட தொழிலாக உள்ளது.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க காலத் தமிழர்கள் இயற்கையாகக் கிடைத்த மண், பனை மற்றும் தென்னையோலைகளைக் கொண்டு வாழ்வியல் தேவைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்தனர். இயந்திரங்கள் போன்ற கருவிகளின் துணையின்றி தனது கைகளையே அடிப்படையாகக் கொண்டு தொழில்களை மேற்கொண்டனர். கைத்தொழில்களில் கற்பனை உணர்வும், கலைநுணுக்கமும் இணையும் பொழுது அவை கைவினைப் பொருட்களாக உருவாக்கப்படுகின்றன.

கைவினைப் பொருள் என்பது உருவாக்குபவரின் கற்பனைத்திறன், அழகுணர்ச்சி, தொழில் நுணுக்கம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடே கலை நுணுக்கம் நிறைந்த கைவினைப் பொருளாக மாறுவதற்கு பெரிதும் துணை புரிகின்றன. மனித வாழ்க்கையின் நம்பிக்கைகளையும், அழகு உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதாக கைவினைப் பொருட்கள் உள்ளன. சங்க காலத்தில் கைவினைத்தொழில் முக்கியத்துவம் பெற்று விளங்கியமைக்குக் காரணம், அக்கால


Isbn Number: 978-93-91115-98-2

மக்களிடையே இருந்த கலைப் பண்பாட்டுத் தாக்கமே அடிப்படையாகும்.

**மட்கலத் தொழில்**

மட்கலம் என்ற சொல் மண்ணால் உருவாக்கப்படும் பொருட்களைக் குறிக்கும். அவ்வாறு மண்ணால் பொருட்களை உருவாக்கும் இத்தொழில் மட்பாண்டத்தொழில் அல்லது மட்கலத் தொழில் எனப்படுகிறது. பழங்காலத்தில் இருந்தே மக்கள் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும், சாப்பிடவும் பயன்படுத்தியுள்ளனர். சங்க காலத்தில் உலோகப் பொருட்களின் பயன்பாடு குறைவாக இருந்ததால், மட்பாண்டப் பொருட்களின் பயன்பாடு பெருமளவில் காணப்பட்டுள்ளது. இதன் காரணமாகச் சங்க காலத்தில் மட்கலத் தொழிலானது சிறப்புற்றிருந்தது.

**மட்கலத் தொழிலின் தோற்றம்**

மட்பாண்டம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் தாவரக் குடுவைகள் மற்றும் பாறை இடுக்குகள் போன்றவற்றில் நீரை சேமித்துள்ளனர். பண்டைய மக்களின் வாழ்க்கை முறையினை அறிந்து கொள்வதற்கு மட்பாண்ட ஓடுகளும், மட்பாண்டப் பொருள்களும் பெரிதும் துணைபுரிகின்றன.


Isbn Number: 978-93-91115-98-2

> **மண்பாண்டங்கள் எளிதில் உடைந்து போகும் தன்மையுடையவை. தொல்பொருள் ஆராய்ச்சியாளருக்குப் பண்டைக்கால நாகரிகங்களின் சிறப்புக் கூறுகளை ஆராய்வதற்குச் சிறந்த சான்றுகளாகும். உடைந்து போன மட்பாண்டங்களின் துண்டுகள் சிறப்பாக கிடைக்கும் இடங்கள் புதைந்துபோன நகரங்களுக்கு அடையாளங்களாக உள்ளன. பழைய நாகரிகங்களின் காலம், கூறுகள், ஒன்றுக்கொன்றுள்ள ஒற்றுமை, வேற்றுமை ஆகியவை எல்லாம் இவ்வோட்டுத் துண்டுகளால் நிறுவப்படும் (கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப. 43)**

எனக் கலைக்களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அநாகரிக நிலையில் இருந்த மனிதன் நாகரிக நிலைக்கு மாறிச் சென்ற காலக்கட்டத்தில் மண்பாண்டங்கள் செய்யும் கலையை அறிந்து கொண்டிருக்கலாம் என்று எங்கல்ஸ் குறிப்பிடுகிறார். இது குறித்து அவர் மேலும் கூறுவதாவது,

> **மண்பாண்டங்கள் புகுந்த காலத்தில் இருந்து அநாகரிக நிலையின் கடைக்கட்டம் தொடங்குகிறது. கூடைகளும், மரக் கலயங்களும் நெருப்புப்படுவதால் எரிந்து போகாமல்**


Isbn Number: 978-93-91115-98-2

> **இருப்பதற்கு அவற்றின் மீது களிமண்ணைப் பூசியதில் இருந்து இந்தக்கலை தோன்றியிருக்கிறது. இதைப் பல இடங்களிலும் இப்படித்தான் நடந்திருக்கும். அப்படிக் களிமண்ணைப் பூசப்போய் உள்ளே கலயம் இல்லாமலே உருவமைந்த களிமண்ணை பாண்டமாகப் பயன்பட முடியும் என்பது சீக்கிரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது (சங்ககாலத் தமிழகத்தின் சமூக நிலை, ப.13)**

என்கிறார். சங்ககாலத்தில் மனிதனுக்குத் தேவையான சமையலறைப் பாத்திரங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை மண்ணால் செய்தார்கள். இவ்வகை மண்பாண்டங்கள் தமிழர்களின் மண் அறிவையையும், கைத்திறனையும் காட்டுகின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரை மட்கலத் தொழிலின் தொடக்க காலத்தை நிர்ணியிக்கும் காரணியாக ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு உள்ளது. ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் ஈடுபட்ட சத்தியமூர்த்தி என்பவர்,

> **ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள தடயங்கள் கிட்டதட்ட கி.மு. 1000 வரைக்கும் (3000 வருடங்கள்) முந்தியவை. இது தமிழர்களின் மிகவும் முற்கால நாகரிகம் என்பதுடன், மனிதன் வாழ்ந்த உலகின் தொன்மையான இடங்களில்**


**Isbn Number: 978-93-91115-98-2**

> **தமிழகமும் ஒன்று என்பதை உலகத்துக்குச் சொல்ல மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும், அங்கு கிடைத்த பானைகளின் வகைகள் ஆதிச்சநல்லூர் கலாச்சாரத்தின் தொழில்நுட்ப மேலாண்மையைக் காட்டுகின்றன என்பது முக்கியமானது" என்கிறார். இதன் வாயிலாகத் தமிழர்களின் மட்பாண்டக் கலையின் வயது ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என கொள்ளலாம். (வியக்கவைக்கும் தமிழர்அறிவியல், ப.249)**

## மட்கலத் தொழில் நுட்பங்கள்

சங்க காலத்தில் மட்கலத் தொழிலை மேற்கொண்டவர்கள் தொழிலில் மிகுந்த தேர்ச்சிப் பெற்றவர்களாகவும், கலைநுட்ப அறிவு கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர். மட்கலத் தொழிலில் ஈடுபட்டவர்களைச் சங்க இலக்கியங்கள் கலஞ்செய்கோ, வேட்கோ, வேட்கோச் சிறார் என்னும் பெயர்களில் வழங்குகின்றன. மட்பாண்டங்களை வனைவதற்குச் சக்கரங்களைப் பயன்படுத்தியுள்ளனர். மட்பாண்டங்களின் உறுதித் தன்மைக்கு அவற்றைச் சூளையிலிட்டுச் சுட்டுள்ளனர். மட்பாண்டங்களைக் கலை நுட்பம் மிகுந்தாக மாற்ற பலவகையான வர்ணங்களைப் பயன்படுத்தி அழகோவியங்களைத் தீட்டியுள்ளனர். இது


Isbn Number: 978-93-91115-98-2

போன்ற பல்வேறு விதமான தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொண்டு மட்பாண்டத் தொழிலை வளர்த்தெடுத்துள்ளனர்.

**சக்கரப் பயன்பாடு**

மண்பாண்டத் தொழில் என்பது மனித கரங்களைக் கொண்டு சக்கரத்தின் உதவியோடு படைக்கப்படும் கைவினைத் தொழிலாகும். சக்கரம் கண்டுபிடிப்பு மனித குல வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மொசெப்போத்தேமியர்கள் இதனைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தத் தொடங்கியதாக நம்பப்படுகிறது. சியமான்சென் குப்தா,

> **ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஹரப்பா நாகரிக அழிவுகளில் சக்கரம் பொருந்திய சுட்ட மண்பொம்மை வண்டி கிடைத்துள்ளது. இதிலிருந்து அந்த காலத்திற்கு முன்னரே சக்கரம் பரவலாக பழக்கத்தில் இருந்துள்ளதை அறிய முடிகிறது (அறிவியல் என்பது, ப. 19)**

என தொல்லியல் சான்று அடிப்படையில் சக்கரப் பயன்பாட்டின் காலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என நிறுவுகிறார். களிமண் தொகுதியைச் சக்கரத்தின் மீது சுழலவிட்டு கைகளைக் கொண்டு பொருட்களின் வடிவத்தை வரையறுத்து


Isbn Number: 978-93-91115-98-2

மட்பாண்டங்களை உருவாக்குவார்கள். மலைபடுகடாமில் நீரின் சுழலுக்கு உவமையாகக் குயவன் மட்கலம் செய்யும் சக்கரத்தின் சுழற்சி கூறப்படுகிறது. புறநானூற்றிலும் மட்கலம் செய்ய சக்கரம் பயன்படுத்தப்பட்ட தற்கான குறிப்பு காணப்படுகிறது. இதனை,

**வனைகலம் திகரியின் குமிழி சுழலும்**
**துணை செலல் தலைவாய் ஓவிறந்து வரிக்கும்**
**(மலை., 474 - 475)**

**வேட்கோச் சிறா அர் தேர்க் கால்வைத்த**
**பசு மண் குரூஉத் திரள் (புறம்., 32: 8-9)**

என்னும் பாடல் வரிகள் காட்டுகின்றன. சங்க இலக்கிய சான்றுகளின் அடிப்படையில் மட்கலத் தொழிலில் சக்கரம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

**மட்பாண்டங்கள் சுடுதல்**

மட்பாண்டங்கள் நெருப்பில் எரியாமலும், தண்ணீரில் கரையாமலும் இருக்கச் சூளைகளை அமைத்து மட்பாண்டங்களைச் சுட்டுப் பதப்படுத்த வேண்டும் என்பதனை உணர்ந்திருந்தனர். சங்க இலக்கியங்களில் மட்பாண்டங்களைத் தீயினால் சுட்டுப் பதப்படுத்தாவிட்டால் அவை நீரினால் கரைந்து பயனற்றுப் போய்விடும் என்பதனைப் பாடல்களின் வழி பதிவு செய்துள்ளனர். இதனைக் கீழ்வரும் பாடல் வரிகள் சுட்டுகின்றன.


Isbn Number: 978-93-91115-98-2

**பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல**
**உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி (குறு., 29: 2-3)**
**ஈர் மண் செய்கை நீர் படு பசுங்கலம்**
**பெரு மழைப் பெயற்கு ஏற்றாங்கு (நற்., 308: 8-9)**

பழந்தமிழர்கள் மட்பாண்டங்களைச் சூளையில் இட்டு அவற்றைச் சுட்டுப் பயன்படுத்தினர் என்பதை நிறுவதற்கு இரண்டு வகையான சான்றாதாரங்கள் உள்ளன. ஒன்று தொல்லியல் சான்றுகள் மற்றொன்று இலக்கியச் சான்றுகள் ஆகும். சங்க இலக்கியங்களில் காலத் தமிழர்களின் வாழ்வியல் களஞ்சியமான சங்க இலக்கியங்களில் மட்பாண்டங்களைச் சூளையிலிட்டு சுடப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. மட்பாண்டங்களைச் சுடும் சூளையிலிருந்து வெளிவரும் புகையின் தோற்றமானது மிகுந்த கருமை நிறமாகவும், மலையினை மறைக்கும் அளவிற்கும் காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன. இதனைக் கீழ்வரும் பாடல் வரிகளின் வழி அறியலாம்.

**கலம் செய்கோவே! கலம் செய்கோவே!**
**இருள் திணிந்தன்ன குரூஉத்திரள் பருஉப் புகை**
**இரு விசும்பின் ஊன்றுஞ் சூளை,**
**நனந்தலை மூதூர்க் கலம் செய்கோவே!**

**(புறம்., 228: 1-4)**

**இலங்குமலை புதைய வெண்மழை கவைஇ**

 Isbn Number: 978-93-91115-98-2

**கலம்சுடு புகையில் தோன்றும் நாட (அகம்., 301)**
**சுடுமண் தசும்பின் மத்தம் தின்ற**
**பிறவா வெண்ணெய் உருப்பு இடந்தன்ன**
**(நற்., 84: 6-7)**

மட்பாண்டங்களைச் சூளையில் சுடும் பொழுது சரியான கால அளவிளைப் பின்பற்ற வேண்டும். காலம் அதிகமாகவோ அல்லது குறைவாகவே இருந்தால் அவை பயன்படாமல் போய்விடும் என்பதனை உணர்ந்து மட்பாண்டங்களைச் சூளையில் சரியான வெப்பத்தில் சுட்டுப் பதப்படுத்திய முறையிலிருந்து தமிழர்கள் மட்பாண்டத் தொழிலில்கொண்டிருந்த தொழில் நுட்ப அறிவு வெளிப்படுகிறது.

**ஓவியம் தீட்டுதல்**

பூமியில் வெறும் மண்ணாக இருந்தக் களிமண்ணைச் சக்கரத்தின் துணைக் கொண்டு மட்பாண்டப் பொருட்களாக வடிவமைத்து, பின்னர் சூளையிலிட்டு சுட்டு வலிமைப்படுத்தப்படுகிறது. அதன் மீது கோடுகள், ஓவியங்கள் எழுத்துக்கள் போன்றவை பொறிக்கப்பட்டு கலைநுட்பம் மிகுந்த கலைப் பொருளாக உருமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொல்லியல் அகழ்வாய்வுகளில் கிடைக்கும் பொருட்களின் வழி அறிய முடிகின்றன.

தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன்,

 Isbn Number: 978-93-91115-98-2

> **சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தில் சாதாரண மக்களும் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதற்கு மண்பாண்டங்களில் கிடைக்கும் தமிழ் பிராமி எழுத்துக்கள் சான்றாக விளங்குகின்றன (வியக்கவைக்கும் தமிழர்அறிவியல், ப. 249)**

என்கிறார். மேலும்,

> **தென்னிந்தியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருங்கற் புதைவுகளில் கிடைத்துள்ள பனையோடுகளின் மேல் வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் சிந்துவெளி ஏடுகளின் மேல் வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் ஒரே விதமாகக்காணப்படுகின்றன (தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப. 43)**

என்கிறார். மேற்கூறப்பட்டுள்ள தொல்லியல் சான்றுகளில் அடிப்படையில் மட்கலங்களின் மீது ஓவியங்கள் மற்றும் எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன என்பது உறுதியாகிறது.

மட்கலங்களைச் சுடும்போது சூளையில் உள்ள சூட்டின் அடிப்படையில் நிறங்கள் அமைகின்றன. நல்ல சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு நிறம், பழுப்பு நிறம் கலந்த மஞ்சள், பழுப்பு நிறம் போன்ற நிறங்கள் சூட்டின் தன்மையால் காணப்படுகின்றன. தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டஅகழாய்வுகளில் கறுப்பு, சிவப்பு

 **Isbn Number: 978-93-91115-98-2**

மட்கலங்கள் கிடைத்துள்ளன. இலக்கியங்களைப் பொறுத்தவரைசங்க இலக்கியங்களில் மட்கலங்கள் சிவப்பு நிறத்தில் காணப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதனை,

**புதுக் கலத்தன்ன கனிய ஆலம் (ஐங்., 303:10)**

**கவிசெந் தாழிக் குவிபுறத்து இருந்த (புறம்., 238:1)**

என்னும் பாடலடிகள் நிறுவுகின்றன. புது மட்கலத்திற்கு ஆலமரத்தின் பழங்களை ஒப்புமைப் படுத்துவதில் இருந்தும், 'கவி செந்தாழி" என்றதன் வாயிலாகவும் மட்கலங்கள் செந்நிறத்தில் (சிவப்பு) காணப்பட்டது என்பது புலனாகிறது.

**முடிவுரை**

மட்கலம் என்ற சொல் மண்ணால் உருவாக்கப்படும் பொருட்களைக் குறிக்கும். மட்பாண்டங்கள் எளிதில் உடைந்து போகும் தனிமையுடையாதலின் அவற்றைத் திறம்படப் பயன்படுத்தியுள்ளனர். மட்பாண்டங்கள் தண்ணீர், உணவுப் பொருட்கள் முதலியவற்றைச் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும் என பல நிலைகளில் பயன்பாட்டில் இருந்துள்ளமையை சங்க இலக்கியங்களின் துணைக்கொண்டு அறிய முடிகிறது. இது தமிழர்களின் மண் அறிவினையும், கைத்திறனையும் வெளிப்படுத்துகின்றன. சங்க காலத்தில் மட்கலத்


Isbn Number: 978-93-91115-98-2

தொழிலில் சக்கரம் பயன்படுத்துதல், பொருட்களின் உறுதித் தன்மைக்காகச் சூளையிலிட்டு சுடுதல், வர்ணம் பூசி அழகு படுத்துதல் போன்ற தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

**துணைநூல்கள்**


[1] அ.மா.பரிமணம், கு.வெ.பாலசுப்பிரமணியம் (ப.ஆ). *சங்க இலக்கியம் (எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள்).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு – 2007.

[2] கே.கே.பிள்ளை. *தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -13, பதிப்பு – 2008.

[3] வெ.பெருமாள்சாமி. *சங்க காலத் தமிழகத்தின்சமூக நிலை.* பாரதி புத்தகாலயம், சென்னை -18, பதிப்பு - 2007.

[4] மாத்தளை சோமு. *வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்.* உதகம், திருச்சி –3, பதிப்பு - 2005.

[5] அ. வள்ளிநாயகம், மு. இராஜேந்திரன் (மொ.ஆ). *அறிவியல் என்பது.* தமிழ்நாடு அறிவியல் இயக்கம், சென்னை, பதிப்பு– 2005.

[6] *கலைக்களஞ்சியம், தொகுதி 8.* தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, பதிப்பு –1961.


 **Isbn Number: 978-93-91115-98-2**

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.



**Isbn Number: 978-93-91115-98-2**

# வைணவ இலக்கியங்களில் அஃறிணைகளின் தூது

**முனைவர் நா. குமாரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி, வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164**
**DOI: 10.5281/zenodo.7998047**

## ஆய்வுச்சுருக்கம்

*பக்தியிலக்கியக் காலத்தில் சிற்றிலக்கியங்கள் பரவலாகத் தோன்ற ஆரம்பித்தன. கைக்கிளைத் துறையும், பாடாண் திணையும் ஒருங்கமைந்து பக்தியிலக்கியப் பாடல்கள் அகப்பொருள் தழுவி அமைந்து நாயக நாயகி பாவனையுள் அமைந்துள்ளன. இவ்வகையில் உலா, தூது, மடல், குறவஞ்சி, கோவை, பாவை முதலியனத் தோன்றின. அவற்றுள் வைணவ இலக்கியங்களில் தூதின் செல்வாக்கு எவ்வாறு இருந்துள்ளது என்பதையும் தூதுக்கு உரியவைகளாக எவற்றையெல்லாம் கருதினார்கள் என்பதையும் அவற்றை எதற்காக எப்பேர்ப்பட்ட சூழலில் தூது அனுப்பினார்கள் என்பதையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** விருந்து, தூது, நாரை, திருத்துழாய், புள். அஃறிணை.

## முன்னுரை

பக்தியிலக்கியக் காலத்தில் சிற்றிலக்கியங்கள் பரவலாகத் தோன்ற ஆரம்பித்தன. கைக்கிளைத் துறையும், பாடாண் திணையும் ஒருங்கமைந்து பக்தியிலக்கியப் பாடல்கள் அகப்பொருள் தழுவி அமைந்து நாயக நாயகி பாவனையுள் அமைந்துள்ளன. இவ்வகையில் உலா, தூது, மடல், குறவஞ்சி, கோவை, பாவை முதலியனத் தோன்றின. அவற்றுள் வைணவ இலக்கியங்களில் தூதின் செல்வாக்கு எவ்வாறு இருந்துள்ளது என்பதையும் தூதுக்கு உரியவைகளாக எவற்றையெல்லாம் கருதினார்கள் என்பதையும் அவற்றை எதற்காக எப்பேர்ப்பட்ட சூழலில் தூது அனுப்பினார்கள் என்பதையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தூது

ஒருவர் தமது கருத்தை மற்றொருவருக்கு தெரிவிப்பதற்காக இடையில் ஒருவரை தன் சார்பாக நியமித்து அனுப்புவது தூது ஆகும். அதாவது, தூது என்பது ஒருவரது செய்தியைப் பிறிதொருவருக்கு உரைக்கும் தன்மையாகும். இலக்கியத்தில் அகத்தூது, புறத்தூது என இருவகை உண்டு. இதனைப் பரிமேலழகர், **சந்தி விக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடைச் செல்வாரது தன்மை (திருக்குறள், பரிலேழகர்உரை, ப. 289)** என்றும்,

 Isbn Number: 978-93-91115-98-2

**தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான்எனத் தூது இருவகைப்படும். (மேலது)** எனவும் உரைக்கின்றார்.

**அஃறிணை தூது**

அஃறிணையைத் தூது செல்லுமாறு வேண்டும் வழக்கம் தலைவன், தலைவி இடையே உண்டு. இது பெரும்பாலும் பிரிவுத்துன்பம் மிகுந்த நிலையில் நிகழும். தலைவர் தலைவியைப் பிரித்த நிலையில் பிரிவுத்துன்பம் அதிகமான நிலையில், தன் காதல் மிகுதியையும், ஆற்றாமையையும் அஃறிணைப் பொருள்களிடம் கூறித் தூது செல்லுமாறு தலைவி வேண்டுவாள். இதை "காமமிக்க கழிபடர் கிளவி" என இலக்கண ஆசிரியர்கள் கூறுகின்றனர். அஃறிணைப் பொருள்களைத் தூது அனுப்புவதைத் தொல்காப்பியர் வழுவமைதியாகக் கூறுகின்றார்.

**சொல்லா மரபின் அவற்றோடு கெழீஇச்**
**செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்**
**(தொல். பொருள்., நூ. 2)**

எனும் நூற்பாவில் சொல்லா மரபின ஆவன – புள்ளும், மாவும், மரனும், கடலும், கானலும் முதலியெனவும், செய்ய மரபாவன தூதாச் சேறலும், வருதலும், உளபோலக் கூறும் அவைபோல்வன பிறவும் என இளம்பூரணர் மேல் கூறிய நூற்பாக்கு விளக்கம் கூறியுள்ளார்.


Isbn Number: 978-93-91115-98-2

**தூதாகச் செல்லக்கூடியன**

தூது செல்லக்கூடியனவற்றை,

**இயம்புகின்ற காலத்து எகினம் மயில் கிள்ளை**
**பயம்பெறு மேகம் பூவை பாங்கி – நயந்த குயில்**
**பேதைநெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்தும்**
**தூதுரைத்து வாங்கும் தொடை**

**(இரத்தினச்சுருக்கம், நூ. 7)**

என இரத்தினச்சுருக்கம் வரிசைப் படுத்துகிறது. காலப் போக்கில் பணம், தமிழ், புகையிலை, நாரை, நெல், மான், செருப்பு என்பனத் தூதுப்பொருளாக இடம்பெறத் தொடங்கின. நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் தத்துவப் பாடல்கள் போலவே காதலை மையமாக வைத்து இயற்றப்பட்ட பக்திப் பாடல்களும் உள்ளன. வைணவ இலக்கியங்களில் இறைவன் மீது பெருங்காதல் கொண்டு தன்னையே பெண்ணாகப் பாவித்து திருமாலாகிய தலைவனிடம் அஃறிணைப் பொருள்களைத் தூதாக அனுப்புவதும். அவற்றுள் நாரை, குயில், அன்னம், அன்றில், குருகு, வண்டு, கிளி, பூவை இறைவனிம் தூதுப்பொருளாக அனுப்புவதும் காணக்கிடக்கின்றன. நாச்சியார் திருமொழியில் மேகமும், குயிலும் தூது செல்கின்றன. எட்டாந்திருமொழியாகிய விண்ணிலே மேலாப்பு மேகத்தைத் தூது விடுவதாக அமைகின்றது. ஆண்டாள் மேகங்களை நோக்கித் தன்


Isbn Number: 978-93-91115-98-2

ஆசையை எம்பெருமானிடம் சென்று அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகிறாள். விண்ணிலே மேலாப்பு என்று தொடங்கும் பத்துப்பாடல்களும் காதல் கனிந்த அவளுடைய ஆற்றாமைத் துன்பத்தினைக் காட்டுகின்றன. எம்பெருமான் பற்றிய செய்திகள் ஏதாகிலும் உண்டா என மேகத்திடம் வினவுகிறாள் ஆண்டாள். இதனை,

**மின்னாகத் தெழுகின்ற மேகங்காள் வேங்கடத்துத்**
**தன்னாகத் திருமங்கை தங்கியசீர் மார்வற்கு**
**என்னாகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும்**
**பொன்னாகம் ஏல்குதற்கென் புரிவுடைமை**
**செப்புமினே (நாச்சியார் திருமொழி, பா. 77)**

என்ற பாடலில் தன் மனதில் தோன்றிய எண்ணத்தை அப்படியே கொட்டிவிடும் அன்பினைக் காணலாம். மேகங்களை நோக்கித் தன் மார்பில் உள்ள இளநகில்களை எம்பெருமான் இடைவிடாது அணைக்க வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டதாகக் கூற வேண்டித் தூதுவிடுகின்றான்.

இரணியன் என்பவனின் உடலைப்பிளந்த பெருமான் தன்னிடத்துக் கொள்ளைக் கொண்டுபோன கைவளைகளைத் திருப்பிக் கொடுப்பதாக இருந்தால் தன் துன்பத்தை அவரிடம் தெரிவிக்க வேண்டுகிறாள். இதனை,


**Isbn Number: 978-93-91115-98-2**

**…என்னை**

**நலங்கொண்ட நாரணற்கென் நடலைநோய்**

**(மேலது, பா. 79)**

என்று உணர்ச்சி வயப்பட்டுப் பித்தாகி நிற்கின்றாள். திருவேங்கடமுடையானது திருவடியில் தன் விண்ணப்பத்தைச் சொல்ல வேண்டும் என உள்ளங்கசிந்து இரங்கி வேண்டுகிறாள். குயில்பாட்டு பத்து தூதிற்கு இலக்கணமாய்த் திகழ்கின்றன. குயில்பாட்டில் நயந்தகுயில் எனச் சிறப்பித்ததினால் அதனது தகுதி உயருகிறது. மேலும் ஆண்டாள் தனது பக்திப் பெருக்கினைக் குயிலிடம் கூறித் தூது செல்லச் சொல்கிறாள். எனவே இப்பதிகம் குயிற்பத்து எனப்பெயர் பெறுகிறது.

**தூதின் இலக்கணம்**

தமிழ் இலக்கியங்களில் சங்க காலத்திற்குப் பிறகு தோன்றியவை சிற்றிலக்கியங்கள் ஆகும். இவை சங்க காலத்திலேயே முளைவிட்டு, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் மெல்ல மெல்லத் தழைத்து வளர்ச்சிபெற்றன. இதனை, **குழுவி மருங்கினும் கிழவ தாகும் (தொல்.பொருள்., நூ. 1030)** எனவும், **ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப (மேலது, 1031)** எனவும்,

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**


Isbn Number: 978-93-91115-98-2

**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்**
**(மேலது, நூ. 1037)**

எனவும் கூறுவன தொல்காப்பியர் கூற்றுக்களாகும். பேரிலக்கிய மரபு காலப்போக்கில் மாற்றம் பெற்று தனித்தனிச் சிற்றிலக்கியங்களாக, முறையே பிள்ளைதமிழ், உலா, ஆற்றுப்படை, தூது எனவும் இன்னும் பிற சிற்றிலக்கியங்களாகவும் உருப்பெற்றன.

**விருந்தே தானும் புகுவது கிளந்த யாப்பின் மேற்றே (மேலது, 551)** என்ற சூத்திரத்தில் வனப்பு எட்டனுள் ஒன்றான விருந்து என்பது காலத்துக்கு ஏற்றவாறு பிறக்க இருக்கும் புதுவகை இலக்கியங்களுள் அடங்கும். ‘விருந்து’ என்பது புலவர்கள் தாம் வேண்டியவாறு தனித்தும் தொடர்ந்தும் வரப் புதிதாகப் பாடப்படுவதைக் குறிக்கும். தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று தூது ஆகும். சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணங்கள் கூறும் பன்னிருபாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் ஆகிய நூல்கள் தொண்ணூற்றாறு என வரையறைக் கூறவில்லை. தொண்ணூற்றாறு என்னும் வரையறைக்குட்பட்ட சிற்றிலக்கியங்களுக்கே சில பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்படவில்லை.


Isbn Number: 978-93-91115-98-2

வரையறைக்கு உட்படாத பிற சிற்றிலக்கியங்களில் சிலவற்றிற்குச் சில பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது.

தூது இலக்கியம், கலிப்பாவில் அமைதல் வேண்டும் என்பதை

**பயில் தரும் கலிவெண்பா பாவினாலே**
**உயர்திணைப் பொருளையும், அஃறிணைப்**
**பொருளையும்,**
**சந்தியின் விடுத்தல் முந்தூது எனப்**
**பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே**
**(இலக்கண விளக்கம், நூ. 874)**

என்னும் பாடல் 16-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. தூது இலக்கியங்களுக்கு “கலிவெண்பா” யாப்பை வரையறுத்து உள்ளது. “கலிவெண்பா” யாப்பிலேயே பெரும் பகுதியான தூது நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. மேலும், இரண்டு அடிகள் ஒரு கண்ணிகள் எனப்படும்.

**தலைவனின் அடையாளம்**

தலைவி புகழ்ந்து கூறியதாலும், தூது செல்வதால் கிடைக்கும் பயன்களைக் கொண்டு தூது செல்ல ஒருப்பட்ட தூது பொருளிடம் தலைவி தலைவனது அடையாளங்களைக் கூறுகிறாள்.

**கடலாழி நீர்தோற்றி யதனுள்ளே கண்வளரும்**
**அடலாழி யம்மானைக் (நாலா. திவ்., பா. 2941)**

 Isbn Number: 978-93-91115-98-2

என்றும்,

**கருவண்ணம் செய்யவாய் செய்யகண் செய்யகை செய்யகால்**

**செருவொண் சக்கரம் சங்கடை யாளம்**

**(மேலது, பா. 3457)**

என்று அடையாளங்களைக் கூறித் தூது விடுக்கிறாள்.

## தூது கூறும் இடம்

தலைவனது அடையாளங்களை எடுத்துக்கூறிய தலைவிக்குத் தூது செல்வது சரியான இடத்தில் சரியான நேரத்தில், தூதினைக் கூறுமோ கூறாதோ என்று ஓர் ஐயம் தோன்றிவிடுகிறது. அதனால் எந்த இடத்தில் தூதினைக் கூறவேண்டும் என்பதையும் தலைவியே கூறினாள். **மாதரைத்தம் மார்வகத்தே வைத்தார்க்கு (மேலது, பா. 3744)** என்று திருமால் பிராட்டியுடன் இருக்கும் நிலையைக் கூறுகிறாள். திருமால் தன்னை ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும் பிராட்டியின் அருளால் தான் திருமாலுடன் இணைய முடியும் என்ற எண்ணத்தின் விளைவே இஃது எனலாம்.

## தூது செல்லும் முறை

பிராட்டியோடு திருமால் இருக்கும் நிலையில் அவை தூதுரைக்கும் முறை மறந்து ஏதேனும் தவறுதலாகப் பேசிவிட்டால் என்ன செய்வது என்று


Isbn Number: 978-93-91115-98-2

எண்ணினாள். ஆகவே, அவை எங்ஙனம் தூது சொல்ல வேண்டும் என்பதையும் கூறி அனுப்புகிறாள்.

**கைகள் கூப்பிச் சொல்லீர் விளையாட்டியேன்**
**காதன்மையே (மேலது, பா. 3343)**

**பாதம் கைதொழுது பணியீர் அடியேன் திறமே**
**(மேலது, பா. 3344)**

**இறங்கி நீர் தொழுது பணியீர் அடியேன் இடரே"**
**(மேலது, பா. 3345)**

என்று பணிவுடன் கரங்கள் கூப்பிப் பாதம் தொழுது தன்னுடைய தூதினைக் கூறவேண்டும் என்று கூறுகிறாள்.

**தூதின் வழி கூறப் பெரும் பொருள்**

தலைவி தலைவனிடம் கூறவேண்டிய தூது செய்தியைக் குறிப்பிடுகிறாள். தலைவனைப் பிரிந்து வாடும் தன்னுடைய நிலையினையும் தலைவன்மேல் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பையும் தெரிவிக்கும் படிக் கூறுகின்றாள். தன்னைப் பற்றிக் கூறும்போது, **மல்கு நீர்க் கண்ணோடு (மேலது, பா. 3415)** என்று தலைவனைப் பிரிந்தமையால், பிரிந்த துன்பத்தால் விழிகள் கண்ணீர் நிறைந்திருக்கும் நிலையைக் கூறுகிறாள். மேலும், **உடலம் நைந்து ஒருத்தி உருகும் என்று உணர்த்துமினே (மேலது, பா. 3346)** என்று மணம் வாடி வருந்தும் நிலையைச் சுட்டுகிறாள்.


Isbn Number: 978-93-91115-98-2

**நாரை**

நம்மாழ்வார் தம்மை நாயகியாக நினைத்து கற்பனை செய்து கொண்டு நாரையும், சேவலையும் இறைவனிடம் தூதுகளாக அனுப்புகின்றார்,

**அஞ்சிறைய மடநாராய்! அளியத்தாய்! நீயும் நின்**
**அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென்**
**றெனக்கருளி**
**வெஞ்சிறைப்புள் ளுயர்த்தாற்கென் விடுதூதாய்ச்**
**சென்றக்கால்**
**வன்சிறையில் அவன்வைக்கில் வைப்புண்டா**
**லென்செய்யுமோ (மேலது, பா. 2932)**

என்ற அடிகள் அழகிய சிறகுகளை உடைய நாரையே, நீயும் உனது சேவலும் எனக்குத் தூதாகத் திருமாலிடம் சென்று, இங்கு நான் படும் துயரத்தைத் தெரிவிப்பாயாக என்று பாடுகின்றார். ஒரு வேளை எம்பெருமானால் நீ சிறைபிடிக்கப்பட்டால் என்ன கெடுதல் உண்டாகும் என்று நினைத்துக் கவலைப்படுவதையும் பாடல் வழி உணர்த்துகின்றார்.

தூய்மையான சிறகுகளை உடையவை, உள்ளம் புறமும் குற்றம் அற்றிருப்பவை. தன் துணையைப் பிரிந்து அறியாத தன்மையுடையவை. தலைவி நாரையை நோக்கி, இவ்வுலகை உண்டு காப்பாற்றிய என் தலைவனைக் கண்டு திருவடி தொழுது என் நிலையைச்


Isbn Number: 978-93-91115-98-2

சொல். நான் சொன்ன வார்த்தைகளைக் கூறி, பதில் கேட்டுவந்து சொல்லுங்கள். இந்த உதவியை நீ செய்தால் உன் கால்களை என் தலைமேல் வைத்துப் போற்றுவேன்? என்று கூறுவதை,

**எங்கானல் அகம்கழிவாய் இரைதேர்ந்திங்கு**
**இனிதமரும்**
**செங்கால மடநாராய்! திருமூழிக் களத் துறையும்**
**கொங்கார்பூந் துழாய்முடியெங் குடக்கூத்தர்க்**
**கென்தூதாய்**
**நும்கால்க ளென்தலைமேல் கெழுமீரோ,**
**நுமரோடே (மேலது, பா. 3739)**

என்கிற பாடல் வழி அறியலாம்.

**குயில்**

செந்தாமரை மலர் போன்ற கண்களை உடைய பெருமானிடத்தில் நான் கூறுவதைத் தூதாகச் சென்று உரைப்பாயாக எனப் பாடுகின்றார்.

**என் செய்ய தாமரைக்கண் பெருமானார்க்கு என்**
**தூதாய்**
**என் செய்யும் உரைத்தக்கால் இனக்குயில்காள்**
**நீரலிரே (மேலது, பா. 2816)**

என்ற பாடலடிகளில் முற்பிறவியில் நான் செய்த பாவத்தினால் பெருமான் திருவடியின் கீழ் குற்றேவல் செய்ய இயலாத நான், அவ்விடத்தை விட்டு இன்னும்


Isbn Number: 978-93-91115-98-2

என்னை விலக்கியிருப்பது முறையா, கேளுங்கள் என்று கூறி குயிலைத் தூதாக அனுப்புகின்றார்.

**அன்னம்**

மெல்லிய நடையை உடைய அன்னமே, நீங்கள் எனக்காக திருமாலிடம் தூது செல்லுங்கள் என்று பாடுவதை,

**விதியினால் பெடை மணக்கும் மென்னடைய**
**அன்னங்காள்**
**மதியினால் குறள்மாணாய் உலகிரந்த கள்வர்க்கு**
**(மேலது, பா. 2934)**

அறிவில்லாத பெண் ஒருத்தி உன்னையே நினைத்து புத்தியில்லாமல் அறிவிழந்து வருகிறாள் எனத் திருமாலிடம் எடுத்துரைப்பாயாக என்று அன்னத்தைத் தூதாக அனுப்புகிறார்.

அன்னம் நீரையும் பாலையும் பிரிக்கும் இயல்புடையது. சேற்றுநீரில் பொருந்தாது. பெண்களின் நடையழகைக் கற்கப்போகும். தாமரையை இருப்பிடமாகக் கொள்ளும். இப்பண்புடைய அன்னத்தை நோக்கி பராங்குசநாயகி, என் நெஞ்சத்தை நீங்கள் பார்த்தால் என்னை அடையாளம் சொல்லி அவனிடம், இன்னமும் நீ போகவில்லையா? இது தகுமா? என்று கேளுங்கள் உன்னை நினைத்து உருகி உடல் மெலிகின்றாள் ஒருத்தி. திருத்துழாய் மாலை அணிந்துள்ள


Isbn Number: 978-93-91115-98-2

எம்பிரானை என் சார்பாக உங்கள் கைகளால் தொழுங்கள். கொடிய பாவம் செய்த அடியேனின் நிலையைத் தனியாக இருக்கும்போது எடுத்துச் சொல்லுங்கள். உங்கள்மீது காதல்கொண்டு உடல் மெலிந்து பசலை கொண்டிருக்கிறாள். அவளுக்குத் தரிசனம் அருளுங்கள். என் ஜீவன் அவன் நினைவினால் வருத்தி முடிந்துபோய் விடக்கூடும். இப்படி என்னைத் தவிக்க விடுவது நியாயமல்ல என்று அவனிடம் போய் எடுத்துச்சொல்லுங்கள் என்று பலவாறு வேண்டி தூது அனுப்புகிறாள். அப்பாடலில் ஒன்று

**அடிகள் கைதொழுது, அலர்மேல் அசையும் அன்னங்காள்,**
**விடிவை சங்கொலிக்கும் திருவண் வண்டூர் ருரையும்**
**கரியமாயன் தன்னைக் கண்ணனை, நெடுமாலைக் கண்டு**
**கொடிய வல்வினையேன் திறம்கூறுமின்; வேறுகொண்டே. (மேலது, பா. 3342)**

என்பதாகும்.

**அன்றில்**

நீல நிறமான தோற்றத்தை உடைய அன்றில் பறவையே! நான் அவர் மீது வைத்துள்ள காதலால் என் உடல் மெலிந்து வாடும் தன்மையை கண்டு என் மீது

 Isbn Number: 978-93-91115-98-2

இரக்கம் கொள்ளாமல் இருக்கின்றாரே, நீங்களாவது சென்று இறைவனிடம் கூறுவீர்களா என்பதை,

**என்நீர்மை கண்டு இரங்கி இது தகாதுஎன்னாத**
**என் நீலமுகில் வண்ணற்கு என் சொல்லியான்**
**சொல்லுகேனோ (மேலது, 2827)**

எனும் பாடலடியில் இரக்கமில்லாமல் என்னைக் கைவிட்டால் நல்ல உயிரானது தலைவனின் பொருட்டு அவரிடத்தில் தங்கியிருக்காது என்று ஒரு வார்த்தை தலைவனிடம் சென்று கூறுவதைச் செய்வீர்களா என்று பாடுகிறார்.

**குருகு**

நீர் நிறைந்த வயலில் இரையாகிய மீன்களைத் தேடுகின்ற குருகே! எம்பெருமான் உலகத்தையே அருள் கொண்டு காக்கின்றார். ஆனால் என் ஒருத்திக்கு மட்டும் ஏன் அருள் புரிய முடியாதா, கேளுங்கள் என்று பாடுவதை,

**மல்குநீர்ப் புனல்படப்பை இரைதேர்வண்**
**சிறுகுறுகே!**
**மல்குநீர்க் கண்ணேற்கோர் வாசகங்கொண்**
**டருளாயே! (மேலது, 2936)**

உலகத்தையே காக்கின்றவர் என் ஒருத்தியைக் காக்காமல் விட்டுவிட்டால் அவர் பெயர் கெட்டுவிடுமோ என்று நீர் நிறைந்த கண்களோடு உன்னையே நினைத்து ஒரு பெண் புலம்பிக் கொண்டிருக்கிறாள் என்பதை, இறைவனிடம்


Isbn Number: 978-93-91115-98-2

சென்று கூறமாட்டாயா! எனக் குருகிடம் எடுத்துரைக்கின்றார்.

தூய்மையான சிறகுகளை உடைய குருகினங்களை நோக்கி, சக்கரத்தைக் கையில் தரித்திருக்கும் பெருமானிடம் என் காதலைப் பணிவுடன் கைகூப்பித் தெரிவியுங்கள். உம்மையல்லாமல் வேறு கதியற்றவளாக இருக்கிறாள். மற்ற எதையும் பார்க்க முடியாமல் வேதனைப்படுகிறாள். எம்பெருமானாலேயே நான் கைவிடப்பட்டால் என்ன செய்ய முடியும்? உறவினர்களின் பழிப்பால் இழிவடைந்திருக்கின்றேன். அவன் கொடிய பாவியான என் தோள்களைச் சேராமல் பிரிந்திருக்கின்றான். ஒளிவீசும் கைவளையமும் பொருந்தாமல் நழுவுகின்றன. இது நியாயமா? என்றும், அவனிடம் என் நெஞ்சம் பறிபோனதை விளக்கிச் சொல்லுங்கள், என் இதயத்தை எடுத்துச் சென்றவர் பதிலுக்குத் தன் இதயத்தை இங்கு விடாமல் அகன்றது தகுதியற்ற செயல் என்று பலவாறு புலம்புகிறாள் பராங்குசநாயகி, அப்புலம்பல்களில் ஒன்று வருமாறு,

**பூந்துழாய் முடியார்க்கு, பொன் ஆழிக் கையாருக்கு,**
**ஏந்துநீர் இளங்குருகே! திருமூழிக் களத்தாருக்கு**
**ஏந்துபூண் முலைபயந்து, என் இணைமலர்க்கண் நீர்ததும்ப**

 Isbn Number: 978-93-91115-98-2

**தாம்தம்மைக் கொண்டகல்தல் தகவன்றென்**
**றுரையீரே (மேலது, 3747)**

**வண்டு**

வருத்தத்தை நீக்கக் கூடிய அழகிய வரி வண்டே! தலைவன் என்னை வெறுக்கும்படி நான் என்ன தவறு செய்தேன். உலகுக்கெல்லாம் அருள் புரிபவர் எனக்கு அருள் புரியாமல் இருக்க காரணமென்ன என்பதை,

**அருள் ஆழி அம்மானைக் கண்டகால் இது**
**சொல்லி**

**அருள் ஆழி வரிவண்டே! யாமும்என்**
**பிழைத்தோமே (மேலது, 2829)**

எனத் தலைவியானவள் என்னுடைய உயிர் பிரிவதற்கு முன்பாக தன்னுடைய வாகனமான கருடப் பறவையினையாவது உலா வரும் வீதியில் செலுத்துவாரா என்று தலைவனிடம் கூறிவிட்டு வாருங்கள் என்று தலைவி வண்டினைத் தூதாக அனுப்புகின்றாள். தேனை உணவாக உண்ணும் தாமரை மலரை நாடும். அதை விட்டுப் பின் முள்ளிப்பூவைக் கண்ணாலும் பாராது. இத்தன்மையை உடைய வண்டை நோக்கி பராங்குசநாயகி, உம்மை எண்ணி ஒருத்தி உயிர்வாழ்கிறாள். விரக வேதனையில் என் தேகம் மெலிந்து, என் ஒளிவீசும் வளையல்களும் மேகலையும் கழன்று விழுவதைத் தூதாகச் சென்று எடுத்துரைப்பீர்.


Isbn Number: 978-93-91115-98-2

பசுவானின் திருத்துழாய் மாலையிலுள்ள மதுவை உண்ட வாயுடன் ஓடிவந்து என் கூந்தலின் மேல் உள்ள ஒளிவீசும் சிறப்பான மலர்களின் மேல் ஊதமாட்டீர்களா? எனக்காகத் தூது சென்று என் வேதனையை எடுத்துச் சொல்லுங்கள் என்று மன்றாடுவதை,

**தூதுரைத்தல் செப்புமின்கள் தூமொழவாய்**
**வண்டினங்காள்**
**போதிரைத்து மதுநுகரும் பொழில் மூழிக்**
**களத்துறையும்**
**மாதரைத்தம் மார்வகத்தே வைத்தார்க்கு என்வாய்**
**மாற்றம்**
**தூதுரைத்தல் செப்புதிரேல் சுடர் வளையும்**
**கலையுமே (மேலது, 3852)**

என்ற பாடல் நமக்குப் பகர்கிறது.

**கிளி**

பனியாகிய வாடைக்காற்று என்னை மேன்மேலும் துன்புறுத்துவது போல, என்னுடைய குற்றங்களையே நினைத்து திருமால் எனக்கு அருள் புரியாமல் இருக்கின்றார். அருள் புரியுமாறு கிளியைத் தூதாக அனுப்புவதை,

**என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்**
**கென்றொருவாய்சொல்**
**என்பிழைக்கும் இளங்கிளியே யான்வளர்த்த**


Isbn Number: 978-93-91115-98-2

**நீயலையே (மேலது, 2938)**

திருமாலின் பெருமைக்கு நான் ஏதாவது தீங்கு விளைவித்தேனோ? என்ன குற்றம் செய்தேன். நீ சென்று கேட்கக்கூடாதா, அப்படிக் கேட்பதனால் உனக்கு ஏதாவது தீங்கு விளையுமோ! இளங்கிளியே நான் வளர்த்த கிளி அல்லவா நீ! என்று கிளியை எம்பெருமானிடம் தூதுவிடுகின்றார்.

வளர்க்கின்றவர் கூறுவதை அப்படியே சொல்வன. வளர்த்தாரிடத்து அன்பு கொள்ளும். மற்றவர் பார்த்து வியக்கும் சிறப்புடையன. இச்சிறப்பிற்குரியக் கிளியைப் பெருமானிடம் தூது விடுகின்றார் ஆழ்வார். மல்லர்களை வென்ற தோள்களையுடையவனை திருவேங்கட மலையில் அருள்புரிபவனை இங்கே வரும்படி சொல்ல வேண்டும். சொல்வாய் பைங்கிளியே காதலில் வாடும் எனக்காகப் பரிந்து பேசுங்கள். எம்பெருமானைச் சந்தித்து என் உண்மையான காதலை எடுத்துரைத்து, நல்ல பதிலோடு விரைந்தோடி வாருங்கள் இப்படி இப்பெண்ணை நம்ப வைத்துப் பிரிந்து செல்வது உமக்குத் தகுமோ? என்றும் கேட்டு வாருங்கள் என்று வேண்டுகிறாள் பராங்குசநாயகி.

**நுங்கட்கு யான் உரைக்கேன் வம்மின்**

**யான்வளர்த்த கிளிகாள்!**

**வெங்கட் புள்ளூர்ந்து வந்து வினையேனை**


Isbn Number: 978-93-91115-98-2

**நெங்சம் கவர்ந்த**
**செங்கட் கருமுகிலைச் செய்யவாய்ச் செழுங்**
**கற்பகத்தை**
**எங்குச்சென் றாகிலும் கண்டு இதுவோ தக்கவாறு**
**என்மினே! (மேலது, 3424)**

**கொக்கு**

தூய்மையான சிறகுகளை உடையவை. மீன்கவரச் சலியாது கரையில் காத்துநிற்கும் இயல்புடையவை. தன் குஞ்சுகளுக்குத் தன் வாயாலே உணவு ஊட்டும் அன்புடையவை. தலைவி கொக்குக் கூட்டங்களை நோக்கி, அவனின் வடிவழகு எங்கள் நெஞ்சை இழக்கச் செய்துவிட்டன. இப்படிப்பட்ட எங்களுக்கு அவனை அடையத் தகுதியில்லையா? என்று வினவுவதை,

**தக்கிலமே; கேளீர்கள்; தடம்புனல்வாய்**
**இரைதேரும்**
**கொக்கினங்காள்; குருகினங்காள்; குளிர் மூழிக்**
**களத்துறையும்**
**செக்கமலத்து அலர்போலும் கண்கைகால்**
**செங்களிவாய்**
**அக்கமலத்து இலைப்போலும் திருமேனி**
**அடிகளுக்கே (மேலது, 3741)**

என்ற பாடல் வாயிலாக அறியலாம்.

**நாகணவாய்ப்பறவை**


Isbn Number: 978-93-91115-98-2

சிறிய நாகணவாயப்பறவையே! திருமாலிடம் என்னுடைய காதலைத் தெரியப்படுத்து என்று பலமுறை எடுத்துக் கூறியும். நீ கூறாமல் உள்ளாய் என்பதனை,

**நீயலையே சிறுபூவாய்! நெடுமாலார்க்கு என்**
**தூதாய்**
**நோய் எனது நுவல் என்ன நுவலாதே**
**இருந்தொழிந்தாய் (மேலது, 2831)**

தலைவி காதல் நோயால் வருந்தி உடல் மெலிவுற்றார் என்பதை, நாகணவாய்பறவை திருமாலிடம் எடுத்துரைக் காததால், இதுவரை உனக்கு உணவு ஊட்டி வளர்த்தது போல் இனியும் வளர்க்கக்கூடிய வலிமை எனக்கு இல்லை. ஆதலால் நீ உன் வாயில் இனிய உணவை வைத்து ஊட்டக்கூடிய வல்லவர்களை நீயே வேறு எங்கேயாவது சென்று தேடிக்கொள் என்று நாகணவாய்பறவையிடம் தலைவி கூறுவதைக் காட்டுகின்றார்.

**காற்று**

குளிர்ந்த வாடைக்காற்றே! இறைவனடியில் நாள்தோறும் வாடாத மலர்களை வைத்து வணங்குவதற்காகவே இவ்வுயிர்களை எல்லாம் இறைவன் படைத்துள்ளான். இத்தகைய இறைவனிடம் காற்றைத் தூதாக அனுப்புவதை,

**வீடாடி வீற்றிருத்தல் வினையற்ற**


Isbn Number: 978-93-91115-98-2

**தென்செய்வதோ?**

**ஊடாடு பனிவாடாய்! ஊரைத்தீராய் எனதுடலே**

**(மேலது, 2940)**

எனும் பாடலில், நான் திருமாலைப் பிரிந்து தனிமையில் வாழும் நல்வினையற்ற செயல் எதற்காக நிகழ்ந்ததோ என்று தெரியவில்லை. இதனால் காற்றே தலைவனிடம் நான் வருந்துவதை நீ எடுத்துரைத்தும் எவ்வித நன்மையும் எனக்குக் கிடைக்கவில்லையென்றால் நீயே என் உடலை இருபிளவாக்கி விடு என்று காற்றிடமே தெரிவிப்பதைப் பாடல் வழி விளக்குகின்றார்.

**அஃறிணை தூதின் பயன்**

அஃறிணைகளைத் தூது விடுவதால் ஏற்படும் பயனை நம்பியகப்பொருள்,

**நெஞ்சு நாணு நிறைசோ ரறிவும்**
**செஞ்சுடர்ப் பருதியுந் திங்களும் மாலையும்**
**புள்ளும் மாவும் புணரியுங் கானலும்**
**உள்ளுறுத் யன்றவு மொழிந்தவை பிறவும்**
**தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை**
**இன்சொற் சொல்லுந போலவு மேவல்**
**செய்குந போலவுந் தேற்றுன போலவும்**
**மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்**

**(நம்பியகப் பொருள், நூ. 223)**

 Isbn Number: 978-93-91115-98-2

எனும் நூற்பாவில், அஃறிணைப் பொருள், தான் கூறியது கேட்டு, தனக்கு ஆறுதல் கூறுதல் போலவும், தன் ஏவலைக் கேட்டு அதன்படி செய்தல் போலவும், தன்னை தேற்றுதல் போலவும் தலைவிக்குத் தோன்றுதலால் அவள் உள்ளத்தில் ஓர் ஆறுதல் உண்டாகிறது என நம்பியகப்பொருள் விளக்குகின்றது.

**முடிவுரை**

பக்தியிலக்கியங்களில் பக்தியினை வெளிப் படுத்தும் முறையில் அகவுணர்வுப்பா அமைகின்றது. ஆண்டாள் பாடல்களில் சிற்றிலக்கியக் கூறுகள் அகப்பொருள் நுட்பத்திற்கும், இறையனுபவ வெளிப்பாட்டிற்கும் துணைநிற்கின்றன. கைக்கிளைத் துறையும், பாடாண் திணையும் ஒருங்கமைந்து நாயக – நாயகி மனோபாவனையில் தோன்றிய பல பாடல்கள் அகப்பொருள் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கும் ஆண்டாள் பாடிய பாசுரங்கள் தூது சிற்றிலக்கிய வளர்ச்சிக்கும் வித்திட்டன என்றே கூறலாம். திருவாய்மொழியில் தலைவி தலைவனிடம் தூது விடுவதாக நான்கு பதிகங்கள் அமைந்துள்ளன. முதற்பத்தில் நான்காம் திருவாய் மொழியும் ஆறாம்பத்தில் ஏழாம் திருவாய்மொழியும், தூது அமைப்பில் உள்ளன. நாரை, குருகு, குயில், அன்னம், மகன்றில், வண்டு, கிளி, நாகணவாய், காற்று, நெஞ்சம், பறவைகள், மேகங்கள், பாவை ஆகியவை தூது


**Isbn Number: 978-93-91115-98-2**

பொருளாக அமைந்துள்ளன என்பவை இக்கட்டுரையின் வழி அறியலாகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

[1] *திருக்குறள்.* பரிலேழகர் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -14, பதி.2010.

[2] புகழேந்திப் புலவர். *இரத்தினச்சுருக்கம்.* சென்னபட்டணம்: வித்தியானுபாலன யந்திரசாலை, சௌத்திரி, ஆடி.

[3] திருவேங்கட ராமானுஜதாசன். த. *நாலாயிர திவ்ய பிரபந்தம்.* உமா பதிப்பகம், சென்னை, 2012.

[4] இளம்பூரணர் (உரை). *தொல்காப்பியம் (பொருளதிகாரம்).* கழக வெளியீடு, சென்னை, 1967.

[5] கோபாலையர். தி.வே. *இலக்கண விளக்கம்.* சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1972.

[6] நாராயண வேலுப்பிள்ளை. எம். *நம்பியகப்பொருள்.* பாரதி புத்தகப்பண்ணை, சென்னை, 2007.

[7] *தமிழ் இணையக் கல்விக்கழகம்,* http://www.tamilvu.org/slet/l4210/l4210pmk.jsp? 25 ஏப்ரல் 2023 அன்று அணுகப்பட்டது.

[8] *தமிழ் வேதம்.* http://www.tamilvedham.org 25 ஏப்ரல் 2023 அன்று அணுகப்பட்டது.

[9] *நாலாயிர திவ்ய பிரபந்தம்.* http://dravidaveda.org 25 ஏப்ரல் 2023 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

# வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்: ஒரு வரலாற்று ரீதியான நோக்கு

**பே. சச்சிதானந்தம்,** கலாநிதிப்பட்ட ஆய்வாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

ORCiD: https://orcid.org/0009-0000-2378-1821

**பேரா. நா. ஞானகுமாரன்,** வாழ்நாள் பேராசிரியர், மேற்பார்வையாளர், யாழ் பல்கலைக்கழகம், இலங்கை.

ORCiD: https://orcid.org/0009-0004-2891-1268

**DOI: 10.5281/zenodo.7998059**

## ஆய்வுச்சுருக்கம்

*வைணவம் இந்துமதத்தின் ஒரு பெரும் பிரிவாக விளங்குகின்றது கடவுள் கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட ஒரு சமயப்பிரிவு என்ற வகையில் அது தன்து கடவுள் கோட்பாட்டு உருவாக்கலுக்கான கற்பிதங்களை தத்துவார்த்த ரீதியாகவம் வியாக்கியானப் படுத்தத் தவரவில்லை. சாதாரன கடவுள் நம்பிக்கையில் இருந்து தத்துவாத்த அடிப்படையில் கடவுள் இருப்பை நிரூபிக்கும் நிலைப்பாடுவரை வைணவத்தின் கடவுள் கருத்தியல் வளர்ச்சியடைந்துது வந்துள்ளது. வைணவக் கடவுள் கோட்பாட்டு வளர்ச்சியானது வேதகாலம் தொட்டும் வேதகாலத்திற்கு முற்பட்ட திராவிடப் பண்பாட்டு உருவாக்க காலம் தொட்டும் ஆரம்பித்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதனை வைணவத்தின்*



Isbn Number: 978-93-91115-98-2

*வரலாறு பற்றி எடுத்து நோக்கிய அறிஞர்கள் வெளிக்கொனர்ந்துள்ளனர். இவ்வாய்வானது வைணவத்தின் கடவுள் கருத்தியல், சாதாரனமான ஒரு நம்பிக்கைசார்ந்து தோற்றம் பெற்று வைணவவேதாந்த தத்துவமாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதனை தொடர்புபட்ட நூல்களின் வாலாக ஆராந்து வெளிக்கொணர்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. வைணவமும் இந்தியச் சமய தத்துவங்களுக்கிடையே தனித்துவமான ஒரு வரலாற்றுப் போக்கை கொண்டு வளர்ந்து வந்துள்ளது என்பதனை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமையும்.*

**திறவுச்சொற்கள்:** கடவுட்கோட்பாடு, வைணவம், வைணவ வேதாந்தம், திராவிடப்பண்பாடு.

## ஆய்வு அறிமுகம்

இந்து சமயத்தின் பிரதான சமயப்பிரிவுகளில் ஒன்றாக வைணவம் விளங்குகின்றது. வைணவத்தின் தோற்றம் வளர்ச்சி என்பன எவ்வாறு ஒரு வரலாற்று அடிப்படையிலே வேதகாலம், அதற்கு முற்பட்ட காலங்களில் இருந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதனை ஒரு ஒழுகலாக ஆராய்ந்து அறிவுலகத்திற்கு வெளிப்படுத்துவதை நோக்கமாக் கொண்டமைந்ததாக இவ்வாய்வு அமைகின்றது. சிவனை வழிபடுகின்ற மரபில்

சைவசமயம் தோற்றம் பெற்றது போல பிற்காலத்தில் விஷ்ணுவாக அறியப்பட்ட கடவுளை வழிபடுகின்ற சமயமாக வைணவம் விளங்குகின்றது. விஷ்ணு என்கின்ற கடவுள் வழிபாட்டிற்கு முன்பு பாஞ்சரதாத்திரம், பாவகதம், ஏகாந்திக தர்மம் என்றெல்லாம் அறியப்பட்ட சமயப் பண்பாட்டின் பரிணாமவளர்ச்சியின் இறுதிவடிவமாக வைணவம் தோற்றம் பெற்றுள்ளது. அவ்வாறக இடம்பெற்ற ஒரு வரலாற்று வளர்ச்சிநோக்கை குறித்து அறிவுலகத்திற்கு வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமையும்.

**வைணவத்தின் தோற்றம்**

வைணவத்தின் அடிப்படைகளை எடுத்து நோக்கும் போது அது பல பண்பாட்டுக் கூறுகளின் கூட்டாகவே அடையானப்படுத்தப் படுகின்றது. அந்தவகையில் பாகவதம், பாஞ்சராத்திரம், ஏகாந்திரம், சாத்வாதர் போன்ற வழிபாட்டுக் கூறுகளின் இறுதிவடிவமாகவே வைணவம் மிளிர்கின்றது. வைஷ்ணவத்தின் அடிப்படைகள் பாகவத சமயத்தில் உருவாகி வளர்ச்சியடைந்துள்ளன. அந்தவகையில் பாகவத சமயமானது நான்கு கட்டங்களாக வளர்ச்சியடைந்துள்ளன. அந்தவகையில் முதலாவதாக கி.மு 300 வரைவிளங்கியதாகக் கருதப்படும் கிருஷ்ண வாசுதேவ வழிபாட்டின் அடிப்படையில் விளங்கிய


Isbn Number: 978-93-91115-98-2

ஒருமைவாத இறையியல். இரண்டாவதாக கி.மு 300 களில் நிலவிய கிருஷ்ணன் விஷ்ணுவுடன் இனங் காணப்பட்ட நிலையில் வழிபடப்பட்டு விஷ்ணு முதன்மைக் கடவுளாக உயர்ச்சியடைந்த காலம். மூன்றாவது காலம் பாகவத சமயமானது வைஷ்ணவமாகப் பரிணமித்தது என்று கூறப்படுகின்றது. இது கி.பி 1200 வரையான காலப்பகுதியாகும். நான்காவது காலப்பகுதியாக வைணவம் இராமாணுஜரினால் முறைப்படுத்தப்பட்ட தத்துவ ரீதியான வளர்ச்சியடைந்த காலம். இவ்வாறாக வைஷ்ணவம் பல்வேறுபட்ட காலகட்டங்களுக்கூடாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இவ்வத்தியாயமானது வைணவம் எவ்வாறு ஒரு சமய தத்துவமாக வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது என்பதனை ஒரு வரலாற்று ஒழுகலாகவும், அது எவ்வாறு பல்வேறு காலகட்டங்களில் தோற்றம் பெற்ற நூல்களின் வழியாகவும், கடவுளர்களின் வழிபாட்டு மரபுகளையும் உள்வாங்கி வளர்ந்து வந்துள்ளது என்பதனையும் வைணவத்தின் தோற்றம் முதற்கொண்டு நுணுகி ஆராய்வதாக அமையவுள்ளது.

இந்து மதத்தின் இருபெரும் பிரிவுகளாக சைவமும், வைணவமும் விளங்குகின்றன. இவ்விரு சமயங்களும் ஏறத்தாள ஒரேவிதமாக வேறு இரு சம்பிரதாயங்களை


Isbn Number: 978-93-91115-98-2

தன்னகத்தே கொண்டு வளர்ச்சியடைந்து வந்திருப்பதை வரலாற்றுச் சான்றுகளினூடாக கண்டுகொள்ளலாம். இவ்விரு சமயங்களும் எக்காலப் பகுதியல் தோன்றியன என்பது ஆய்வுக்குரிய பொருளாகவே இருந்து வந்துள்ளது. வைணவம் தத்துவம், சமயம் என இரு கூறுகளாக வளர்ச்சியடைந்துள்ளது. வைணவதத்துவ வளர்ச்சிக்கு உபநிடதத்தையும், அதனது சமய வளர்ச்சிக்கு தாந்திர அல்லது ஆகம மரபையும் அடியொற்றி வைணவம் வளர்ந்துள்ளது என்பார் கிருஷ்ணசுவாமி ஐயர், (1920). வைணவத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி நோக்குமிடத்து வைணவத்தின் அடிப்படைக் கோட்பாட்டின் முக்கிய மையமாக திகழும் கடவுள் சார் கருத்து எப்பொழுது தோற்றம் பெறத் தொடங்கியதோ அப்போது வைணக்கருத்தியலும் ஆரம்பித்து விட்டது என்று பொதுவாக அறிஞர்கள் ஒப்புக் கொள்வர். அது முறையே வேத, உபநிடத, ஆகமச் சிந்தனையோடும் தொடர்பு படுத்திப் பேசப்பட்டு வந்துள்ளது. எடுத்துக்காட்டாக,

> **The ancient History of Vaishnavism is unclear the evidence inconsistent and scanty: Dalal says the origin of Vaishanvism may be in the Vedic deity 'Bhaga' who gave raise to Bhagavatism" vd;Wk; " Preciado- Solis says the Vedic deities Nara Narayana form one of the Vedic roots of Vishnavism" vd;Wk; Dandekar says Vishnavism**

> **may have emerged from merger of several ancient theistic traditions, where the various deities were integrated as different avatars of the same god, according to him Vaisnavism emerged at the end of Vedic period, closely before the second urbanization of northern India, in the 7th to 4th century BCE.**

டாலா, பண்டாக்கார், ஆகியோரின் கருத்துக்களை குறிப்பிடலாம்.

ருக்கு வேதத்தில் (கி.மு 2000) சூரியக் கடவுளின் தோற்றமாக விஷ்ணு கொள்ளப்பட்டார் என சுசில் குமார் பட்டால் குறிப்பிடுவதும். (Sushil Kumar Patel, (1992), p. 18) இருக்கு வேதகாலத் தோத்திரப் பாடல்களில்,

> **ஒளிக்கிரணங்களால் சூழப்பட்ட விஷ்ணு மூர்த்தி தமது கிரணங்களால் ஒளிபரப்பி உலகமெங்கும் வியாபித்துள்ளான் என்றும் வாமனராக அவர் தோன்றி மூவுலகங்களையும் அடியிட்டளந்த வரலாறும், தேவேந்திரனுக்காக மூவுலகங்களையும் மாவலியிடம் பறித்துக் கொண்டான். (இராதாகிருஷ்ணபிள்ளை, ம. ப. 2)**

என எடுத்துக்காட்டுவதும் விஷ்ணுவைப்பற்றியும், வைணவ சமயக் கருத்தியல்கள் பலவும் தோன்ற தோற்றுவாயாக இருக்கு வேதங்களே அமைந்துள்ள எனலாம். மேலும், **இருக்குவேதத்தில் உள்ள புருசசூத்தத்தில் சுட்டப்பட்ட ஒரு சில கருத்துக்கள்**


Isbn Number: 978-93-91115-98-2

**வைணவத்தின் பிற்பட்ட வளர்ச்சி நிலைக்கு அடிப்படையானதாக அமைந்துள்ளன (ஞானகுமாரன், நா. 1992)** என்ற கருத்தும் சதபதப்பிரமணத்தில் சுட்டப் பெற்ற நாராயணன் பற்றிய செய்திகளும் வைணவத்தின் நிலைப்பாட்டினை உறுதிசெய்யும் தரத்தினதாக அமைந்தன என்பதும் வேதங்களே வைணவத்தின் தோற்றத்திற்கு அடிப்படை ஆதாரங்களாக அமைந்துள்ளன என்பதனை உறுதிப்படுத்துகின்றன. மேலும், வேதச் சூத்தங்களில் யாகங்களுக்கும் யக்ஞங்களுக்கும் பொறுப்பானவர் விஷ்னு இதனால் இவர் யக்ஞேசுவரன், யக்ஞ புருஷன், யக்ஞவராகன், யக்ஞவீரியன் என்ற பெயர்கள் இவருக்கு வழங்கிவருகின்றன என்ற குறிப்பும் வேதசூத்திரங்களிலே உண்டு. (மேலது) இதனூடாக வேள்விகளிலே யக்ஞம் அளித்து விஷ்ணுமூர்த்தியைத் திருப்தி செய்தனர் வேதகால ஆரியர்கள் என்று கூறப்படுவதும் விஷ்ணு வழிபாடு வேதகால ஆரியப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றுவிட்டது என்பதற்குச் சான்றாக அமைகின்றது.

வேதகாலத்திற்கு முந்திய திறாவிட சிந்து வெளி ஹரப்பா நாகரித் தோடும் சைவம் வைணவம் ஆகியனவற்றின் தோற்றம் பற்றி பேசப்படுவது வழக்காக இருந்து வந்துள்ளது. அவ்வாறெனின் வைணவத்தின் தோற்றம் வேதங்களுக்கு முந்திய திராவிடப்பண்பாட்டுன்

ஆரம்பிக்கின்றது என்று கொள்ளப்படுமளவிற்கு தொன்ம்மாயனது எனக் கூறுவாரும் உளர்.

> **வைணவக் கருத்துக்களின் கொள்கைகளின் மூலத்தினைக் கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஐந்தாம் நூற்றாண்டுகளின் இணங்காணக்கூடியதாக கொள்ளப்படும் வகையில் பழமைபொருந்தியதாக விளங்குகின்றது. (ஞானகுமாரன், நா. 1992)**

இதற்கு எடுத்துக்காட்டாக,

> **பாவதா பாஞ்சராத்திர சமயமானது வேதத்திற்கு புறம்பானது என்ற கருத்து நிலவுவதும், சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்புடையது எனவும், நாராயணபலி தொடர்பாக கூறும் போது “எள்ளோடு தொடர்புடைய எல்லாச் சடங்குகளும் ஹரப்பா நாகரிகத்தின் வாரிசு எனக் குறிப்பிடப்படுவதும் (சுவீரா ஜெயஸ்வால், 1991)**

நாராயண வழிபாட்டின் மூலத்தை சிந்துவெளி நாகரிக காலத்தோடு தொடர்புபடுத்தியுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. இருப்பினும் வேதங்களே வைணத்தின் தோற்றத்திற்கு அடிப்படை என்றும் அதிற் காணப்படும் வைணவத்தின் மூலப்பொருளான விஷ்ணு நாராயணன் பற்றிய கருத்துக்களை வைத்து துணியும் அதேவேளை வேதங்களுக்கு சற்று பின்னரான காலப்பகுதியிலே


Isbn Number: 978-93-91115-98-2

வைணவம் தோற்றம் பெற்றது என (ராமாணுஜ தாதாசிரியர், (1973) குறிப்பிடுவதையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளுதல் பொருத்தமுடையது. மேற்படி நூல் வரலாற்று நோக்கில் வைணவத்தைப் புரிந்து கொள்ள முதல் முதலில் எழுதப்பட்ட நூல் என்ற அடிப்படையிலும் அதில் 'வைணவம்' என்ற கொள்கை விஷ்ணுவை முழுமுதற்கடவுளாக வைத்து வழிபட வகைசெய்வதாகும். இவ்வித வைணவம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டு பாரததேசம் முழுவதும் பரந்து நின்றது என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளதும் வைணவத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக இருப்பது வேதங்களே எனலாம். மேற்படி கருத்துக்களின் வாயிலாக வேதங்களை மையமாக் கொண்டு அதற்கு சற்று முந்திய அல்லது சற்றுப் பிந்திய காலப் பகுதியில் வைணவச் சிந்தனை தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பதையும், (Dandekar, R.N. (1987) மேலே கூறிய கி.மு 7முதல் 4வரையான காலம் வைணவத்தோற்றம் குறித்து கூறிய கருத்தையும் கொண்டு வைணவத்தின் தோற்றத்திற்கான காலத்தை உறுதியாகக் கூறலாம்.

வைணவம் என்ற சொல்லாட்சி தோற்றம் பெறுவதற்கு முன்பதாகவே நிலவிய பாகவதா, பாஞ்சராத்திர, கருத்துக்களும் பிற்கால வைணவத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக இருந்துள்ளன.


Isbn Number: 978-93-91115-98-2

இதனை, **பழைய வைணவத்திற்குப் பாகவத தர்மம், பாஞ்சராத்திரம் என்ற பெயர்களும் உண்டு (இராதாகிருஷ்ண பிள்ளை, ப. 10)** என்ற கூற்றுச் சான்று பகிர்கின்றது. வைணவத்தின் தோற்றத்தை விஷ்ணுவோடு தொடர்பு படுத்திப் பேசுவதற்கு முன்பதாக வைணவத்தின் தோற்றத்தை சங்கர்சன, வாசுதேவ, நாராயணனை வழிபடத் தொடங்கிய காலத்தை வைணவத்தின் ஆரம்ப காலம் என்றும் குறிப்பிடுவர். இதனை தொடக்ககாலத்தில் பாஞ்சராத்திர வழிபாடு விருஷ்ணிகளிடம் மட்டும் காணப்பட்டது. அது நாராயண, மற்றும் விஷ்ணு வழிபாட்டுடன் கலந்து விட்டதோடு எல்லோருக்குமான சமயமாக மாறியது எனக்கூறுவதன் வாயிலாக பாஞ்சராத்திரம் வை ணவத்தின் ஆரம்ப வடிவமாகக் கொள்ளப்பட்டது எனலாம். பாஞ்சராத்திரத்திற்கு முரணாக வேதத்தை வலியுறுத்துபவர்கள் பாகவத மதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாசு தேவ நாராயண வழிபாட்டை மேற்கொண்டு பாகவத சம்பிரதாயம் என்ற பெயரால் வைணவத்தைப் பின்பற்றினர். இதற்கு எடுத்துக் காட்டாக கி.மு முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுங்க சாளுக்கிய அரசர்கள் பாகவத சம்பிரதாயத்தை பின்பற்றினார்கள் என்றும் அதன்படி கௌதமி புத்ர சதகர்ணி என்ற அரசன் தன்னை பாகவதனாக மாற்றிக் கொண்டான் என்பதைக்


Isbn Number: 978-93-91115-98-2

குறிப்பிடலாம். அதேபோல சந்திர குப்தரின் நாணயங்களில் கருடனின் அடையாளம் பொறிக்கப் பட்டிருந்தது என்றும் அவனுக்குப்பின்புவந்த இரண்டாம் சந்திர குப்த, விஷ்ணுகுப்தன், குமார குப்த, ஸ்கந்த குப்தன், ஆகியோர் தங்களை பரம பாவதர் என்று கூறிக் கொள்கின்றார்கள் என்பதும் பாகவதத்தின் செல்வாக்கை வைணவத்தில் எடுத்துக் காட்டுகின்றது. மேலும் புத்தகுப்த காலத்துக்கல்வெட்டு மஹாராாண, மாத்துரு விஷ்ணு, என்ற பெயர்கள் வைணவத்தின் பால் அவர்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது என்பர். திருமாலுக்கு இவர்கள் ஒரு கருடதம்பம் நாட்டிய சிறப்பை விளக்குகின்றது. குப்தர்பாரம்பரியத்தில் மாத்துருவிஷ்ணு, அவனது தந்தை ஹரிஷ் விஷ்ணு, அவனது தந்தை வருண விஷ்ணு, இவரது தந்தையின் பெயர் இந்திர விஷ்ணு இவ்வாறாக குப்தர்காலத்தில் வைணவம் நான்கு தலைமுறைகனாக வளர்ச்சியடைந்திருந்தது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

**வைணவ சமயமானது நாராயண விஷ்ணுவை பல்வேறு வடிவங்களில் வழிபடுவதை மையமாகக் கொண்ட சமயமாகும் நாராயண, விஷ்ணுவை புராண இதிகாசங்கள் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. இரு பெயர்களும் ஒரு**


Isbn Number: 978-93-91115-98-2

**கடவுளையே குறித்தது அவரே பாகவதர், பாஞ்சராத்திரர், ஏகாந்திகள், சாத்வாத, வைஷ்ணவர் என்பவர்களால் வழிபடப்பட்டார் என (Jaiswal Suvira, 1969)**

எனக் குறிப்பிடுகின்றார். விஷ்ணுவை ஐதரேய பிராமணம் 'பரமர்' என்று கூறுகின்றது. (இராதாகிருஷ்ண பிள்ளை) இதன் பொருள் உயர்வற உயர்ந்தவர்கள் என்பது. அதேபோல உலகத்தை உய்விக்கும் உணவு பகவத் விஷ்ணு என்கின்றது மைத்திரேய உபநிடதம். (உபநிடத சாரம்) உயிர்களின் நீண்ட பிரயாணத்தின் எல்லை நிலம் விஷ்ணுமூர்த்தியின் பரமபதம் என்கின்றது கடோபநிஷத். (உபநிடத சாரம்) விஷ்ணு மூர்த்தியின் அடியிட்டளந்த மூன்றாம் உலகம் பரமபதம். அது பரமயோகிகள் எய்தும் பதம் அந்தமில் பேரின்பத்து அடியார் வாழும் உலகம் தாமரைக் கண்ணானுலகு என்பார் திருவள்ளுவர். வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே என்றார் நம்மாழ்வார் (இராதாகிருஷ்ணபிள்ளை, ம. 1963)

சதபதப்பிராமணம் மச்ச கூர்ம வராக வாமன அவதாரங்களைப் பற்றிக் கூறுகின்றது. மேலும் சதபதப் பிரமாணத்தில் இரு பக்கங்களிலே முதன்முறையாக நாராயணனின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. அதன்பிரகாரம் சதபத பிராமணம் தொகுக்கப்பட்ட


Isbn Number: 978-93-91115-98-2

காலத்தில் நாராயண வழிபாடு இடம் பெற்றிருக்க வேண்டும் எனக் குறிப்பிடலாம். அவ்வாறே போதாயனரது தர்ம சூத்திரம் விஷ்ணுமூர்த்தியைக் கோவிந்தன், தர்மோதரன், என்று கூறுகின்றது. பசுக்களை மேய்ப்பவன் என்று பொருள்படும் கோவிந்தன் என்ற சொல். ஆட்டு உரோமத்தை இடுப்பில் அரை ஞாணாகக் கட்டிக் கொண்டதால் தாமோதரன் என்று பெயர் ஏற்பட்டது. (மேலது) நாராயணனும் பிரம்மனும் ஒன்று எனப்பல நூல்களிலே பேசப்பட்டுள்ளன. அந்தவகையில் மனுஸ்மிருதி நாராயணனும் பிரம்மமும் ஒன்று என்று பேசும். அதேபோல வாயு புராணத்தில் வரும் படைப்புக் காதைகளில் நாராயணனும் பிரம்மமும் ஒன்று எனக் கூறும் குறிப்புக்கள் உண்டு. விஷ்ணு புராணம் பிரம்மனே நாராயணனென்று அறியப்பட்டவர் அவரே மீன், ஆமை, பன்றி, என உருத்தாங்கினார் எனக்கூறும். அதேபோல பிரமாண்ட புராணமும், மார்க்கண்டேய புராணமும் இப்பேருலகத்தின் அதிபதி என்னும் பிரம்மனின் சொந்த வடிவத்தையே தமது உருவாகக் கொண்டவர் நாராயணன் என வருணிக்கின்றது. இவற்றினூடாக நாராயணன் மிகப்பழமையான காலத்தில் இருந்தே வலிமை மிக்க தெய்வமாக விளங்கினார் என்றும் அவர் முதலில் பிரம்மனோடும் அடுத்து விஷ்ணுவோடும் ஒன்றுபடுத்திப்


Isbn Number: 978-93-91115-98-2

பேசப்படுகின்றார் இதற்கு ஆதாரமாக மைத்ரேய உபநிடதத்தில் நாரயணனும் விஷ்ணுவும் ஒன்று எனக் கூறுவதைக் குறிப்பிடலாம்.

வேதகாலக் கடவுளான விஷ்ணு வேதகாலத்திற்கு பிற்பட்ட காலத்தில் மிக உயர்ந்த கடவுள் நிலையை அடைந்தார். இருக்குவேதத்தில் உள்ள ஐந்து பாடல்கள் மட்டும் விஷ்ணுவை துதித்துப் பாடுகின்றன. ஆனால் ஏறக் குறைய நானுறு முறை விஷ்ணுவின் பெயர் கூறப்பட்டுள்ள அதே வேளை இந்திரனுக்கு ஏவலாளாக இருந்தாலும் பெரிய கடவுளாகவும் போற்றப்பட்டார் என்பதற்கான சான்றுகள் உள்ளதாக சுவீரா ஜெயல்வால் போன்ற அறிஞர்கள் எடுத்துக் காட்டுவர். கி.பி 404 இல் நந்தசாரில் குப்தகாலத்தைச் சேர்ந்த ஒரு அகலாபாத் தூண் கல்வெட்டு விஷ்ணு வழிபாட்டோடு தொடங்குகின்றது. அதிலே விஷ்ணு ஆயிரம் தலை உடையவராகவும் நான்கு சமுத்திரங்களையும் படுக்கையாகக் கொண்டவராகவும் வர்ணிக்கப்படுகின்றார். இங்கு பகவான் பகவான் வாசுதேவன் உலகத்தில் இருப்பவன் அளவிட முடியாதவன், பிறக்காதவன், எங்கும் பிறப்பவன், என்பது போன்ற அனேக கருத்துக்கள் அக்கல்வெட்டில் வருணிக்கப் பட்டுள்ளது. (சுவீரா ஜெயல்வால், 1991).

வைணவத்தினுடைய ஆரம்பவடிவமான பாகவதம் அதன் கருவூலமாக மதுராபுரியில்


Isbn Number: 978-93-91115-98-2

காணப்படுகின்றது எனவும் அது கி.மு 6-7ஆம் நூற்றாண்டிற்கு உரியது எனவும் இது படிப்படியாக இந்தியா எங்கும் பரவியது எனவும் அதற்கான ஆதாரம் வேஸ்நகர் தூண்கல்வெட்டுக்களில் கி.மு 2ஆம் நூற்றாண்டில் உரிய தொல்லியல் சான்றுகளினூடாக அறியமுடியும் என்பார் (Sushil Kumar Patal, 1992). கி.மு 200 க்கு முந்திய காலத்தில் இராஜபுத்திர கல்வெட்டுச் சுவர்களில் சங்கர்ஷணன், வாசுதேவ தெய்வங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதும் வைணவக் கடவுள்களின் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றது (சுவீரா ஜெயல்வால், 1991).

எங்கும் பரந்து கலந்துள்ள விஷ்ணுவின் தொடர்புடையது வைஷ்ணவம் ஆகும். **வைணவம் என்பது விஷ்ணுவைப் பரம்பொருளாகவும் முழுமுதற் கடவுளாகவும், பரப்பிரம்மமாகவும் கொண்ட மதமாகும். (ஜெயராமன், பூ. 1988).** விஷ்ணு என்றால் எங்கும் பரவி வியாபித்து நிற்பவன் என்று பொருள். இதனை மேலும் வலியுறுத்தும் வகையில் படைத்தல் காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழில்களில் காத்தல் தொழிலைப் புரிபவர் திருமால். தமிழ் பாரம்பரியத்தில் திருமால் என அழைக்கப்பட்ட கடவுளைச் சங்க இலக்கியங்கள் மாயோன் எனப் போற்றுகின்றன. மாயோன் என்பதன் அர்த்தம் மாமை நிறமுடையவன் அதாவது கரியோன்


Isbn Number: 978-93-91115-98-2

இவனைத் தொல்காப்பியம் முல்லை நிலத்திற்கும் முல்லைசார்ந்த இடங்களுக்குமான தெய்வமாக, மாயோன் மேய காடுறை உலகமும் (வரதராய ஐயர், 1979) என எடுத்துக்காட்டுவார்.

வைணவம் என்ற சொல் எப்போது தோற்றம் பெற்றது என நோக்குவது இங்கு சாலப் பொருந்தும் என்ற அடிப்படையில் **வைணைவம் என்ற சொல்லாடல் வேதத்திலே காணப்படுகின்றது என்ற கூற்று அறிஞரிடையே காணப்படுகின்றது (ராமாணுஜ தாதாசாரியர், 1973)** எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் வைணவம் என்ற சொல் மகா பாரத்தின் (கி.பி 4-5) பிற்பகுதியில் தான் உருவாக்கம் பெறுகின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. ஆனாலும் கி.மு 10 ஆம் நூற்றாண்டே பாரதப் போரின் காலம் என்றும் அவ்வாறெனின் வாசுதெவ கிருஷ்ணர் அக்காலத்தவராவர் என்ற கருத்தும் நிலவுகின்றது என எடுத்துக்காட்டுவார் இராதாகிருஷ்ணபிள்ளை (ப. 6). மேலும் வைணவம் என்ற சொல்ப் பராந்தக பாண்டியனின் (கி.பி 765-790) சீவரமங்கலச் செப்பேட்டில் “பராந்தகன் பரம வைணவனாகி” என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் பெரியாழ்வார் (கி.பி 8),

**வன்மை யாவதுன் கோயிலில் வாழ்பவன்**


Isbn Number: 978-93-91115-98-2

**வைட்டணவன் என்னும் வான்மை காண்டாய்**
**(நாலாயிரம் திவ்வியபிரபந்தம்)**

எனக் குறிப்பிடுவதும் வைணவம் என்ற சொல் கி.பி 4 க்கும் கி.பி 8க்குமிடைப்பட்ட காலத்திலே பிரபல்யமடைந்தது எனத் துணிய வழிவிடுகின்றது எனலாம். (கந்தகாமி, சோ, ந. ப. 186). அதேவேளை கி.பி முதலாம் நூற்றாண்டிற்கு முன்னரே தமிழ்நாட்டில் வைணவம் புகுந்து விட்டது என்றும், திருமால் வழிபாடு தொன்று தொட்டே தமிழ்நாட்டில் உண்டென்றும் அவரது வியூக அவதாரங்களும் கோகுலத்தில் பிறந்து வளர்ந்த செய்திகளும் தமிழ்நாட்டில் கி.மு முதலாம் நூற்றாண்டிற்குப் பின்னரே வழங்கலாயிற்று. புராண, இதிகாச செல்வாக்கால் இப்பண்பாட்டுக் கலப்பு ஏற்பட்டது என்ற கருத்தும் நிலவுகின்றது.

வைணவத்தின் உருவாக்கம் பல வைணவப் பண்பாடுகளின் ஒட்டுமொத்த திரட்சியாகவே கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் பாகவத மதம் என்பது கிருஷ்ணன் புத்தர் காலத்திற்கு முன்பே வழிபடப்பட்டார் என்ற கருத்தும் நிலவுகின்றது. அதேபோல வாசுதேவ வணக்கம் பாணினி காலத்தில் இருந்திருக்கின்றது என்ற கருத்தும் காணப்படுவதும். பதஞ்சலி முனிவரது காலத்தில் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன் ஆகிய நான்கு


Isbn Number: 978-93-91115-98-2

வியூகாவதாரங்கள் நன்கு தெளியப்பட்டன என்றும் கி. மு முதலாம் நூற்றாண்டில் காணப்படும் கல்வெட்டின் பிரகாரம் வாசுதேவன் சங்கர்சனருடன் வியூகங்கள் பிரசித்தமானவை என்று சுட்டிக்காட்டப்படுவதும். வைணவம் பல உட்பிரிவுப் பண்பாட்டின் கூட்டு என்பதற்குச் சான்றாக உள்ளது. (வரதராஜ ஐயர், 1974). ஆனாலும் வைணவம் எப்பொழுது தோற்றம் பெற்று, விரிவடைந்தது என்பதனை ஒரு தத்துவ முறைமையாக விளங்கிக் கொள்ளவும் வைணவத்தின் வளர்ச்சியை அளவிட்டுக் கொள்வதற்கும் வேதங்கள், ஆகமங்கள், புராணம் இதிகாசங்கள், ஆழ்வார் பாடல்கள், வைணவ சாத்திர நூல்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், போன்றனவற்றில் வாயிலாக ஆராய்வதனூடாகவே வைணவம் பற்றிய முழுமையான பார்வையை அறிந்து கொள்ள முடியும்.

பண்டாக்கார் பதஞ்சலியின் மகாபாசியம் வாசுதேவ விஷ்ணு வழிபாட்டு முறை அத்தெய்வத்தோடு சேர்த்து வேறுபல சிறு தெய்வங்களின் வழிபாட்டு முறை ஆகியவை பற்றிய கருத்துக்களைத் தருவதாகக் சுட்டிக்காட்டியுள்ளார் (பண்டாக்கார்) என்றும் இந்நூல் கி.மு 2ஆம் நூற்றாண்டிற்குரியன எனக் கொள்ளப் படுவதனால் வைணவப் பாரம்பரியம் அக்காலப் பகுதிகளிலே தோன்றிவிட்டது எனலாம். கி.மு இரண்டாம்


Isbn Number: 978-93-91115-98-2

நூற்றாண்டைச் சேர்ந்த வேஸ்நகர் (Besnager) தூண் கல்வெட்டு, இராஜஸ்த்தானில் உள்ள கோஷாண்டி (Ghosunde) கல்வெட்டு மும்பேயில் உள்ள நானாகாட் (Nanaghat) இவை அனைத்தும் கி.மு 2ஆம் நூற்றாண்டில் பாகவத சமயம் நிலவியதற்கான சான்றாக எடுத்துக்காட்டப்படுகின்றன. (Sushil Kumar Patal (1992). மேலும் இரண்டாம் (கி.மு 2) நூற்றாண்டில் பதஞ்சலியும் இவரது சமகாலத்தவரான பூசியமித்த சுங்க (Pusysmitra Sunga) பானிணி பற்றிய குறிப்பில் வாசுதேவ மகிவும் சிறப்பாக போற்றப் பட்ட கடவுளாக கொள்ளப்பட்டான் என்று குறிப்பிடுகின்றார்.

சுங்க மற்றும் கன்வ அரசுகள் பாகவதத்தைப் பயின்றார்கள் என்பதற்கு பல குறிப்புக்கள் உண்டு. அதேவேளை கி.மு முதலாம் நூற்றாண்டிற்கும் கி.பி முதலாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்ட கிரேக்கர்கள் கூட பாகவதத்தைப் பின்பற்றினார்கள் என்றும் எடுத்துக் காட்டாக காந்தார நாட்டுத் தட்சசீலத்தில் இருந்த ஹெலியடோரஸ் என்ற கிரேக்கன் தன்னை வாசுதேவ பக்தன் என்று கூறிக் கொண்டான். மேலும் அவன் விதிசா நகரில் ஒரு கொடிக்கம்பம் நட்டு அதன்மீது வாசுதேவரின் வாகனமான கருடனை எழுந்தருளப்பண்ணித் தன்பக்தியைத் தெரிவித்தான் எனவும் அச்சாசனம்


**Isbn Number: 978-93-91115-98-2**

குறிப்பிடுகின்றது. சீனக் கல்வெட்டு ஜஞ்ஞஹீ சதாகாரி கி.பி 2இல் வாசுதேவனைப் புகழ்ந்து பாடியுள்ளது. என்பதனையும் இங்கு குறிப்பிடலாம். மேலும் குப்தர் ஆட்சியோடு பாகவதம் பூரணவளர்ச்சியடைந்திருந்தது எனக் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

> **குப்தர்காலத்தில் நிரந்தரமான கல்லாலான ஆலையங்கள் அமைக்கப்பட்டன என்பதும் விஷ்ணுவின் வராக அவதாரம் அரச அதிகாரத்தின் குறியீடாகப் போற்றப்பட்டது (Basham A.L, 1990)**

எனவும் பசாம் தனது நூலில் குறிப்பிடுவதை குறிப்பிடலாம். குஷானர்களின் நாணயங்களில் விஷ்ணுமூர்த்தியின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுவர் எடுத்துக்காட்டாக விஷ்ணு மித்திரன் என்ற பாஞ்சால மன்னனுடைய நாணயங்களில் இடது மேல் கையில் சக்கரம் உடைய விஷ்ணுவின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது என்பதனையும், ஹீவிஸ்கன் என்ற குஷான மன்னனது முத்திரையில் சங்கு சக்கர கதாதாரியாய் விஷ்ணுமூர்த்தி நான்கு கரங்களுடன் காட்சி அளிக்கின்றார். குஷான நாணங்களில் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கும் விஷ்ணுமூர்த்தியின் கீழ் ஊஷ்ணா என்று கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருப்பது


Isbn Number: 978-93-91115-98-2

விஷ்ணுவைச் சுட்டுவதாக குறிப்பிடுகின்றனர். (சுவீரா ஜெயல்வால் 1991).

மேலும், பரதருடைய நாட்டிய சாஸ்த்திரம் தோற்றம் பெற்ற காலம் கி.மு 200க்கும் கி.பி 300 வரை என்றும் இந்நூலில் விஷ்ணுவின் ஆயுதங்களை வழிபடுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் விஷ்ணு வழிபாடு மிகவும் வளர்ச்சியடைந்த காலத்தில் இயற்றப்பட்டது என்ற கருத்தும் முன்வைக்கப்படுவதனால் மேற்படி காலத்திலே விஷ்ணு வழிபாடு சிறப்பாக வளர்ச்சியடைந்து விட்டது என்பது தெளிவாகின்றது. கல்வெட்டு ஆதாரங்களின் வழி நோக்குகின்ற போது வைணவ வழிபாட்டின் தொன்மையைப் பெஸ்நகர கல்வெட்டுக்கள் குறிப்பிட்டிருப்பதும் பொதுவாக குப்தர் காலக் கல்வெட்டுக்கள் வைணவத் தொடர்புடையவை என்ற கருத்தும் வைணவத்தின் ஆதிக்கம் கல்வெட்டுக்களின் வாயிலாக வெளிப்படுகின்றது எனலாம். ஆனாலும் விஷ்ணு வழிபாட்டின் தொன்மையை எடுத்துக்காட்டும் பல அறிஞர்கள் வேதகாலத்திலே அதனைத் தொடர்புபடுத்துவதுண்டு அந்தவகையில் கோபிநாதராவ் குறிப்பிடுகின்ற,

திருமால் அல்லது விஷ்ணு வேதங்களில் கூறப்பெற்ற வேதகாலக் கடவுளே அவனைச்


Isbn Number: 978-93-91115-98-2

சூரியனாகவும், ஈரடியால் மூவுலகையும் அளந்தவன் என்றும் சதபதப் பிராமணத்தில் அவன் பன்னிரண்டு ஆதித்தர்களில் ஒருவராக கூறப்பட்டுள்ளான் என்றும் மகாபாரதமும் பதினொரு ஆதித்தர்களைக் குறிப்பிட்டு பன்னிரண்டாவதாக விஷ்ணுவை குறிப்பிடுகின்றது ஆகவே ஆதித்தன்தான் விஷ்ணுவாக மாறினார் என்ற ஊகமும் உண்டு என்பதும் அவனே புராண இதிகாசங்களில் திருமூர்த்திகளில் ஒருவராகவும் போற்றப்படுகின்றான் என்றும் எடுத்துக்காட்டுவது விஷ்ணுவழிபாட்டின் ஆரம்பம் வேதகாலமுதல் விரவிக்காணப்படுகின்றது என்பதனை நிரூபிக்கின்றது. இக்கருத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் விஷ்ணு,

> **வடிவிற் சூரியன் உலகனைத்தும் தாங்குகின்றான் என்றும் அவர் மூவுலகினையும் மூன்றடியால் அளந்தவர் மண், விண், எனப் பல உலகங்களிலும் பரவி நிற்கின்றான் என்றும், இருக்கு வேதாத்தில் முக்கியமான தெய்வமாகக் கருதப்படாவிட்டாலும் விஷ்ணு பேருடலம் உடையவராகவும் அன்பர் வேண்டு கோளுக்கிணங்க அவ்வப் போது அவதரிப்பவராகவும் கூறப்படுதலில் வைணவத்தின் அடிப்படைகளை அங்கே**


Isbn Number: 978-93-91115-98-2

**காணலாம் என்று குறிப்பிடுகின்றார். (இராதாகிருஷ்ணன், எஸ், டாக்டர். 1923)**

இந்திரனுக்கு எதிரியாக இருந்த கிருஷ்ணன் முல்லைநிலத்திறைவன் அவன் பின் இந்திரனால் வெல்லப்பட்டான் என்றும் புராணங்கள், பகவக்கீதை என்பனவற்றில் தெய்வீகப் பெருமைபெற்று விளங்கும் அவனை வைணவர்கள் விஷ்ணு என்றும் பாகவதர்கள் வாசுதேவன் என்றும், கொண்டாடினர். அவரே அவதார புருஷராகவும் புல்லாங்குழல் ஊதி விளையாடும் கோபாலனாகவும் மக்களால் போற்றப்பட்டான். இவ்வாறாக வைணவம் போற்றும் கடவுள் பல்வேறு பெயர் கொண்டு தொண்டு தொட்டு அழைக்கப்பட்டு வருகின்றார். மேலும், வைணவக் கடவுள் கருத்தியலை நோக்கும்போது வைணவத்தில் அதியுச்சமான கடவுளான விஷ்ணு பன்மைத்துவக் கடவுள் கருத்தியலின் வெளிப்பாடக கொள்ளப்படுகின்றார்.

அந்தவகையில் விஷ்ணுவை கடவுளாகக் குறிப்பிடும் கருத்துக்கள் வேதங்களில் காணப்படுவதனாலும், பாஞ்சராத்திர மரபிலே வாசுதேவ கிருஷ்ணக் கருத்தியல் என பலவகைக் கடவுள் கருத்தியலை வைஷ்ணவம் உள்ளடக்கியுள்ளதாலும், வேதமும், வேதம்சாரா சம்பிரதாயங்களும் வைணவத்தின் மூலம் எனக் கொள்ளலாம். மேலும் விஷ்ணுவின்


Isbn Number: 978-93-91115-98-2

அவதாரங்களில் வராக அவதாரம் என்பது இந்தியாவில் மிக நீண்ட காலத்திற்கு முன்பே தோற்றம் பெற்றுவிட்டது என்றும் அதனுடைய ஆரம்பத்தை வேதத்திலும் அதற்கு முன்புமுள்ள காலத்திலும் அடையாளம் கண்டு கொள்ளலாம் எனக்குறிப்பிடுவதும் (Susil Kumar Patel, 1992, ப. 151). அதனைத் தொடந்து சதபதப் பிராமணம், தைத்திரிய ஆரண்யக, இராமாயண, பாகவதபுராணம், விஷ்ணுபுராணம், லிங்கபுராணம், அக்கினிபுராணம் என்பவற்றில் அது நிலவிவந்துள்ளது என அவர் எடுத்துக்காட்டுவதும் வைணவ கடவுள் கோட்பாட்டின் ஒரு முக்கிய வடிவமான அவராதக் கோட்பாடு மிகநீண்ட காலம் தொட்டு பேசப்பட்டு வந்துள்ளது என்பதனை அறிய உதவுகின்றது.

வைணவ மரபு மற்றும் அதன் கோட்பாட்டு வளர்ச்சி பற்றி அறிஞர்கள் பல கருத்துக்களை முன்வைக்கின்றனர். அந்தவகையில் வேதத்தில் சூரியக் கடவுளாகக் கொள்ளப்பட்ட ‘விஷ்ணு’ ஏனைய இந்திரன், அக்கினி, ருத்திரன் போன்ற கடவுளர்களைப் போலல்லாது ஏனைய சிறு கடவுளர்களில் ஒருவராக, பிரபல்யமற்ற கடவுளாகவே காணப்பட்டார். (Vishnu is a Vedic Pantheon, Basham A.L, 1990) அதேபோல வேதங்களில் நீர்க்கடவுளாகக் கொள்ளப்பட்ட ‘நாரா’ என்பவர் நாராயண புருசராக கொள்ளப்பட்டார் என


**Isbn Number: 978-93-91115-98-2**

வேதப்பிராமணங்கள் கூறுகின்றன என்றும், அவ்வாறே வேதாங்களில் காணப்பட்ட 'பககா'எனப்படும் கடவுள் பாகவதம் எனும் கோட்பாட்டிற்கு அடிப்படை எனவும் டலால் எனும் அறிஞர் குறிப்பிடுவதாக சுபாஸ் சந்திர தனது வைணவம் எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார் (Subhash Chandra, Dr. 2020). இவரது கருத்துக்கூடாக விஷ்ணு, நாராயண, பகவான் ஆகிய கடவுள்கள் பிற்கால வைணவத்தில் கடவுள் கோட்பாடாக வளர்ச்சியடையவும், வைணவத்தின் உருவாக்கத்திற்கும் அடிப்படையாக வேதங்களே அமைந்தன என்பதனை நிதர்சனமாக்கிவிடுகின்றது எனலாம்.

மேலும், பிரிசியாடோ சோலிஸ் கூறும் போது "வேதக் கடவுளான நரநாரயணனே வைஷ்ணவத்தின் அடிப்படை எனக்குறிப்பிடுவதும். டன்டாக்கர் (Dandekar) என்பார் வைஷ்ணவம் பல்வேறுபட்ட புராதன கடவுள்களின் பாரம்பரியத்தினதும், கடவுள்களினதும், ஒரு கடவுளின் அவதாரமாகக் கொள்ளப்பட்ட கடவுளின் சேர்க்கையில் உருவானது. இந்தவகையில் வைஷ்ணவம் வேதகாலத்தின் இறுதியில் தொடங்கி வட இந்திய நகரமயமாக்கலில் முடிவடைகின்றது.

கி.மு 7முதல் 4வரையான காலப்பகுதியில் யாதவகுலத் தலைவனான வாசுதேவ கிருஷ்ணன் விரிஷ்ணி குல மற்றும் யாதவகுலத் தொடர்பினால்


**Isbn Number: 978-93-91115-98-2**

பிரபல்யம் அடைந்திருந்தான் என்றும், அதனைத் தொடர்ந்து கோபால கிருஷ்ணப்பண்பாடு கி.பி நான்காம் நூற்றாண்டில் தொடங்க அவர் ஆபிர்களின் வழிபாட்டுடன் இணைகின்றார். இதனது தொடர்ச்சியினால் வாசுதேவ கிருஷ்ண, கோபால கிருஷ்ண வழிபாடும் இணைந்து கிருஷ்ண வழிபாடாக பரிணமித்தது. வைணவ கடவுள்களாக போற்றப் பட்டவர்கள் ஒவ்வொரு இனக் குழுமத்திற்குமான கடவுளாக தோற்றம் பெற்று பிற்காலத்தில் தோற்றம் பெற்ற ஏனைய இனக்குழுமங்களுடன் இணைந்து விரிவாக்கமடைந்து பொதுவான கடவுள் வழிபாடாக எல்லா மக்களும் போற்றும் பொதுவான கடவுளாக பரிணமித்தார்கள்.

எடுத்துக்காட்டாக, விருஷ்ணிகளின் கடவுளாக சங்கர்சனர் வாசுதேவர், ஆபிர்களின் கடவுளாக கோபால கிருஷ்ணர், பாண்டவர்களின் கடவுளாக கண்ணன் கொள்ளப்பட்டான் என்பதனை எடுத்துக்காட்டலாம். இவ்வாறாக வேதம் சாராப் பாரம்பரியங்களிலும், வேத பாரம்பரியத்தினதும் விளைவாக வைஷ்ணவம் வளர்ச்சியடைந்தது. இருக்கு வேத விஷ்ணு, வேதபாரம்பரியமல்லாத கடவுளோடு கலந்து விஷ்ணுவும் கிருஷ்ணரும் அதியுச்ச கடவுள்களாக மாற்றடைந்தனர். கிறிஸ்த்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் கிருஷ்ணன்


Isbn Number: 978-93-91115-98-2

விஷ்ணுவினுடைய ஒரு அவதாரமாக சமஷ்கிருத காவியங்களிலே எடுத்துக்காட்டப் படுகின்றார்.

சுருக்கமாக நோக்கினால் சிக்கலான அல்லது பலபண்பாட்டு கூட்டினாலான வைணவப் பண்பாட்டினை பின்வருமாறு அணுகலாம். பாகவத பண்பாடு இதற்குள் வாசுதேவ கிருஷ்ண பிராமண வைஷ்ணவப் பண்பாடும் அடங்கும்; என பாகவத கல்வெட்டு கி.மு 115 இவ் வழிபாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும் கேலிடேரஸ் எனும் கிரேக்க நாட்டுத்தூதுவர் தன்னைப்பாகவதராக மாற்றிக் கொண்டதோடு, பாகவதர் வாசுதேவனை வழிபட்டனர் எனக் குறிப்பிடுகின்றார். அத்தோடு இரண்டாம் சந்திர குப்தன் (375-413 CE) பரம பாகவத அல்லது பாகவத வைணவனாக குறிப்பிடப்படுகின்றான். இது பாகவத பண்பாட்டின் தொன்மையைக் காட்டுகின்றது.

அடுத்து பாஞ்சராத்திர பண்பாடு நாராயணணை அடிப்படையாக்க கொண்ட தாந்திரிக வைஷ்ணவப் பிரிவினர். பாகவத மரபில் விஷ்ணு பத்து அவதாரங்களை எடுப்பதாக சித்தரிக்கப்படுகின்றது. ஆனால் பாஞ்சராத்திர மரபில் ‘வியூக’ கோட்பாடு முக்கியத்துவப்படுத்தப்பட்டு கடவுள் நான்கு வியூகமாக வாசுதேவ, சங்கர்ஷன, பிரதியுன்ன, அநிருத்தன் ஆகிய வியுகங்களை அடைகின்றார் எனநம்பப்படுகின்றது.


**Isbn Number: 978-93-91115-98-2**

இவ்வாறாக பாகவத, பாஞ்சராத்திரப் பிரிவினர் வைணவத்தின் முன்னோடிகளாக இருந்துள்ளனர் எனலாம்.

வைணவத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்களாக குப்தர்கள், குசான ஆட்சிக்கால மன்னர்கள் காணப்படுகின்றார்கள். குப்தர் ஆட்சிக்காலத்தில் கி.பி 4-6 வரையான காலத்தில் இராமர் விஷ்ணுவின் அவதாரமாக கொள்ளப்படுகின்ற கலாசாரம் பிரபல்யம் பெற்றிருந்தது (Basham A.L, 1990). என்பது இதற்குச் தக்கசான்றாகும். மேலும் அவர்களது ஆட்சிக்காலத்தில் தோற்றம் பெற்ற கல்வெட்டுக்கள், செப்பேடுகள் என்பன அக்காலத்தில் இடம்பெற்ற வைணவ வளர்ச்சியையும் வைணவ எழுச்சியையும் எடுத்துக்காட்டுகின்றன.

அந்தவகையில் கி.பி 350 க்கும் 1568க்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற மதராஸ் (Matharas) கால வைணவ மறுமலர்ச்சியைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக மாதராஸ் குப்தர்கள் பாஞ்சராத்திரப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தனர் என்றும் அவர்கள் நாராயண, வாசுதேவ கிருஷ்ணனை, விஷ்ணுவோடு அடையாளப்படுத்தி வழிபட்டு வந்தார்கள் என்றும், குப்பத மன்னர்கள் பரமபாகவதர்கள், பரமதெய்வாத, பாவகதஸ்வாமி, நாராயண


Isbn Number: 978-93-91115-98-2

பாடானுத்தியாய, எனப்பல்வேறுவிதமாக குப்த மன்னர்கள் போற்றப்பட்டிருக்கின்றார்கள் என்பதற்கு அவர்களதுகால செப்பேட்டுக் குறிப்புக்கள் சான்று பகிர்கின்றன என சுவீரா ஜெயல்வால் குறிப்பிடுகின்றார். ஆக மாதராஸ் காலத்தில் பாகவதப், பாஞ்சராத்திரப் பண்பாடுகள் அரச ஆதரவோடு நிலவிவந்தது எனலாம்.

ஆரம்பத்தில் பாஞ்சராத்திர வழிபாடு விருஷ்ணிகளிடம் மாத்திரம் காணப்பட்டாலும் அது நாராயணவழிபாடு, விஷ்ணுவழிபாடு என்பனவற்றுடன் இணைந்த பிற்பாடு எல்லோருடைய மதமாகவும் ஆகிவிட்டது. வேதத்தை வலியுறுத்தியவர்கள் பாகவத மரபிற்கு இடம்கொடுத்து வாசுதேவ நாராயண வழிபாட்டினை மேற் கொண்டு பாகவத சம்பிரதாயம் என்ற வைணவத்தைப் பின்பற்றத் தொடங்கினர். இது கி.மு முதலாம் நூற்றாண்டிலே மன்னர்களும் அரசர்களும் பாகவத சம்பிரதாயத்தை சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் அக்காலப்பகுதியில் நாராயண, சங்கர்ஷன, வாசுதேவர் களுக்கு கோயில்ப் பிரகாரங்களைக் கட்டிவைத்தார்கள் என்ற குறிப்பினுடாக வைணவத்தின் தொன்மையை அறிய முடிகின்றது. மேலும், பாகவத சங்கீதைகள் 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் தோன்றின எனவும் வடஇந்தியாவில் தோற்றம் பெற்ற இம்மரபு தென்னிந்தியாவிலும் பரவியது என்றும் அதனை


Isbn Number: 978-93-91115-98-2

ஆழ்வார்களின் பாடல்களில் காணலாம் என வெல்வோன் (Welborn) குறிப்பிடுகின்றார். அத்தோடு இராமாணுஜரும் தனது ஸ்ரீவைஷ்ணவத்தை பாஞ்சராத்திர பாரம்பரியத்தின் அடிப்படையிலே விளக்கினார் எனவும் கூறப்படுகின்றது. வைகாசன மரபு வேதக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இம்மரபு பாஞ்சராத்திர மரபோடு தொடர்பு பட்டதாகவும் வைகாசன சஸ்மாஸ்த்த சூத்திரம் எனும் நூல் குறிப்பிடுவதாக எடுத்துக்காட்டுவர்.

வேதம் சார்ந்த, வேதம் சாராத இருபண்பாட்டினது கருத்துக்களின் சேர்க்கையால் இப்பண்பாடு உருவாகியது. இதேபோல சமாரிட்ட பண்பாடு இது புராண இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சம்பிரதாயம். ஆதி சங்கரரின் சமகாலத்தில் உருவாகியது. இதேபோல ஆழ்வார்பாரம்பரியம், ஸ்ரீவைஷ்ணவ பாரம்பரியம், கௌடிய வைஷ்ணவம், வர்க்காரி வைஷ்ணவம், எனப்பல பரிவுகள் வைணவ சம்பிரதாயங்களா வளர்ச்சியடைந்தன. இவ்வாறான பண்பாடுகளின் ஒட்டுமொத்த வடிவமாகவே வைஷ்ணவம் விளங்குகின்றது எனலாம்.

**முடிவுரை**

வாசுதேவ கிருஷ்ண வழிபாட்டுடன் கோபால


**Isbn Number: 978-93-91115-98-2**

கிருஷ்ண வழிபாடும் இனைந்து மேலும் செழுமையுற்றது. வேதப்பாரம்பரியத்தினதும், வேறுபாரம்பரியங்களினதும் விளைவாக வளர்ச்சியடைந்த வைணவத்திற்குள் இருக்கு வேத விஷ்ணு வேதபாரம்பரியத்தில் இல்லாத (Non Vedic) கிருஷ்ணனுடன் கலந்து இருவரும் வைணவத்தில் அதியுச்ச கடவுளாக மாற்றமடைந்தனர். மேலும் கிருஷ்ணன் விஷ்ணுவினுடைய ஒரு அவதாரமாகவும் சமஸ்கிரத காவியங்களில் கிறிஸ்த்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் நிலைபெற்றான் எனவும் அதனையே பகவக்கீதை பிற்காலத்தில் உள்வாங்கியது என்ற கருத்தும் முன்வைக்கப் படுகின்றது. இவ்வாறான தெய்வங்களின் கலப்புக்களின் இறுதியாக நாராயண வழிபாடு வைணவத்திற்குள் உள்வாங்கப் படுகின்றது இது வைணவத்தை மேலும் பிராமணியமாக்குகின்றது. நரநாராயண வழிபாடு வடநாட்டு இந்துக்களின் மத்தியில் நிலவியது. வேதத்தில் புருஷ நாராயணனாக உள்வாங்கப்பட்டு பின் புருஷநாராயண அர்ச்சுன கிருஷ்ணராக மாற்றமடைகின்றது எனவும் கூறப்படுகின்றது. வேதங்களுக்கு முந்தியகாலம், வேதகாலம் தொட்டு பேசப்பட்டுவந்த வைணவச் சிந்தனையானது வரலாற்று ரீதியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.


**Isbn Number: 978-93-91115-98-2**

**உசாத்துணைநூல்கள்**

[1] *ராமாணுஜ தாதாசிரியர் வரலாற்றில் பிறந்த வைணவம்.* ஸ்ரீ சாராங்ககாணி சுவாமி தேவஸ்தானம், வெளியீடு, கும்பகோணம். (1973)

[2] ராதாகிருஷ்ண பிள்ளை, ம. *பிற்கால வைணவம்.* அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை. (1963)

[3] கோபால தேசிகாசாரியார்,ஸ்ரீ,வ.ந. *திருவாய்மொழி அமுதம்.* அக்சரா வெளியீடு, சென்னை. (2008)

[4] ஜெயராமன், பூ. *ஸ்ரீவைஷ்ணவம் வடகலை தென்கலை சம்பிரதாயங்களுடன்.* அநுராகம், சென்னை. (1998)

[5] வேணுசீனிவாசன். *ஸ்ரீவைஷ்ணவம் என்சைக்ளோபீடியா.* கிழக்குப் பதிப்பகம், சென்னை, (2012)

[6] வரதராய ஐயர். *தமிழ் இலக்கிய வரலாறு.* (கி.பி 1 முதல் 1100), அண்ணாமலைப் பல்கலைக்கழகம். (1979)

[7] ஜகந்நாதராஜா, மு.கு. *வடமொழி வளத்திற்கு தமிழரின் பங்கு.* நியுசெஞ்சரி புக்கவுஸ், சென்னை. (1994)

[8] சுப்பராயலு, இரா. *சைவமும் வைணவமும்* (ஒன்றாய் வேறாய் உடனாய்). அகரம் தஞ்சாவூர். (2019)

[9] சுவீரா ஜெயஸ்வால். *வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.* Indian council of Historical research. (1991)

[10] Sushil Kumar Patel, Dr. *Hinduism in India A Study of Visnu worship*. Amar Prakashan, Delhi. (1992)

[11] Basham, A, L. *The origins and development of classical Hinduism.* Oxford Press. (1990)

[12] Dandekar, R.N. Vaishnavism: An Overview." Encyclopedia of Religion. (1987)

[13] *Vasudeva*. en.wikipedia.org/wiki/V%C4%81sudeva#Evolution_as_a_deity Accessed 15, Dec 2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **Isbn Number: 978-93-91115-98-2**

# தமிழ் இலக்கணச் சொற்றொடர் அமைப்புமுறை

**முனைவர் ப. சசிரேகா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி, சென்னை - 600042.
**ORCiD: https://orcid.org/0000-0002-0301-0744**
**DOI: 10.5281/zenodo.7998068**

## ஆய்வுச் சுருக்கம்

*ஒரு மொழியில் இடம்பெறும் சொற்கள் அனைத்தும் பொருளை தரக்கூடியதாக இருக்கும். சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து பொருள் தரக்கூடியத் தொடராக மாற்றமடைகின்றது. ஒரு சொல் சூழலுக்கு ஏற்ற வகையில் பொருளைத் தரும். இம்மாற்றம் மொழியையும் பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டே ஏற்படுகின்றது. அதனால் மொழிக்கும் பண்பாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதைப் போல, பண்பாட்டுக்கும் சொற்றொடருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. தலைமுறை தலைமுறையாக பின்பற்றிய சொற்றொடர்கள் மொழிக்கு மொழி மாறுபட்டு அமைகின்றது. தொல்காப்பியர் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் ஆகிய இயல்களில் சொற்றொடர் அமைப்பு பற்றி கூறியுள்ளார். இலக்கண நூலார் கூறிய சொற்றொடர்கள்*

*பற்றியும், பேச்சு வழக்கில் பின்பற்றப்படும் சொற்றொடர்களின் அமைப்பு முறை பற்றியும் அம்முறைகளின் வகைகள் பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** வேற்றுமை மயங்கியல், பேச்சு வழக்கு, கிளவியாக்கம், சொற்றொடர் அமைப்பு, வேற்றுமையியல்.

**முன்னுரை**

சொற்கள் தொடர்ந்து அமையக்கூடிய அமைப்பை சொற்றொடர் அமைப்பு என்பர். சொற்றொடர் அமைப்பு மாறாத தன்மையுடையது. சில இடங்களில் மொழியின் இயல்புக்கு ஏற்ப அமையும். சொற்றொடர் அமைப்பு பல நிலைகளில் வருகின்றது. சொற்கள் தொடர்ந்து அமையும்போது பல மாற்றங்களைப் பெறுகிறது. ஆனால், சொற்றொடரமைப்பில் மாறுதல்களைக் காண முடியவில்லை. சொற்றொடரில் மாற்றம் ஏற்பட்டாலும் அம்மொழியின் இயல்புக்கு ஏற்றவாறு அமைகின்றது. சொற்றொடரமைப்பு ஒருமொழியின் தனிச் சிறப்புகளை எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது.

தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் ஆகிய இயல்களில் இடம்பெற்றுள்ள சொற்றொடர் அமைப்பு


**Isbn Number: 978-93-91115-98-2**

பற்றியும், தொல்காப்பியரும் பவணந்தியாரும் இன்றைய இலக்கண அறிஞரும் கூறிய சொற்றொடர் அமைப்பு பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கண நூலில் சொற்றொடர் அமைப்புமுறை**

கிளவியாக்கத்தில் எழுவாய், பயனிலை, பெயரடை, பெயர் போன்றவற்றில் காணப்படும் பல சொற்களின் வைப்பு முறைகளும், இரு வாக்கியங்கள் இணையும் பொழுது ஏற்படும் மாற்றங்களும் இடம்பெற்றுள்ளது. வேற்றுமை இயலில் உருபுகளைக் கூறி அவ்வேற்றுமைகள் வினைச் சொற்களை ஏற்பது சொற்றொடர் அமைப்பு சுட்டுவதாக உள்ளது.

தொல்காப்பியர் தொடரியலை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் என்னும் இயல்களில் எந்தெந்த வினைகள் எந்தெந்த உருபுகளுடன் வருகின்றன என்பதையும் சில வினைகள் சில வேற்றுமை உருபுகளோடு வரும் போது தம் பொருளை இழந்து நிற்பதையும் கூறியுள்ளார்.

**கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு**
**உரிமையும் உடைத்தே கண் என்வேற்றுமை**
**(தொல்.சொல்.வேற்றுமை மயங்கியல்., நூ. 2)**

என்ற நூற்பாவில் இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் 'சார்ந்தான்' என்ற வினையோடு வரும்போது மயங்குகின்றது.

 Isbn Number: 978-93-91115-98-2

ஒரு தொடர் பல பொருள்களைத் தருகின்றது. இதனை இரண்டு வகையாகக் கூறலாம்.

- பல பொருள் தரும் ஒரு சொல்லால் உண்டாகும் சொல் மயக்கம்.
- சொற்களின் அமைப்பால் உண்டாகும் அமைப்பு மயக்கம். (எ.கா.) 'மா கண்டேன்' என்பது 'மாமரத்தினைக் கண்டேன்' என்றும் 'விலங்கினைக் கண்டேன்' என்றும் இரு பொருள்படும். 'கொன்ற புலி' என்ற தொடர் புலி கொன்றதா? அல்லது புலியைக் கொன்றார்களா? என்ற இரு பொருளைத் தருகின்றது.

**தடுமாறு தொழிற் பெயர்க்கும் இரண்டும் மூன்றும்**
**கடிநிலை யிலவே பொருள் வயினான**

**(தொல்.சொல்.வேற்றுமை மயங்கியல்., நூ. 11)**

என்னும் நூற்பாவில் பொருள் மயக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய சொற்றொடரமைப்பு கருத்துக்கள் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. சொற்றொடரமைப்பு முதலில் ஆராய்ந்த பெருமை தொல்காப்பியரையே சேரும்.

**சொற்றொடர் அமைப்பு முறைகள்**

1. தொடரமைப்பு
2. தொடர் முறை
3. தொடர் இயைபு


Isbn Number: 978-93-91115-98-2

4.மாட்டெறிவு

**1. தொடரமைப்பு:**

ஒரு சொல் தனியே நின்று பொருள் கொடுத்தாலும், அந்தச் சொல்லை அடுத்து வரும் அண்மைச் சொல் அப்பொருளைத் தெளிவாக்குகின்றது. அண்மைச் சொல்லே, சொல்லின் தொடர் இலக்கணத்தைச் சுட்டுகிறது. அண்மைச் சொல்லோடு இணைந்து வரும் அமைப்பே தொடரமைப்பு ஆகும். வேற்றுமைப் பொருள் பற்றி வரும் தொடரை வேற்றுமைத் தொடரென்றும் பிறவற்றை அல்வழித் தொடரென்றும் கூறுவர். தமிழின் தொடரமைப்பு இவ்விரு பிரிவுகளைத்தான் அடிப்படையாகக் கொண்டுதான் இயங்குகின்றது.

**2. தொடர் முறை:**

சொற்கள் தொடர்ந்து அமையும் முறை தொடர்முறை. சொற்கள் தொடர்ந்து அமைவதில் ஒவ்வொரு மொழிக்கும் தனிப்பட்ட சிறப்பு உண்டு.

- எழுவாய் முதலிலும் வினைமுற்று இறுதியிலும் வருதல். (எ.கா.) கண்ணன் வந்தான்.
- பெயருக்குமுன் பெயரெச்சம் வருதல். (எ.கா.) வந்த பையன்
- வினைக்குமுன் வினையெச்சம் வருதல். (எ.கா.) வந்து போனான்.


Isbn Number: 978-93-91115-98-2

- எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் செயப்படுபொருள் வருதல். (எ.கா.) அவன் மரம் வெட்டினான்.
- இயற்பெயருக்கு முன் சிறப்புப் பெயர் வருதல். (எ.கா.) சீத்தலைச் சாத்தனார்.

**3. தொடர் இயைபு:**

எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் இயைபு இடம்பெற்று சொற்றொடராக அமைகின்றது.

**வினையில் தோன்றும் பாலறி கிளவியும்**
**பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்**
**மயங்கல் கூடா தம் மரபினவே**

**(தொல்.சொல். கிளவியாக்கம்., நூ. 11)**

இயைபு வரும்பொழுது, சில வழுக்களும் ஏற்படுவது உண்டு. அவ்வாறு வழுக்கள் வந்தால் வழுவமைதியாக இலக்கண நூலார் ஏற்றுக்கொள்கின்றனர்.

- உயர்திணையும் அஃறிணையும் கலந்து வரும்போது வியங்கோள் வினைமுற்று ‘க’ பயனிலையாக வருகின்றது. (எ.கா.) ஆவும் ஆயனும் செல்க.
- தன்மைப் பெயர்ச்சொல்லும் அஃறிணைப் பெயர்ச்சொல்லும் கலந்து வருதல். (எ.கா.) யானும் என் எஃகமும் வந்தோம்.


Isbn Number: 978-93-91115-98-2

**4. மாட்டெறிவு:**

தொடரமைப்பில் சொற்களுக்கு ஏற்ற இடத்தில் இச்சொல்தான் வரும் என்று முடிவுசெய்து, தொடராக அமைப்பது மாட்டெறிவு ஆகும்.

**(எ.கா.) அவன் வந்தான், அவள் வந்தாள்**

**அது வந்தது, அவர் வந்தார்**

எழுவாய் உணர்த்தும் பாலும் பயனிலையில் வருகின்ற பாலும் இவ்வாறுதான் வரவேண்டுமென வெளிப்படையாக வருகிறது. இதனையே மாட்டெறிவு என்கின்றனர்.

(எ.கா.) வந்தான் என்றால் அவன் வந்தான் என்றும், வந்தாள் என்றால் அவள் வந்தாள் என்றும், வந்தது என்றால் அது வந்தது என்றும் பொருள் உணர்த்துகிறது.

**பல வகையான சொற்றொடர் அமைப்புமுறைகள்**

சொற்றொடர் அமைப்புமுறை மொழிக்கு மொழி மாறுபடுகிறது. தமிழர் மனத்தில் பதிந்துவிட்ட சொற்றொடரமைப்புப் பற்றி மு. வரதராசனாரும் மொழியியல் அறிஞர்களும் பலவகைகளாக வகைப்படுத்துகின்றர்.

- **எழுவாய் + பயனிலை**
- **ஆண்பால் எழுவாய் + ஆண்பால் பயனிலை**
- **பெண்பால் எழுவாய் + பெண்பால் பயனிலை**


Isbn Number: 978-93-91115-98-2

- **பலர்பால் எழுவாய் + பலர்பால் பயனிலை**
- **ஒன்றன்பால் எழுவாய் + ஒன்றன்பால் பயனிலை**
- **பலவின்பால் எழுவாய் + பலவின்பால் பயனிலை**
- **தன்மைப்பன்மை எழுவாய் + தன்மைப்பன்மை பயனிலை**
- **முன்னிலை ஒருமை எழுவாய் + முன்னிலை ஒருமை பயனிலை**
- **முன்னிலை பன்மை எழுவாய் + முன்னிலை பன்மை பயனிலை**
- **எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை**
- **பெயரெச்சம் + பெயர்**
- **வினையெச்சம் + வினை**

**(மு.வரதராசன், மொழி நூல், ப.283)**

என்று பலவகைகளில் சொற்கள் தொடர்களாக அமைந்துள்ளது.

- எழுவாயும் பயனிலையும் திணை, பால், இடம் என்பவற்றால் ஒத்திருக்கிறது. (எ.கா.) அவள் வந்தாள்
- எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் செயப்படுபொருள் வரும். சில இடங்களில் மாறுபட்டும் வருகின்றது. (எ.கா.) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார், திருக்குறளைத் திருவள்ளுவர் இயற்றினார்.


Isbn Number: 978-93-91115-98-2

- சொற்றொடர் எழுவாயில் தொடங்கிப் பயனிலையில் முடியும். (எ.கா.) கண்ணன் நடந்தான்.
- பயனிலை, பொதுவாகச் சொல்லின் இறுதியில் வருமென்றாலும் விரைவு வாக்கியத்தில் முதலிலும் இடையிலும் வரும். (எ.கா.) தலைவர் வந்தார், வந்தார் தலைவர்.
- பெயரடை பெயர்க்கு முன்பாக வரும், வினையடை வினைக்கு முன்பாக வரும். (எ.கா.) நல்ல பையன் (பெயரடை), வேகமாக வந்தான் (வினையடை).
- பெயரடை பல நிலைகளில் வருதல்.
- வினைத்தொகையில் பெயரடை வருகின்றது. (எ.கா.) விளை நிலம், ஒலிகடல்.
- பண்பை உணர்த்தும் பெயரடை வருகின்றது. (எ.கா.) ஒண்டமிழ், தண்புனல்.
- திசை உணர்த்தும் பெயரடையாக வருதல். (எ.கா.) கீழ் எல்லை, குடதிசை.
- வினையடை பெயரடை பல நிலைகளில் வருதல். பெயர்ச் சொற்களுக்கு 'ஆக' என்ற செயவெயெச்சம் வருதல். (எ.கா.) வேகமாக ஓடினான்.

  ஆகி / ஆய் என்ற இறந்தகால வினையெச்சத்தைச் சேர்க்க வினையடை தோன்றுகிறது. (எ.கா.) தனியாய் வருதல்.

 **Isbn Number: 978-93-91115-98-2**

பண்புப் பெயர் சொற்கள் வினையடையாக வருதல். (எ.கா.) கோபமாகப் பார்த்தான்.

- முன், பின், முன்பு, பின்பு, முன்னம், பின்னம், அன்று, என்று, அவற்றை, இவற்றை போன்றவை காலத்தைச் சுட்டும். வினையடைகளாக வருதல். (எ.கா.) முன்னம் வந்தோம்.
- மேல், கீழ், அங்கு, இங்கு, ஆங்கு, ஆண்டு, ஈண்டு, எங்கு, யாண்டு போன்றவை இடத்தைச் சுட்டும் வினையடைகளாக வருதல். (எ.கா.) எங்குப் பார்த்தான்.
- பெயரெச்சங்கள் பெயர்க்கு முன்பாக வரும். (எ.கா.) படித்த பையன்
- வினையெச்சங்கள் வினைக்கு முன்பாக வரும். (எ.கா.) வெந்து தணிந்தது
- ஆறாம் வேற்றுமை உருபும் ஐந்தாம் வேற்றுமை உருபும் பெயர் கொண்டு முடியும். (எ.கா.) எனது கை. நகரின் மேற்கே சிதம்பரம்.
- நான்காம் வேற்றுமை சில இடங்களில் பெயரைக் கொண்டு முடிதலும் உண்டு. (எ.கா.) அவனுக்குப் பகை நான், அவருக்கு மகன்.
- இடைச்சொல் வருதல். பல பெயர்கள் தொடர்ந்து வரும்போது ஒவ்வொரு பெயரின் இறுதியிலும் 'உம்'


**Isbn Number: 978-93-91115-98-2**

என்னும் இடைச்சொல் வருகின்றது. (எ.கா.) சேரனும் சோழனும் பாண்டியனும் தமிழகத்தை ஆண்டனர்.

- விடை வாக்கியங்களுக்கும் வினா வாக்கியங்களுக்கும் வேறுபாடு இல்லை எனலாம். வினா வாக்கியத்தின் இறுதியில் 'ஆ' சேர்க்கப்படுகிறது. விடை வாக்கியத்தில் சுட்டுப்பெயர் வந்தால் வினைப்பெயர் சேர்க்கப்படுகிறது. (எ.கா.) மீனா வந்தாளா?, மீனா வந்தாள், எங்கே கண்டாள்?, அங்கே கண்டாள்.
- தொகுதிப் பெயரில் உம் வருதல், (எ.கா.) மூவேந்தரும் போற்றினர்.
- ஆணா, பெண்ணா என்று அறியாதபோது இரு திணைக்கும் பொதுவான ஒரு வினைமுற்று வருதல். (எ.கா.) அங்கே நிற்பவர் கண்ணனா? இல்லை வள்ளியா?
- தன்மை ஒருமை எழுவாயுடன் முன்னிலை எழுவாய் ஒரு சொற்றொடரில் வரும்போது பயனிலை பன்மையாய் வரும். (எ.கா.) நானும் நீயும் போனோம், நானும் அவனும் போனோம், நானும் நீயும் அவனும் போனோம்.
- எழுவாய் முன்னிலைப் படர்க்கையாக வந்தால் முன்னிலைப் பன்மை வினைப் பயனிலையாக வரும். (எ.கா.) நீயும் அவனும் படித்தீர்.


Isbn Number: 978-93-91115-98-2

- எழுவாய் உயர்திணையும், அஃறிணையும் வந்தால் உயர்திணைப் பன்மையில் முடியும். (எ.கா.) நானும் கிளியும் பழம் தின்றோம்.
- செய்யுளிலும் உணர்ச்சி வசப்படும் போதும் உரை நடையிலும் வினைச்சொல் முதலில் வரும். (எ.கா.) கண்டனன் கற்பினுக் கணியை, கண்டேன் அவளை.
- தான், தாம், தாங்கள் என்னும் தற்சுட்டுப் பெயர் மரியாதைப் பெயராக வருதல். (எ.கா.) தாங்கள் வந்தீர்.
- பயனிலை பெரும்பாலும் வினைமுற்றாக வரும். சில இடங்களில் பெயராகவும் வரும். (எ.கா.) அவன் செந்தில்.
- அல்லது என்னும் சொல் தொடரில் வருதல். (எ.கா.) சோறு அல்லது கறி உண்டான்.
- ஒரே சொல் விரைவு பற்றியோ, உணர்ச்சி பற்றியோ மீண்டும் மீண்டும் வரும் சொற்தொடர் அடுக்குத் தொடர் ஆகும். (எ.கா.) தீ தீ, ஓடினான் ஓடினான், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினான்.
- வேறு, உண்டு, இல்லை என்னும் சொல் தொடரில் வருதல். **வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன (நன்னூல், நூ. 339)** (எ.கா.) அவர் வேறு, நண்பன் உண்டு, நண்பன் இல்லை.


Isbn Number: 978-93-91115-98-2

- ➢ எண்ணுப்பெயர்களில் ஒன்று, ஒரு எண்கள் பெயர்க்குப் பின் வருதல். (எ.கா.) மாடு ஒன்று, ஒரு மாடு.
- ➢ பெயருக்கு முன் ஒன்று தவிர பிற எண்கள் வருதல். (எ.கா.) இரண்டு மாடு, மூன்று மாடு.
- ➢ காலம் மயங்கி வருதல் பேச்சு வழக்கில் உள்ளது. (எ.கா.) இதோ வந்தேன்.
- ➢ அடை, சினை, முதல் பண்புப் பெயரில் வருதல். (எ.கா.) செங்கால் நாரை.
- ➢ வினையாலணையும்பெயராக வருதல். (எ.கா.) வந்தவன் நல்லவன்.

**முடிவுரை**

சொற்கள் தொடர்ந்து அமையக்கூடிய அமைப்பு சொற்றொடரமைப்பு ஆகும். சொற்றொடர் அமைப்பு மாறாத தன்மையுடையதாகவும், சில இடங்களில் மொழியின் இயல்புக்கு ஏற்ப சொற்றொடர் அமைப்பு பல நிலைகளில் வந்துள்ளன. சொற்றொடர் அமைப்பு தொடரமைப்பு, தொடர் முறை, தொடர் இயைபு, மாட்டெறிவு என்ற நான்கு நிலைகளில் வந்துள்ளது.

பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், வேற்றுமையுருபுகள், பெயரடை, வினையடை, இரு திணைக்கும் பொதுவான ஒரு வினைமுற்று, உம் என்னும் இடைச்சொல், தான், தாம், தாங்கள் என்னும் தற்சுட்டுப்


Isbn Number: 978-93-91115-98-2

பெயர், எண்ணுப்பெயர், அடுக்குத் தொடர், விடை வாக்கியம், வினா வாக்கியம், பண்புப் பெயர் போன்ற தொடர்களில் மொழியின் இயல்புக்கு ஏற்றவாறு சொற்றொடரமைப்பு அமைந்துள்ளது.

தொல்காப்பியரும் பவணந்தியாரும் இன்றைய இலக்கண அறிஞரும் எந்தெந்த வினைகள் எந்தெந்த உருபுகளுடன் வருகின்றது என்பதையும் சில வினைகள் சில வேற்றுமை உருபுகளோடு வரும் போது தம் பொருளை இழந்து நிற்பதையும், சொற்றொடர் அமைப்பு முறைகள் மற்றும் வகைகள் குறித்தும் இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

[1] அடிகளாசிரியர், (பதி.ஆ.). இளம்பூரணர் உரை. *தொல்காப்பியம்-சொல்லதிகாரம்.* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1998.

[2] இராசாராம், சு. *இலக்கணவியல் - கோட்பாடுகளும் மீக்கோட்பாடுகளும்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2010.

[3] இளவரசு, சோம. *நன்னூல் விருத்தியுரை.* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1990.

 Isbn Number: 978-93-91115-98-2

[4] சுந்தரமூர்த்தி, கு. (பதி.ஆ.). *தொல்காப்பியம்-சொல்லதிகாரம்.* கல்லாடனார் விருத்தியுரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1965.

[5] *தொல்காப்பியம்-சொல்லதிகாரம்.* நச்சினார்க்கினியர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1962.

[6] *தொல்காப்பியம்-சொல்லதிகாரம்.* சேனாவரையர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1971.

[7] மு.வரதராசன். *மொழி நூல்.* பாரி நிலையம், சென்னை, மறு பதிப்பு - 2005.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

# கட்டமைப்பு நோக்கில்

# *ஆண்டாள் பிள்ளைத்தமிழ்*

**ஜெ. பா. சாம் செல்வகுமார்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா.ம.ச.ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை – 19.
ORCiD: https://orcid.org/0000-0001-9205-0539
**DOI: 10.5281/zenodo.7998089**

**ஆய்வுச்சுருக்கம்**

*சிற்றிலக்கியங்களுள் பெருமையுடன் பேசப்படுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமேயாகும். ஏனெனில் பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடுவது கடினமான ஒன்று என்று தமிழிலக்கிய ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில் பிள்ளைத்தமிழில் ஒவ்வொரு பருவத்திற்கும் உரித்தான உணர்வுகளை மிகையின்றி கொண்டுவருதல் வேண்டும். சிற்றிலக்கியங்கள் கி.பி 8 – ஆம் நூற்றாண்டுமுதல் பெருகத் துவங்கின. சங்க காலத்தில் இது போன்ற இலக்கியங்கள் உருவாகவில்லை எனலாம். இந்த கட்டுரை ஆண்டாள் பிள்ளைத்தமிழை கட்டமைப்பு நோக்கில் பகுப்பாய்வு செய்கின்றது.*

**திறவுச்சொற்கள்:** கட்டமைப்பு நோக்கு, *ஆண்டாள் பிள்ளைத்தமிழ்.*

## முன்னுரை

ஒவ்வொரு மன்னர்களின் காலகட்டத்திலும் ஒவ்வொரு இலக்கிய வகைகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளன. அவ்வகையில் நாயக்கர் ஆட்சி காலத்தில் மிகுதியாகத் தோற்றம் பெற்றவை சிற்றிலக்கியங்களே ஆகும். இந்த சிற்றிலக்கியங்களைப் பிரபந்தங்கள் என்றும் அழைப்பர். பிரபந்கம் என்ற சொல்லிற்கு நன்றாகக் கட்டப்பட்டது என்று பொருள். சிற்றிலக்கியங்கள் இறைவனையோ, மன்னனையோ மட்டும் பாட்டுடைத் தலவனாக வைத்துப் பாடாமல் சாதாரண மக்களையும் பாட்டுடைத் தலைவனாக்கிப் பாடப்பட்டவையாகும். இந்த சிற்றிலக்கியங்களை 96 வகைகளாகப் பிரிப்பர். அவ்வகைகளுள்; பிள்ளைத்தமிழும் ஒன்றாகும். ஆண்டாள் பிள்ளைத்தமிழின் ஆசிரியர், ஆண்டாள் சந்திரகலா மாலையைப் பாடிய வில்லி என்பவரே ஆவார். இவர் ஆண்டாளைப் பாட்டுடைத் தலைவியாக்கி, குழந்தையாக உருவகித்துப் பாடியுள்ளார்.

## பிள்ளைத்தமிழ் விளக்கம்

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தலைவன் – தலைவியைக் குழவிப் பருவத்தில் அமைத்துப் பாடும் பாங்கினதாக அமைவதால் தனித்தன்மையும் சிறப்பிணைவும் உடையதாகின்றது. பிள்ளைத்தமிழில்


Isbn Number: 978-93-91115-98-2

இறைமை மட்டுமின்றி மனிதத் தலைமையும் இடம்பெறுவதுண்டு, பத்துப் பருவங்களாகப் பாடுதல், பருவந்தோறும் பத்துப் பத்துப் பாடல்கள் அமைத்தல், நீண்ட ஆசிரியச் சந்த விருத்த யாப்புப் பயன் கொள்ளுதல் என்பன பொதுவிதிகள் எனினும் சிற்சில வேறுபாடுகள் அமைவதும் உண்டு. பன்னிரு பருவங்கள் பாடுதல், பருவம் தோறும் ஒன்று, மூன்று, ஐந்து அல்லது ஏழு பாடல்கள் அமைத்தல், கடவுள் அல்லது தலைவனைக் குழந்தையாகக் கருதிப் பாடாமல் பொதுமையைக் கொண்டு குழந்தையையே பாடுதலும் உண்டு.

**சில பிள்ளைத்தமிழ் நூல்கள்**

திருமாலின் அவதாரமான கண்ணனின் குழவிப் பருவத்தைப் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் போன்றோர் பலவிதமாகப் பாடியதில் கருக்கொண்ட இவ்விலக்கிய வகை ஒட்டக்கூத்தரின் குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ் வாயிலாகத் தனியிலக்கியமாக உருவாகியது. முன்னைப் பாடிய குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழிற்கு மாறாக இறையைப் பாடிய அந்தகக்கவி வீரராகவரின் சேயூர் பிள்ளைத்தமிழும், இறைவியைப் பாடியதை, குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழும் காட்டுகின்றன. இசுலாமியர், கிறித்தவரும் இவ்விலக்கிய வகைகளைக் கையாண்டுள்ளனர். சான்றாக பிச்சை இபுராஹிம்


Isbn Number: 978-93-91115-98-2

புலவரின் நாகூர் பிள்ளைத்தமிழ், குற்றாலத்தின் இயேசுநாதர் பிள்ளைத்தமிழையும் கூறலாம்.

**பிள்ளைத்தமிழ் பருவங்கள்**

பிள்ளைத்தமிழில்; ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையுண்டு. இரண்டு பிள்ளைத்தமிழிற்கும் பொதுவான பருவங்களாக காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, என்பனவற்றைக் கூறுவர். சிற்றில், சிறுதேர், சிறுபறை, என்பன ஆண்பாற் பிள்ளைத்தமிழிற்கும் கழங்கு, அம்மானை, ஊசல் என்பவை பெண்பாற் பிள்ளைத்தமிழிற்கும் உரியனவாகும். கழங்கிற்குப் பதிலாக நீராடல் பருவம் அமைத்துப் பாடப்படுதலும் உண்டு. முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம் ஆகியவை சிறப்புடன் பேசப்பட்டாலும் பெண்பால் பிள்ளைத்தமிழின் சிறப்பு அம்மானையில் முழுமையாக வெளிப்படுவதைக் காணலாம்.

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குழந்தையின் மூன்றாவது திங்களில் தொடங்கி இருபத்தொன்றாம் திங்கள் வரையுள்ள காலம் இரு திங்களுக்கு ஒரு பருவமெனப் பகுத்துக் கொள்ளப்படும். அதாவது 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21 எனப் பத்துப்பருவங்கள். முதல் ஏழு பருவங்கள் இருபாலருக்கும் பொதுவானது. இறுதி 3 பருவங்கள் வேறு வேறு அஃதென்னவென்றால் கடைசி


Isbn Number: 978-93-91115-98-2

மூன்று பருவங்களிலும் மாதத்திற்குப் பதிலாக வருடங்களைக் கொள்வதே பொருத்தம் என்று கூறுவாரும் உண்டு.

***ஆண்டாள் பிள்ளைத்தமிழ்***

ஆண்டாளைப் பாட்டுடைத் தலைவியாக்கி, குழந்தையாக உருவகித்துப் பாடிய நூல் ஆண்டாள் பிள்ளைத்தமிழ் ஆகும். ஆண்டாள் சந்திரகலாமாலை பாடிய வேயர் குலத்தைச் சேர்ந்த வில்லி என்பவரே இந்நூலையும் படைத்ததாகக் கூறுவர். ஆழ்வார்கள் பெண்தன்மையோடு நாயகி பாவனையில் திருமாலை நாயகனாக அனுபவித்தனர். திருமாலின் நாயகியான பிராட்டியே பெண்ணாகப் பிறந்து ஆண்டாள் என்னும் திருநாமம்; ஏற்று திருமாலுக்குப் பூச்சூட்டி மாலையிட்டு மணாளனாக வரித்துக் கனவு கண்டு பாடிய பனுவல்களே நாச்சியார்திருமொழியும், திருப்பாவையுமாகும்.

சிறு குழந்தை வடிவினிலே தெய்வம் வந்து பேசுதம்மா என்ற சொற்கோவையானது குழந்தையும், தெய்வமும் ஒன்றெனக் குறிக்கிறது. மனித குலத்தின் எதிர்காலத்திற்கான அடிக்கோள் பிள்ளைப் பருவத்திலேயே நிலைநாட்டப்படுகிறது. ஆண்டவனை குழந்தையாகப் பாவிக்கும் அன்பான தாயுள்ளம் கொண்டவர்கள் மெய்யடியார்கள். சைவர்களோ, வைணவர்களோ, எவராக இருப்பினும் இது போன்ற


Isbn Number: 978-93-91115-98-2

மனப்போக்கில் இருப்பவர்களால் மட்டுமே பிள்ளைத்தமிழ் இலக்கியம் படைப்பதற்கு இயலும். கிறிஸ்தவ சமயமும் குழந்தை ஏசுபிரானைப் பேசுகின்றது. பிறவா யாக்கைப் பெரியோனான சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய பிள்ளைத்தமிழ் நூற்கள் தமிழ்மொழியில் இல்லை. ஆனாலும் நாராயணனின் அவதாரங்களான இராமன், கண்ணன், ஆகியோர் மனிதரைப் போலவே குழந்தையாகப் பிறந்ததாகப் புராணம் பேசுவதால் இயல்பாக திருமாலைக் குழந்தையாகக் கண்டு பிள்ளைத்தமிழ் பாட வைணவர்களால் முடிந்திருக்கிறது. ஆழ்வார்களுள் ஒருவரான குலசேகர ஆழ்வாரின் தாலாட்டு மனதை உருக்குகின்ற வண்ணம் அமைந்துள்ளது. இதனை,

**மன்னுபுகழ்க் கோசலையின் மணிவயிறு**
**வாய்த்தவனே**
**தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய் –**
**செம்பொன்சேர்**
**கன்னிநன்மா மதில் புடைசூழ் கணபுரத்தின்**
**கருமணியே**
**என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ**

**(ஆண்டாள், ப. 223)**


Isbn Number: 978-93-91115-98-2

பெரியாழ்வார் குழந்தையாகக் கண்ட கண்ணனை ஆண்டாள் தன்னுடைய தலைவனாகக் காண்கிறாள். பெரியாழ்வார் காலத்திற்குப் பிறகு பெருமை குன்றிய பிள்ளைத்தமிழ் நூல்கள் 17, 18 – ஆம் நூற்றாண்டுகளில் மறுபிறப்பெடுத்துள்ளன. ஆண்டாள் பிள்ளைத்தமிழில் பேசப்படுகின்ற பருவங்களின் எண்ணிக்கை பதினொள்று ஆகும். இதில் மொத்தம் 118 பாடல்கள் இடம்பெற்றுக் காணப்படுகின்றன. மேலும் இதில் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வாரானைப் பருவம், ஆம்புலிப் பருவம், சிற்றில் பருவம், சிறு சொற்றுப் பருவம், பொன்னூசல் பருவம், காநோன்புப் பருவம் என 11 பருவங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் நூலின் காப்பு, அவையடக்கம், பழிச்சினார்ப்பரவல், நூல் பயன் என்னும் பகுதிகளும்ம் காணப்படுகின்றன.

**காப்புப் பருவம்**

பாட்டுடைத்தவியாகிய ஆண்டாளைக் காத்தருளுமாறு திருமால் போன்ற தெய்வங்களை வேண்டுவதைக் காப்புப்பருவம் மொழிகின்றது. இப்பருவத்தில் மற்ற பிள்ளைத்தமிழ் நூல்களில் 10 பாடல்கள் மட்டும் இடம்பெற்றுக் காணப்படும். ஆனால் ஆண்டாள் பிள்ளைத்தமிழில் சில பருவங்களில் 11 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிறு குழந்தைகளைக்

 Isbn Number: 978-93-91115-98-2

காக்க வேண்டி இறைவனை நினைத்து அவர்களின் கையில் காப்புக் கயிறு கட்டும் வழக்கம் இன்று வரை வழக்கத்திலுள்ள ஒன்றாகும். மேலும் பாட்டுடைத் தலைவியாகிய குழந்தைப் பருவத்து ஆண்டாளைக் காத்தருளுமாறு திருவரங்கன், வடமலைவாணன், சோலைமலை அழகர், வடபெருங்கோயிலான், செண்டலங்காரன், திரு அனந்தாழ்வான், புள்ளரசன், சக்கரத்தாழ்வான், ஐவர் மடந்தையர் ஆகியோருடன் வேதத்தையும் வேண்டுவதாக இப்பருவத்தை ஆசிரியர் இயற்றிக் கூறியுள்ளார்.

இதனை, சீர்கொண்ட வெண்திரைப் பால்ஆழி யுள்நின்று சீதரன் பணிவிடையினால் திருமல்லி நாட்டினுள் பூந்துழாய்க் காட்டினுள் சீவில்லி புத்தூர் எனப் பேர்கொண்ட பேரின் வீட்டில்மறை யவர்பிரான் பெற்றதெள; அமுதெனவரும் பெண்ணரசியைக் காக்க,

> **மூதண்ட முண்டகப் பரமகற் பாந்தத்துமுந் நீர்கொண்டவாறு உணர்ந்துஆல் இளந்தளிரின் மேல் நிலைபெறு பசுங்குழவியாய் நெடுநாள் அகத்திட்ட பல்உயிரை வினைவழி நிறுத்தப் பெயர்த்தும்வனசத் தார்கொண்ட திருவுந்தி மடுவில் அயனைத்தந்த தாதைவால் வளைமுத்த நீர்த் தரங்கம்மொண்டு எறிதென் அரங்கத்து**

 Isbn Number: 978-93-91115-98-2

**அரவணைச் சக்ராயுதக் கடவுளே (ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 15)**

காப்புப் பருவத்துப் பகுதியில் 15வது பாடலில் சக்கராயுதக் கடவுளையும், 17வது பாடலில் சோலை மலை அழகரையும், 18வது பாடலில் வடபெருங் கோயிலானையும், 19வது பாடலில் செண்டலங் காரனையும், 21வது பாடலில் புள்ளரசனையும், கூறி அவர்கள் அனைவரையும் விளித்து ஆண்டாளைக் காக்க வருமாறு அழைக்கிறார் இதன் ஆசிரியர். மேலும் 11 ஆழ்வார்களைத் துயிலெழுப்புவது மற்றும் வாழ்த்துவது போன்ற பாடல்களும் இடம்பெறுகின்றன.

**செங்கீரைப் பருவம்**

கீர் என்ற சொல்லானது சொல், கிளி என்ற பொருட்களை உணர்த்தும். இப்பருவம் குழந்தைகள் மழலைமொழி பேசும் பருவம். செங்கீரை என்பதற்கு சிவந்த கீரைத்தண்டு போன்ற கை எனவும் பொருள் கொள்ளலாம். மழலை இன்பத்தில் ஆழ்த்திய குழந்தையைச் செங்கீரை ஆடுமாறு பணிக்கின்ற பருவம். குழந்தைகள் ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி, இரு கைகளையும் தரையில் பதிய வைத்து, தலை நிமிர்ந்து, முகமசைய ஆடுவதே செங்கீரை ஆடலாகும். காப்புப் பருவத்தைப் போலவே செங்கீரைப் பருவத்திலும் பதினொரு பாடல்கள் அமைந்துள்ளன.


Isbn Number: 978-93-91115-98-2

ஆண்டாளை செங்கீரை ஆட வருமாறு அழைக்கின்ற செங்கீரைப் பருவப் பகுதியில் கஜேந்திரமோட்சம் பற்றிய புராணச் செய்தி இடம்பெற்றுள்ளது. அதுமட்டுமல்லாமல் 32 – வது பாடலில் இலக்குமியை ஈன்ற தாயாக தாமரை உருவகிக்கப்படுகிறது. துளசியைவிட தானே உயர்ந்ததாக தாமரை மலர் துளசியை இகழ்ந்த காரணத்தால் ஆண்டாள் துளசியில் தோன்றினாள் என்ற செய்தியும் இடம்பெறுகிறது. இதனை,

**கான்உலா முல்லையில் குல்லையைத்**

**துழனிபயில் கழனியில் கமலம் எனைநீ**

**காட்டில்நாட் டினில்ஒப்பது அன்று பொற்**

**புடையபொற் கன்னியைப் பெற்றளித்தேன்**

**ஞானபூ ரணமாயன் அவயங் கட்குஉவமை**

**நாட்டமணி வடம்ஆயினேன்**

**நான்என்று நீஉவமைமணிமாலை ஆகியும்**

**நளினியைப் பெற்றிலாயால்**

**ஆனதால் எனஅவ மதித்ததா மரையினை**

**வெறுத்து அந்தரம் வீறுஎய்தவே**

**ஆயர்பா டிச்செல்வர் வில்லிபுத் தூர்அதனுள்**

**அகிலமன் னுயிர்தழைப்பான்**

**தேன்அறாப் பரிமளத் துளபத்து உதித்தநீ**



Isbn Number: 978-93-91115-98-2

**செங்கீரை ஆடிஅருளே**

**செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவை**

**செங்கீரை ஆடிஅருளே**

**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 32)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. மேலும் இந்த செங்கீரைப் பருவத்தில் நம்மாழ்வார், நம்மாழ்வாரின் தாய், திருமகள், துர்க்கை போன்றோரின் புராணக்கதைகள் இடம்பெற்றுள்ளன.

**தாலப்பருவம்**

தாலப்பருவம் பகுதியிலும் 11 பாடல்கள் இடம்பெற்றுக் கணப்படுகிறது. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்துப் பாடுகின்ற பாடல்களைக் குழந்தைகள் உன்னிப்பாகக் கேட்கும் பருவம் தாலப்பருவம் எனப்படும். இப்பகுதியில் ஆசிரியர் செய்யுளின் உறுப்புக்களை 43வது பாடலில் குறிப்பிட்டுச் செல்கின்றார். மேலும், தமிழ்மொழியின் இலக்ணச் சிறப்புக்களை ஆண்டாளைத் தாலாட்டும் போக்கிலேயே கூறிச் செல்கிறார். இதனை,

**அமர்சொல் பொருளாய் அணிபெற் றுளதாய்**

**அடைவில் பலபலவாய்**

**அவையில் பலபா வினம்உற் றனாம் அகலக்**

**கவிதான்ஓர்**

**கமரில் கவிழாது எலகத்து எமைஆள் கருணைக்**

**கடலாய்வாழ்**

**கருளக் கொடிவா கனனைத் துறவோர் கனியைப்**

**புகழ்கோமான்**

**எமர்கட்கு இறையாம் வகுளப் பெருமான்**

**இயல்பைப் புகழ்நாவார்**

**இயலைத் தெளிவார் இசையைத் தெளிவார்**

**இறையைத் தெளிவாராம்**

**தமரைப் பெறவாழ் புதுவைப் பதியாய்தாலோ**

**தாலேலோ**

**சரதத் திருவே பரதத்துவமே தாலோ தாலேலோ**

**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 43)**

என்ற பாடல்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**சப்பாணிப்பருவம்**

பாணி என்பதற்கு கை என்று பொருள். குழந்தைகள் உட்கார்ந்து இருந்துகொண்டு தனது இரு கைகளையும் கொட்டி மகிழும் பருவம் சப்பாணிப்பருவம் எனப்படும். இப்பகுதியில் பத்துப் பாடல்கள் காணப்படுகின்றன. இந்த சப்பாணிப் பருவத்திலும் ஆண்டாள் சப்பாணி ஆடுவதாகக் கூறும்பொழுது தமிழ் மொழியின் பெருமையை ஆசிரியர் கூறிச் செல்கின்றார். இதனை,

**அகரமுதல் னகரஇறு வாய்உயிர்மெய்**

**குற்றுஆய்தம் ஆதிஈறு எனவும்முதல்சார்பு**

**அக்கரம் அவைக்குஇலக் கணமும்ஓர் ஆறிரண்டு**
**ஆம்எனவும் ஒலிஎழுத்தால்**
**புகலுநற் சொற்கள்இரு திணையின்ஐம் பாலொடு**
**புணர்ந்துபெயர் வினைகளாகிப்**
**போற்புறும் வெளிப்படை குறிப்புஎனவும்**
**ஒன்றுதொடர் பொதுஎனவும் முற்றுஎச்சமாப்**
**பகர்தரும் தொகைதொகா நிலையின்அடி**
**தொடையொடும் பாப்பா இனம்பெற்றதாகப்**
**பண்புடைப் பொருள்இரு வகைத்ததாய் நாலொடு**
**பயின்றுஉத்தி வண்ணம்அணிசால்**
**சகலகலை தெரிநிபுணர் புகழ்தமிழ்ப் புதுவையாய்**
**சப்பாணி கொட்டி அருளே**
**சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும்கோதை**
**சப்பாணி கொட்டி அருளே**
**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 52)**

என்ற பாடல்வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

**முத்தப்பருவம்**

தாய் தன் குழந்தையைப் பார்த்து முத்தம் தருமாறு அழைப்பது முத்தப்பருவம் எனப்படும். இப்பகுதியிலும் 10 பாடல்கள் காணப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் குமரி ஆறு, தாமிரபரணி ஆறு குறித்தச் செய்திகளும் இடம்பெறுகின்றன. அகதியிய முனிவர் கடலை உட்கொண்ட செய்தியும் இடம்பெறுகின்றது.


Isbn Number: 978-93-91115-98-2

ஆண்டாளிடம் தாய் முத்தம் கேட்க அழைக்கும் போது இந்தச் செய்தியானது இடம்பெறுவதை,

**தேவைப்பு கழ்ந்தபழ மறைபராய் அட்டமா**
**சித்தியில் முனிவர்பழகும்**
**சிகரபூ தரவேரல் உகுமுத்தம் விண்டுவிரி தீமுத்தம்**
**எனவிரும்பேம்**
**பாவைத்த தண்தமிழ்க் கும்பமுனி நாவைத்த**
**பரவைபெறும் இப்பிமுத்தம்**
**பரியமணல் ஏறுஒருப் பரவரொடு மிச்சிலாம்**
**படிறுஉடைத்துஎனவிரும்பேம்**
**பூவைத்து ணர்க்குஒத்த மேனிமா தவன்மகன்**
**பொருகழையின் முத்தம் அதுவும்**
**புதைப்பட்ட முத்தம்என்று உட்கொளோம்**
**வெண்ணிலவு பொழிவதொடு புதைபடாமல்**
**கோவைப்ப டும்தவள முத்தநிரை உட்கொண்ட**
**கோவைவாய் முத்தம் அருளே**
**கோதையே மெய்த்திருப் பாவைபா டித்தரும்**
**கோவைவாய் முத்தம் அருளே**
**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 60)**

**வாரானைப்பருவம்**

முதல் அடி எடுத்து வைக்கும் குழந்தையைப் பார்த்து தாய் தன்னை நோக்கி வருமாறு அழைத்தலும், குழந்தை தளர்நடை நடத்தலும் இப்பருவத்தில் நிகழ்கின்ற


Isbn Number: 978-93-91115-98-2

நிகழ்ச்சியாகும். ஆண்டாள் பிள்ளைத்தமிழில் இப்பருவப் பகுதியில் 10 பாடல்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் இராமாயணச் செய்திகளும் இடம்பெற்றுள்ளது. இதனை,

**துலைக்கா வலதா உலகளந்த தாள்தா**
**மரையாய்அபயம் எனச்**
**சரணா கதியில் தாசரதி தான் என்றுஅளக்கர்**
**தடுத்துஅமரில்**
**சிலைக்கால் வளைத்த துடன்புருவச் சிலைக்கால்**
**வளைத்துச் சரமாரி**
**சிதறிச் சிரம்பத் தினன்உயிரைச் செகுத்துச்**
**சிறைமீட்டு அயுhத்திபுகுந்து**
**அலைக்கா விரியுள் துயில்அரங்கர்க்கு அமுதே**
**வருக வருகவே**
**அழகர்க்கு அமுதே வடமலைவாழ் அனகர்ன்னு**
**அமுதே வருகவே**
**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 73)**

என்ற பாடல்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**அம்புலிப்பருவம்**

அறிவால் கட்டுப்படுத்தப்படாமல் அன்பினால் நெகிழும் உணர்வுநிலைப் பருவம் அம்புலிப்பருவம் ஆகும். மதியைவிடச் சிறந்தது குழந்தை என மகிழச் செய்யும் இப்பருவத்தில் நிலவு ஒரு விளையாட்டுப் பொருள். அனைத்துப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திலும்

 Isbn Number: 978-93-91115-98-2

இப்பகுதி மிகச்சிறப்பாக அமைந்து காணப்படும். அப்பகுதியில் அண்டகோளத்தின் ஏழுசு; சுற்றுக்கள் மற்றும் ஆண்டாள் பாடிய பாசுரங்களின் எண்ணிக்கைப் போன்ற செய்திகள் இடம்பெற்றுன. இதனை,

**சோதிவான் ஆவரணம் ஏழும் தொழப்பவனி**
**சுற்றிவரு சோதிஇவள் நீ**
**சுடரவன் பதவிமேல் ஆவரணம் ஒன்றுமே**
**சுற்றிவரு சோதியாகும்**
**பாதியா கியமதிச் சோதியா மறுவுடன் பகல்மட்கு**
**சோதியினைநீ**
**பரனைஉணர் மறுவற்ற முழுமதிச் சோதிஇவள்**
**பகல்இரவு தழைச்சுடரினாள்**
**நீதியால் எண்ணிரண் டாயகலை உடையைநீ**
**நிகழ்திருப் பாவையுடனே**
**நீடுதிரு மொழிஎனப் பதின்மடங்கு அதன்மேல்**
**நிறைந்தபன் மூன்றுகலையாள்**
**ஆதிபூ ரணமதியின் விளையாடும் இவளுடன்**
**அம்புலீ ஆடவாவே**
**அரனும்இந் திரனும்நின்று அடிதொழும்**
**கோதையுடன் அம்புலீ ஆடவாவே**
**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 79)**

என்ற பாடல்வழி அறிந்துகொள்ளலாம்.


Isbn Number: 978-93-91115-98-2

**சிற்றில் பருவம்**

மணல் கொண்டு சிறு வீடு கட்டுதல், மணல், இலை தழைகளினால் சமையல் செய்து விருந்து படைத்தல், பொம்மைகள் செய்து அவற்றிற்குத் திருமணம் செய்து விளையாடுதல் போன்றவை அப்பருவத்திற்குரிய விளையாட்டுகளாகும். இந்தப் பகுதியில் திருமாலின் அனைத்துப் பெருமைகளும் இடம்பெற்றுக் காணப்படுகின்றன.

**செழுமலர்த் தடமருவு புதுவைப் பிராட்டிநீ**
**சிற்றிலை இழைத்தருள்கவே**
**தென்னரங் கேசன்முதல் ஐவரும் குடிபுகச்**
**சிற்றிலை இழைத்தருள்கவே**
**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 86)**

**சிறுசோற்றுப்பருவம்**

காமதேவனுக்கான படையல் இப்பருவத்தில் பேசப்படுகிறது. மேலும் 30 வகைப் பறவைகள், 11 வகை விலங்குகள், 20 வகைத் தாவரங்கள், 9 வகை மக்கள், 14 வகைத் தேவர்கள், ஆக மொத்த் 84 ஆகும். இந்த எண்பத்தினான்கை இலட்சத்தால் பெருக்கினால் கிடைப்பது எண்பத்தினான்கு இலட்சம் யோனிப் பிறவிகள் என்று பட்டியலிடுகிறார். இதனை,

**பறவைமா மீனம்ஊர் வனதாவ ரங்கள்முப்**
**பானுடன் பன்னொன்றின்மேல்**

 Isbn Number: 978-93-91115-98-2

**பத்திரட் டியமக்கள் தேவர்ஒன் பானொடும்**
**பதினான்குள னத்தக்கதாம்**
**உறவுகொண்டு எண்பத்து நான்குநூ**
**றாயிரம்யோனியில் குடிபுக்கவாம்**
**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 92)**

**பொன்னூஞ்சல் பருவம்**

புதுவை மாநகரில் வீற்றிருக்கும் மன்னர் பிரானாகிய திருமாருடன் ஊஞ்சலில் ஆடுமாறு தலைவி இப்பருவத்தில் அழைக்கப்படுகிறாள்.

**காமநோன்புப் புருவம்**

*ஆண்டாள் பிள்ளைத்தமிழ்* நூலிற்குப் பெருமை தருகின்ற பகுதி இது. பிற பிள்ளைத்தமிழ் நூல்களில் இப்பருவம் இடம்பெறுவதில்லை. பிள்ளைத்தமிழ் இலக்கியமானது பேதைப் பருவத்துடன் நிறைவுபெறும். ஆனால் ஆண்டாள் பிள்ளைத்தமிழிலோ மங்கைப் பருவப் பகுதியும் இடம்பெறுகின்றது. இப்பகுதியில் அகலிகைப் பற்றிய செய்தியும் இடம்பெறுகின்றது. இதில் ஆசிரியர் ஆண்டாளிடம் காமநோன்பைத் தவிர்க்க வேண்டும்படி வேண்டுகின்றார்,

**கண்ணிணை களிப்பஆ னைப்பவனி**
**போதுவாய்காமநோன் பதுதவிர்கவே**
**காரிதரு மாறர்திரு மகளாய போதையே**
**காமநோன் பதுதவிர்கவே**


Isbn Number: 978-93-91115-98-2

**(ஆண்டாள் பிள்ளைத்தமிழ், பா. 117)**

## முடிவுரை

*ஆண்டாள் பிள்ளைத்தமிழ்* நூலைப் பதிப்பித்து வெளியிட்டவர் நா. வரதராஜுலு நாயுடு என்பவராவார். இந்த நூல் வெளிவந்த ஆண்டு 1904 ஆக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இப்பிள்ளைத்தமிழ் நூலில் காப்புப்பருவம், செங்கீரைப் பருவம், தாலப்பருவம், பொன்னூஞ்சல் பருவம், காமநோன்புப் பருவம் இவற்றில் தலா 11 பாடல்களும், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வாரானைப் பருவம் முறையே 10 பாடல்களும், அம்புலிப்பருவத்தில் 7 பாடல்களும், சிற்றில் பருவத்தில் ஐந்து பாடல்களும், சிறுசோற்றுப் பருவத்தில் 6 பாடல்களும் இடம்பெற்று மொத்தம் 103 பாடல்கள் இடம்பெறுகின்றன. மேலும் காப்புப்பாடல் ஒன்றும், அவையடக்கப் பாடல் இரண்டும், பழிச்சினார்ப்பரவல் பகுதியில் 11 பாடல்களும், நூல்பயன் குறித்து ஒரு பாடலும், இடம்பெற்று மொத்தம் 118 பாடல்கள் காணப்படுகின்றன. பழிச்சினார் பரவல் பகுதியில் ஆண்டாளைத்தவிர மற்ற 11 ஆழ்வார்களையும் வாழ்த்தும் முகமாகப் பாடல்கள் அமைந்துக் காணப்படுகின்றன. சிறுசோற்றுப் பருவம், காமநோன்புப் பருவம், பொன்னூஞ்சல் பருவம் இவை மூன்னும் இந்நூலிற்குப் பெருமை சேர்ப்பனவாக அமைந்துள்ளன.


Isbn Number: 978-93-91115-98-2

இந்த ஆண்டாள் பிள்ளைத்தமிழ் நூலானது மற்ற பிள்ளைத்தமிழ் நூலிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது.

**பார்வைநூல்கள்**

[1] இரா.நரேந்திரகுமார். *ஆண்டாள்.* காவ்யா பதிப்பகம், சென்னை – 24, முதற்பதிப்பு – 2009.

[2] *ஆண்டாள்.* கழக வெளியீடு, சைவசித்தாந்த பதிப்பகம், திருநெல்வேலி, ஜூன் – 1979

[3] *இருபெரும் பாவையின் இருதிறப் பார்வை.* மேலப் புத்தேரி வெள்ளாளர் கல்வி, கலாச்சார, சமய அறக்கட்டளை வெளியீடு, நாகர்கோவில், ஜூலை – 2001.

[4] முனைவர் ச.வே.சுப்பிரமணியன். *திராவிடமொழி இலக்கியங்கள்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 113.

[5] முனைவர் வீ.சந்திரன். *திருப்பாவை.* ராஜகுமாரி பப்ளிகேஷன். சென்னை – 37.

[6] முனைவர் வீ.சந்திரன். *திருவெம்பாவை.* ராஜகுமாரி பப்ளிகேஷன். சென்னை – 37.

[7] முனைவர் வீ.சந்திரன். திருப்பள்ளியெழுச்சி. ராஜகுமாரி பப்ளிகேஷன். சென்னை – 37.

 Isbn Number: 978-93-91115-98-2

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **Isbn Number: 978-93-91115-98-2**

# சங்க மாந்தர்களின் வாழ்வில் நாள்மீன்

**முனைவர். அ. புஷ்பா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் - 43 தமிழ்நாடு.
**ORCiD**: **https://orcid.org/0000-0001-6409-0648**
**DOI: 10.5281/zenodo.7998091**

## ஆய்வுசுச்சுருக்கம்

*சமுதாயத்தில் அதிக நம்பிக்கையோடு பின்பற்றப் படுகின்ற ஆன்மீகத்தின் ஒரு பகுதி அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்தவையாக அமைகின்றன. பால்வெளி மணடலத்தில் உள்ள கோள்களின் இயக்கங்கள் சூரிய மண்டலங்கள் குறித்த விஞ்ஞான அறிவு போன்றவற்றை மேலைநாட்டு அறிவியலாளர்கள் கண்டறிந்து உலகிற்கு அறிவிக்கும் முன்னதாகவே தமிழன் வானவியல் சாஸ்த்திரம் என்ற துறையில் சிறப்புற்றிருந்தான் என்பதற்கு நம் வரலாற்றுக் கண்ணுக்கு எட்டிய காலத்திலிருந்து சான்றுகள் கிடைக்கின்றன. வரலாற்று கண்களுக்கு எட்டாத காலங்கள் சில அடிப்படை ஆதாரங்களுடன் வெறும் ஊகங்களாகக் காட்சித் தருகின்றன. ஊகத்திற்கு உரியனவற்றை மனிதன் ஆதாரம் அற்றது என்று முழுமையாக ஒதுக்கிவிட முடியாது கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல் சார்*

நம்பிக்கைகள் பல ஊகங்களாக இருந்தாலும் நன்மை பயப்பனவாக அமைகின்றன. மனித இனம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து பரிணாம வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் எதிர்கொண்ட இந்த பிரபஞ்சம், சந்திரன் சூரியன், நட்சத்திரங்கள் மட்டுமல்லாது ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினங்கள் வரை அனைத்தையும் இயக்கும் இயக்க சக்தியாக உருண்டோடி பல கோடி மைல்களையும் பல கோடி ஆண்டுகளையும் கடந்து மீண்டும் எதிர் கொள்ளத் தயாராக உள்ளது. சூரியனையும் அதனைச் சுற்றி வரும் கோள்களையும், ஆகாயத்தில் நடக்கும் செயல்பாடுகளையும் குறித்துத் துல்லியமாக அறியும் அறிவியலே அஸ்ட்ரானமி எனப்படுகிறது இதனைத் தமிழில் வானியல் என்று அழைக்கின்றோம். காலங்காலமாகப் பாரத மக்களின் வாழ்வியலோடு கலந்த ஒன்றாக இவ்வானியல் அறிவு இருந்துள்ளது. அமாவாசை, பௌர்ணமி, கிரகணங்கள், சுபமுகூர்த்தங்கள் அசுப காரியங்கள் நேரங்கள் இவற்றோடு குழந்தை கருவுற்றதிலிருந்து கல்லறை செல்லும் வரை கால நேரம் பார்க்கின்றனர். விவசாய மக்கள் பருவமாற்றத்திற்கு ஏற்ப மழை, புயல், வறட்சி காலங்களைக் கணக்கிட்டு பயிர்த்தொழில் செய்தல், சேமித்தல் செயல்பாடுகளைச் செய்கின்றனர்.

 Isbn Number: 978-93-91115-98-2

**திறவுச்சொற்கள்:** வசிட்ட அருந்ததி விண்மீன்கள், தோற்ற இரும விண்மீன்கள், இரட்டை விண்மீன்கள், அறுமீன்.

**மகரமீன் எழுமின், குறுமீன்**

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தக்குடி நம் தமிழ்குடி. அறிவாலும் ஆற்றலாலும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். தமிழர்கள் விண்ணின் கோள்களையும் காற்று மண்டலத்தின் இயக்கங்களையும் கால அளவையும் அளவிட்டு அறியும் வானியல் அறிவைப் பெற்றுள்ளனர் சூரியன், சந்திரன் துல்லியமாகக் கண்ணிற்குத் தெரியக் கூடியவை இவற்றாலே பூமியில் உயிரினங்கள் வாழும் சூழல் அமைந்துள்ளது என்பதை தமிழன் அறிந்திருந்தான் உலகம் அறிவியலை அறியாக்காலத்தே பழந்தமிழன் செவ்வாய்க் கோள் பற்றி கூறுகையில் செம்மீன், அழல் என்று கூறியுள்ளான். பரிபாடலில் படிமகன் என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. புதன் கோளினை புந்தி என்றும் சூரிய மண்டலத்தில் பெரிய கோள் வியாழன் என்று இன்றைய அறிவியல் கூறுகின்றது. அதனையே எங்கும் வியாபித்தல் என்று வியாழன் என்று பெயர் சூட்டினான் தமிழன் வெண்மை நிறமுடையதால் வெள்ளி என்றும், கருமை நிறமுடையதால் காரி என்றும் பெயரிட்டான். சப்தரி மண்டலத்தை எழுமின், அருந்ததி

 Isbn Number: 978-93-91115-98-2

நட்சத்திரத்தை வடமீன், மகநட்சத்திரத்தை மகவெண் மீன், பரணியை வேழம் என்றும், உத்திரம், உத்திராடம், ரோகினி, அஸ்த்தம், திருவோணம், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், திருவாதிரை, சுவாதி, சதயம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, பூசம், அனுசம், உத்திரட்டாதி, ஆயில்யம், கேட்டை, ரேவதி என்று இருபத்தி நான்கு நட்சத்திரங்களும் கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு, சனி, புதன் என கிரகநிலைகள் இருப்பதாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சூரியன் சந்திரனுக்கு அடுத்தபடியாக வானிலே துலக்கமாகத் தெரியும் கோள் கூறியுள்ளனர். கணித்தல் தொழிலில் வல்லுனர் என்பதாலேயே கணியன் பூங்குன்றன், கணிமேதாவி, பக்குடுக்கை நன்கனி எனப் பெயர் வைத்துள்ளனர். அஸ்வினி, மகம், மூலம், பரணி, பூரம், பூராடம், கிருத்திகை வெள்ளி, பெரும்பாலும் வெள்ளியென்றே அழைக்கப்பட்டு வந்தாலும் வெண்மீன், வைகுறுமீன், வெள்ளி மீன் என்றும் கூறப்படுகிறது. வெண்மை நிறமுடையதால் வெள்ளி எனப்பட்டது. சூரிய குடும்பத்திலேயே அதிக வெப்பமான வளிமண்டலத்தைக் கொண்ட கோளாகும் அனைத்து விண்மீன்களை விடவும் பிரகாசமானது.


**Isbn Number: 978-93-91115-98-2**

**வெண்மீன், வைகுறுமீன், வெள்ளி மீன்**

கீழ்த் திசையிலிருந்து தோன்றும் விடியலை உருவாக்கும் விடிவெள்ளி போல நம் காதலி நம் அருகில் இருக்குமாறு நமக்கு கிடைக்குமோ என்று தலைமகன் தன் நெஞ்சிற்கு கூறுவதாக நற்றிணையில் குறிஞ்சித் திணையில் பரணர் பாடுகின்றார். **குணக்குத் தோன்று வெள்ளியின் எமக்குமார் வருமோ (நற்றிணை இபா. 356)** என்பதன் வாயிலாக புவியின் அனைத்து சாயலையும் ஒத்திருக்கும் சகோதரி கோள் என்று கூறப்படும் வெள்ளி புவிக்கு அருகில் உள்ள கோள் ஆகும். இதனை வலியுறுத்தும் விதமாகவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது சிந்திக்கத் தக்கதாகும்.

இரட்டைத் தாளத்திற்கு ஏற்ப வெள்ளி முளைத்த விடியற்காலத்தே பொருநன் பாடத் தொடங்கினான்

**இரு சீர்ப் பாணிக்கு ஏற்ப, விரிகதிர்**
**வெள்ளி முளைத்த நள் இருள் விடியல்**

**(பொருநராற்றுப்படை, பா. 71 - 72)**

என்று வெள்ளியின் வரவு குறித்துக் கூறப்பட்டுள்ளது.

**ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட**
**வைகுறு மீனின், பைபயத் தோன்றும்**

**(பெரும்பாணாற்றுப்படை, பா. 318)**

என்று யவனரின் கூம்பின் மேலிட்ட அன்ன விளக்கு போன்றும் வானத்தில் வைகறையில் தோன்றிய வெள்ளி


Isbn Number: 978-93-91115-98-2

மீன் போலவும் ஒளி விட்டு விளங்கும் நீர்ப்பாயல் துறையைக் கொண்டுள்ளது என்று வெள்ளி மீன் குறித்தக் குறிப்பு இடம் பெறுகின்றது.

வெள்ளிக் கோள் தென் திசையில் தோன்றும் பொழுது மழை பெய்யாது பஞ்சம் ஏற்பட வழிவகுக்கும் என்பதால் மக்கள் தீ நிமித்தமாகக் கருதினர்.

**வெள்ளி தென்புலத்து உறைய விளைவயல்**
**பள்ளம் வாடிய பயன் இல் காலை**

**(புறநானூறு, பா. 388)**

என்று மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் பாடியுள்ளார். பண்ணன் கிணைப் பறை வாசிப்பவன் வறுமை நிலையில் இருப்பது கண்டு மழையெல்லாம் பொய்த்தச் சூழலிலும் கூட தன்னை நாடி வருபவருக்கு கொடுக்கும் தன்மையுடையவன் என்று கூறுமிடத்து வெள்ளிக் கோளின் செயல்பாடு குறித்துக் கூறப்படுகிறது.

கோள்கள் தன் திசை மாறி சென்றாலும் வள்ளல்கள் தங்களுடைய வள்ளண்மை குணத்திலிருந்து நீங்கி வாழவில்லை என்று கூறி பாரியின் நாட்டுக்கு எத்தீங்கும் நேராது என்று புறநானூறு கூறுகின்றது.

**மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்**
**தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்**

**(புறநானூறு, பா. 117)**

 Isbn Number: 978-93-91115-98-2

என்று சனியை மைம்மீன் என்றும் சனி ஆகிய விண்மீன் புகைகளோடுக் கூடிப் புகையினும், எல்லாத் திசையிலும் புகைத் தோன்றினும், தென் திசைக் கண்ணே வெள்ளி மீன் செல்லினும் மழை பொழியாது என்று தமிழர்கள் ஆராய்ந்துள்ளனர். சனி தனக்குப் பகைவீடாகக் கருதப்படுகின்ற சிங்கராசியில் புகின் உலகிற்கு பெருந்தீங்கு நிகழும். தூமக்கேது என்பது புகைக்கொடி இது வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்னும் மறைந்து உறையும் கோள்கள் நான்கனுள் ஒன்றாகும். தூமகேதுவின் தோற்றம் தீமையை விளைவிக்கும் காவிரியின் சிறப்பினைக் கூறுமிடத்துப் பட்டினப்பாலையில்.

**வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசை திரிந்து தெற்கு ஏகினும்**
**தற்பாடிய தளி உணவின்**
**புள் தேம்பப் புயல்மாறி**
**வான் பொய்ப்பினும், தான் பொய்யா**
**மலைத் தலைய கடற்காவிரி**

**(பட்டினப்பாலை, பா. 1 - 6)**

என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் கீழ்வானில் விளங்கி தோன்றுகின்ற கோள் மீனாகிய வெள்ளி வடதிசையில் நில்லாமல் தெற்கு நோக்கி செல்லும் நிலை குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.


Isbn Number: 978-93-91115-98-2

கதிரவன் நான்கு திசைகளிலும் தோன்றுவது போல அதிக கதிர் வீச்சுகளைச் செலுத்தினாலும் வெள்ளிமீன் தென் திசைக்குச் சென்றாலும் மழை பொழியாது நிலம் வறண்டு போகும் என்பது பழந்தமிழர் நம்பிக்கை

**அலங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்**
**இயங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்**

**(புறநானூறு, பா. 357)**

என்று கூறுவதன் மூலம் பரவலாக மக்களிடையே வெள்ளிமீன் குறித்தக் கருத்தாக்கங்கள் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது. மதுரைக்காஞ்சியில் பொருநருக்கு பாண்டியன் பரிசில் கொடுக்கும் நிலைக் குறித்துக் கூறுகையில்

**கல் காயும் கடு வேனிலொடு**
**இரு வானம் பெயல் ஒளிப்பினும்**
**வரும் வைகல் மீன் பிறழினும்**
**வெள்ளம் மாறாது விளையூள் பெருக**

**(மதுரைக்காஞ்சி, பா. 106)**

என்று முதுவேனிலால் பெரிய மேகம் மழையைப் பொழியாது தன்னிடத்து மறைத்துக் கொண்டாலும் தான் தோன்றுதற்கு உரிய நாளில் தோன்றும் வெள்ளி எனும் கோள்மீன் தன்னுடைய இயங்கும் திசை மாறி

 Isbn Number: 978-93-91115-98-2

தென்திசையில் தோன்றினாலும் ஆறுகளில் வெள்ளம் மாறாமல் பெருகிவரும் என்று குறிப்பிடுகிறது.

**வசிட்ட அருந்ததி விண்மீன்கள்**

சப்தரிசி மண்டலத்தில் உள்ள விண்மீன்கள் குழுவே வசிட்ட அருந்ததி நட்சத்திரங்களாகும். இரவில் வானில் மிக எளிதாகக் காணக்கூடிய நட்சத்திரக் கூட்டங்களில் ஒன்றாகும். மிஸார் என்று வசிட்ட நட்சத்திரமும் அல்கோர் என்று அருந்ததி நட்சத்திரமும் அழைக்கப்படுகிறது. இரண்டும் தனித்தனியே இரட்டை நட்சத்திரங்கள் ஆகும். சப்தரிசி மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்கள் அதிவேகமாக வெவ்வேறு திசைகளில் பயணம் செய்கின்றன. துருவ நட்சத்திரங்கள் ஒரே இடத்தில்தான் இருக்கும்.

**இரட்டை விண்மீன்கள்**

பூமியில் இருந்து நோக்கும் பொழுது இரண்டு விண்மீன்கள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாக இருப்பது போலும் ஒரே வரிசையில் இருப்பது போலும் தோன்றும். ஆனால் தொலைவின் காரணமாக மட்டுமே அவ்வாறு காணப்படுகிறது.

**தோற்ற இரும விண்மீன்கள்**

தொலை நோக்கியால் தனித்தனியாகக் காணக்கூடிய விண்மீன்கள் ஈர்ப்பு விசையால்


**Isbn Number: 978-93-91115-98-2**

ஒன்றோடொன்று கட்டுண்டுக் கிடக்கின்றன. இதனையே தோற்ற இரும விண்மீன்கள் என்று கூறுவர்.

கோள்கள் விண்மீன்கள் நிலைப்பாட்டினால் மன்னன் முதல் மக்கள் வரை அனைவரது வாழ்க்கையிலும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இது நம்பிக்கையாக மக்களின் உணர்வுகளோடுக் கலந்துள்ளன. பங்குனி மாதம் மீன் வீழ்ந்தால் இராசபீடையாகவும் மீன் விழுந்த ஏழாம் நாள் சேரன் இறந்து பட்டான் என்பதை புறநானூற்றுப் பாடல் பதிவு செய்கிறது.

**ஆடு இயல் அழல் குட்டத்து**
**ஆர் இருள் அரை இரவில்**
**முடப் பனையத்து வேர் முதலாக்**
**கடைக் குளத்துக் கயம் காய**
**பங்குனி உயர் அழுவத்து**
**தலை நாள்மீன் துறை படிய**
**பாசிச் செல்லாது ஊசித் துன்னாது**
**அளக்கர்த் திணை விளக்காகக்**
**கனை எரி பரப்ப, கால் எதிர்பு பொங்கி**
**ஒரு மீன் வீழ்ந்தன்றால் விசும்பினானே**

**(புறநானூறு, பா. 229)**

என்று கூடலூர்கிழார் பாடுகிறார். விண்மீன்கள் குறித்த அத்தனைச் செயல்பாடுகளும் வெளிப்படுகின்ற பாடல்


Isbn Number: 978-93-91115-98-2

இதுவே ஆகும். மேட ராசியுடன் கூடிய கார்த்திகை நாளின் முதல் நாளின் கண் நிறைந்த இருள் சூழ்ந்த பாதி இரவு அப்பொழுது முடப்பனை போன்ற வடிவுடைய அனுட நாளின் முதல் நட்சத்திரம், குளம் போன்ற வடிவுடைய புனர்பூச நட்சத்திரத்தின் கடைப்பகுதியாக விளங்கும் உத்திரம் சாய்ந்தது. அதற்கு எட்டாம் நட்சத்திரமாகிய மூலம் அதற்கு எதிரே எழுகின்ற உத்திரத்திற்கு முன் செல்லப்பட்ட மீன்களில் எட்டாவது உள்ள மிருகசீரிடம் தாழ்ந்து படியக் கீழ்த்திசையில் போகாமலும் வடதிசையிற் போகாமல் தீத்திசையாகிய வடகிழக்கே வீழ்ந்தது. ஒரு விண்மீன் கடல் சூழ்ந்த உலகின் விளக்காக முழங்குகின்ற தீப்பரக்கக் காற்றால் விசிறப்பட்டு வீழ்ந்தது அம்மீன் விழுவதைப் பார்த்த யாமும் உள்ளம் தளர்ந்து அஞ்சினோம் என்று கூறுவதன் வாயிலாக விண்மீன்கள் குறித்த அறிவை அறிய முடிகின்றது.

பிறையை வணங்கும் மரபு பண்டைய சங்க காலத்திலே இருந்துள்ளது.

**வளை உடையத்தனையது ஆகிப் பலர் தொழ**
**செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி**
**இன்னாப் பிறந்தன்று பிறையே**

**(குறுந்தொகை, பா. 307)**

 **Isbn Number: 978-93-91115-98-2**

என்று சிவந்த வானத்தில் தோன்றும் பிறைச் சந்திரனைக் கன்னியர் தொழும் மரபினை பிரிவிடைக் கடுஞ்சொல் கூறிய தோழிக்குக் கிழத்தி உரைக்கும் இடத்து சுட்டப்படுகிறது.

பகற் பொழுது குறைவாகவும் இரவுப் பொழுது மிகுதியாகவும் இருக்கக்கூடிய தை மாசி போன்ற மாதங்களின் நிலைப்பாட்டினை

**பகல் நீடு ஆகாது இரவுப் பொழுது பெருகி**
**மாசி நின்ற மா கூர் திங்கள்**

**(பதிற்றுப்பத்து, பா. 59)**

என்று குளிரில் அரிதான வழியில் செல்லும் பாணன் உவப்பக் கூறுமிடத்து பதிற்றுப்பத்து விளக்குகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி மகன் பொகுட்டு எழினியை ஔவையார் பாடும் பொழுதும் கோளாகிய விண்மீன் போன்ற பொன் வள்ளத்திற் தேனினது கடுப்புப் போல் நாட்பட்ட புளிப்பேறியக் கள்ளைப் பெய்து உண்ணும் முறைப்படி அளிப்பதோடு மட்டுமன்றி கொள்ளும் முறையில் விருந்தாக உண்பித்தான் என்பதை,

**கோள் மீன் அன்ன பொலங்கலத்து அளைஇ**
**ஊண்முறை ஈத்தல் அன்றியும் கோள்முறை**
**விருந்து இறை நல்கியோனே**

**(புறநானூறு, பா. 392)**


Isbn Number: 978-93-91115-98-2

என்று கூறுமிடத்து பயன்படுத்தும் உண்கலம் குறித்துக் கூறுவதற்குக்கூட விண்மீன் குறித்தச் சொல்லாடல் பயன்பாட்டில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது. பெரும்பாணாற்றுப் படையில் தொண்டைமான் இளந்திரையன். **மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி (பெரும்பாணாற்றுப்படை, பா. 477)** என்று விண்மீன் போன்ற வெள்ளிக் கலங்களைப் பரப்பி இன்சுவை அடிசிலைக் கொடுக்கத் தாய் முன் பிள்ளை போல முகம் மலர்ந்து இனிமையாக உபசரித்ததாக விளக்கப்படுகிறது.

பரத்தையரது வாழ்க்கைக் குறித்துக் கூறுமிடத்தில் நீல நிறமுடைய ஆகாயத்தில் விளையாடும் வானவர் மகளிர் கண்டோரை வருந்துமாறு தம்மைக் கண்டோரின் நெஞ்சங்களை வருத்தி அவர்களுடைய பொருளைக் கவர்ந்து கொள்வது போல

**நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும்**
**வானவர் மகளிர் மான**

**(மதுரைக்காஞ்சி, பா. 581- 82)**

என்று மேகமானது கண்டவரை வருந்த செய்யும் மழை பெய்யுமா பொய்க்குமா என்ற ஏக்கத்தை ஏற்படுத்தும்என்று கடல் நீரை கவர்ந்து செல்லும் தன்மையோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.எல்லாத் திசைகளிலும் தன்னுடைய விரிந்த கதிர்களைப் பரப்பும் அகன்ற இடத்தையுடைய கதிரவன் மேற்குத் திசை


Isbn Number: 978-93-91115-98-2

நோக்கிச் செல்வதற்காக விண்ணில் எழுந்தது. அரசனுடைய அரண்மனை அமைப்பதற்கு திருமுளைச் சாத்து சடங்கு நடத்த அந்த நேரம் குறிக்கப்படுவதாக நெடுநல் வாடையில் சுட்டப்பட்டுள்ளது.

**உரோகிணி வசிட்ட விண்மீன்**

சகட நட்சத்திரத்துடன் சந்திரன் கூடிய நாள் மங்கல நாளாகக் கருதப்பட்டுத் திருமணங்கள் நிகழ்ந்த குறிப்பு அகநானூற்றில் உள்ளது.

**கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்**
**கேடு இல் விழுப்புகழ் நாள் தலைவந்தென**

**(அகநானூறு, பா. 6 - 7)**

என்று தீய கோள்கள் நீங்கப் பெற்ற வளைந்த வெண்மையான திங்களைத் தீமையற்ற சிறந்த புகழையுடைய உரோகிணி விண்மீன் வந்து கூடும் நன்னாளே மணநாளாகும்.

**மதியம் சகடணைந்த நாளிலே பாழுது பார்ப்பான் சடங்கு**
**காட்ட கண்ணகியும் கோவலனும் தீவலம்வந்தனர்**

**(சிலப்பதிகாரம், பா. 50 - 54)**

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

உரோகிணி போன்று கணவனைப் பிரியாது வாழ வேண்டும் என்பதாக நெடுநல்வாடை பாடல் அமைகின்றது.


Isbn Number: 978-93-91115-98-2

**திண்நிலை மருப்பின் ஆடு தலையாக**
**விண் ஊர்பு இழிதரும் வீங்கு செலல் மண்டிலத்து**
**முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய**
**உரோகினி நினைவனள் நோக்கி, நெடிது உயிரா**
**(நெடுநல்வாடை, பா.160)**

என்று அரசமாதேவியின் கட்டிலின் மேற்கட்டியில் அமைந்த துணியில் மெழுகு பூசப்பட்டு ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தது. கதிரவன் ஆகாயத்தின் மீது வலிமை வாய்ந்தக் கொம்புகளை உடைய ஏட்டின் பெயரினை உடைய மேட ராசி முதலான ஏனை இராசிகளிலும் சென்று இயங்கும். கதிரவனிலிருந்து மாறுப்பட்ட இயக்கமுடையதும் தலைமையுடையதும் ஆகிய திங்கள் செல்வனை உரோகிணி என்னும் நாள்மீன் எந்நான்றும் விட்டு நீங்காது இருக்கும் இயல்பினைக் கொண்டதாகும் என்று ஞாயிற்றின் செலவு, விண்மீன்களின் இயக்கம், திங்கள் மண்டிலம், விண்மீன் கூட்டம் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெளிந்த ஒளியுடைய இடமகன்ற அழகிய பெரிய வானம் விளக்கமுறுமாறு திங்களை உரோகினி கூடிய நன்னாளில் மண மனையினை அழகுபடுத்தினர் மங்கல மகளிர் தலைவிக்கு மண நீராட்ட இந்நாளைத் தேர்வு செய்தனர்.


Isbn Number: 978-93-91115-98-2

**... தென்ஒளி**

**அம்கண் இருவிசும்பு விளங்க திங்கட்**

**சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து**

**(அகநானூறு, பா.136)**

என்று அகநானூறு கூறுகின்றது. பழந்தமிழர் உரோகிணியைத் திருமணத்திற்குரிய சிறந்த நாளாகக் கொண்டிருந்தனர். உரோகிணியோடு சேர்ந்த வளர்பிறைச் சந்திரன் உச்சன் ஆதலால் எவ்வகை தீங்கானாலும் நீங்கும் என்று நம்பினர் அதனாலேயே துகள் தீர் கூட்டம் என்று வழங்கப்பட்டது.

**நாள் மீன்களுடன் கோள்மீன்கள்**

பட்டினப்பாலையில் சங்ககால விளையாட்டில் ஆட்டுக்கிடாயையும் கௌதாறி பறவையும் மோதவிட்டு விளையாடும் விளையாட்டானது இடம் பெறுகிறது அதனைக் காண்பதற்கு

**நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்**

**நாள் மீன் விராஅய கோள்மீன் போல**

**(பட்டினப்பாலை, பா. 67 - 68)**

என்று நீல நிற ஆகாயத்தில் வலமாக எழுந்து செல்லும் நாள்மீன்களுடன் கூடி நிற்கும் கோள் மீன்களைப் போல விளங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

மகம் என்னும் வெண்ணிற நாள்மீனின் வடிவத்தைப் போன்ற வடிவத்தைக் கொண்ட

 Isbn Number: 978-93-91115-98-2

வலிமையுடன் அமைக்கப்பட்ட உயர்ந்த கரைகளைப் பெற்ற பொய்கை உள்ளது. அது மழை மாசு நீங்கி பெரிய ஆகாயத்தில் திங்களைச் சேர்ந்து விளங்குகின்றது.

**மழை நீங்கிய மா விசும்பில்**
**மதி சேர்ந்த மகவெண்மீன்**
**உரு கெழு திறல் உயர் கோட்டத்து**
**முருகு அமர் பூ முரண் கிடக்கை**
**வரி அணி சுடர் வான் பொய்கை**

**(பட்டினப்பாலை, பா. 34 - 38)**

என்று மகம் என்ற நாள்மீன் குறித்து சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

**விடிவெள்ளி**

விடிவெள்ளி என்பது கிழக்குத் திசையிலே தோன்றுவது ஆகும். வாழ்வின் விடிவெள்ளியாக என்பது மங்கலமாக, நித்தியமாக, கலங்கரை விளக்கமாக என்று மதிப்பீடு செய்யப்படுகின்றது. நற்றிணை குறிஞ்சித் திணைப்பாடலில்,

**காதலி உழையலாக**
**குணக்குத் தோன்று வெள்ளியின் எமக்குமார்**
**வருமே (நற்றிணை, பா. 356)**

என்று தலைவன் தன் நெஞ்சிற்கு கூறுவதாக வாழ்வில் விடியலை ஏற்படுத்த தலைவி வருவாளா என்று எண்ணுவதாக பரணர் பாடியுள்ளார்.


Isbn Number: 978-93-91115-98-2

அகநானூற்றில் வைகறைப் பொழுதில் விடிகின்ற விடிவெள்ளி எண்ணெய் ஊற்றிய விளக்கின் சுடர் போன்று விடிகின்றது என்று சுட்டப்படுகின்றது.

**எரிநட்சத்திரம்**

சூரியனிலிருந்து சிதறி விழும் ஒளி பிழம்பு எரிநட்சத்திரம் எனப்படும்.

**வேய் பயில் அடுக்கம் சுடரமின்னி**
**நிலை கிளர் மீனின் தோன்றும் நாடன்**

**(நெடுநல்வாடை, பா. 95, 96)**

என்று ஆகாயத்தின் கண் நிலை பெறுதல் இன்றி சிறு ஒளியை உடைய நட்சத்திரம் கீழே விழுவதைப் போன்று நம் மனக் கண்ணிலேத் தோன்றி மறைகின்ற நாட்டின் தலைவன் என்றுச் சுட்டப்படுகின்றது.

**மகரமீன்**

அரண்மனையின் நிலா முற்றத்தில் பெய்த மழைநீர் மாடங்களிலிருந்து கீழே விழுவதற்காக மகரமீனின் வாய்போல் குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

**நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றத்து**
**கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய**

**(குறிஞ்சிப்பாட்டு, பா. 67, 68)**

என்ற நெடுநல்வாடை செய்யுளில் மகரமீன் பற்றியக் குறிப்பு உள்ளது.


Isbn Number: 978-93-91115-98-2

**நாள்மீன்**

நாள்மீன்களுடன் கூடிநிற்கும் கோள்மீன்களைப் போல விளங்கும் ஆட்டுக்கிடாயும் கௌதாறி பறவையும் மோதவிட்டு விளையாடும் விளையாட்டைக் குறிக்கும் இடத்து.

**நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரும்**
**நாள்மீன்விராஅய் கோள்மீன் போல"**

**(பெரும்பாணாற்றுப்படை, பா. 477)**

என்று நீல நிற ஆகாயத்தின் கண் வலபுறமாக எழுந்து செல்லும் விண்மீன்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மீன் பூத் தன்ன வான்கலம் பரப்பி (அகநானூறு, பா. 22)** என்று விண்மீன் மற்றும் வான்கலமாகிய வெள்ளி கலங்கள் குறித்துக் கூறப்படுகிறது.

**குறுமீன்**

அதிகாலை விண்மீன்கள் போல எஞ்சிய சில மலர்கள் அருகித் தோன்றும் என்று மகட்போக்கிய செவிலித்தாய் கூறிய விடத்து

**வைகுறு மீனின் தோன்றும்**
**மைபடு மா மலை விலங்கிய சுரனே**

**(அகநானூறு, பா 141: 6 - 8)**

என்று அகநானூறு குறுமீன் என்று விண்மீனைப் பயன்படுத்தி உள்ளது நோக்கத்தக்கது.


Isbn Number: 978-93-91115-98-2

**அறுமீன்**

பிரிவிடை ஆற்றாறெளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தியுரைத்ததாக நக்கீரர் கூறுகையில்.

**மழைகால் நீங்கிய மாக விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர மதி நிறைந்து**
**அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்**

**(திருமுருகாற்றுப்படை, பா. 299)**

மழை பெய்து ஓய்ந்தது வானில் சிறு முயலாகிய மறுவின் நிறம் விளங்கித் தோன்ற மதி நிறைந்தக் கார்த்திகை நன்னாளில் இருள் அகன்ற நள்ளிரவில் வீதிகளில் திருவிளக்குகள் ஏற்றப்பட்டன என்றுக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோள்மீன்**

சிறுபாணாற்றுப்படையில் கோள்மீன் என்ற சொற்பயன்பாடு உள்ளது.

**வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து**
**விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி**

**(சிறுபாணாற்றுப்படை, பா. 242 - 43)**

என்று ஒளிருகின்ற ஆகாயத்தில் கோள்மீன் சூழப்பட்ட இளஞ் சூரியன் இகழும் தோற்றமுடைய பொன்போன்ற கலத்தில் பாணன் முதலியோருக்கு நள்ளியக்கோடன் உணவளித்தான் என்றுக் குறிப்பிடப்பட்டுள்ளது.


Isbn Number: 978-93-91115-98-2

## தொகுப்புரை

கோள்களானது அதனதன் தன்மைகளுக்கு ஏற்ப எதிர் விளைவினை உருவாக்குகின்றன. சங்க கால மாந்தர்கள் நேர்த்தியான நுணுக்கமான அறிவார்ந்த வாழ்க்கையே வாழந்துள்ளனர், விண்மீன்களும் சூரியனும் சந்திரனும் அதிக அளவிலான பாதிப்பை ஏற்படுத்துவதாக சங்கப் புலவர்களின் பாடல்கள் வழி அறிய முடிகின்றன. மாந்தர்களின் வாழ்வியலோடு கோள்களின் பயன்பாடு இரண்டற கலந்துள்ளன. கோள்கள் குறித்த அறிவு ஒரே நாளில் உருவாகி விட முடியாது பல நூற்றாண்டுகள் பழக்கத்தில் சிந்தையில் இருந்த ஒன்றே செயலாகப் பிரதிபலிக்க முடியும். அத்தகைய நிலையிலேயே தான் வானியல் குறித்தச் சிந்தனைக்கான விதை ஊன்றப் பட்டுள்ளது தெளிவாகின்றது.

## குறிப்பு நூல்கள்


[1] இராஜேந்திரன். ப. *திருமுருகாற்றுப்படை*. கங்கை புத்தக நிலையம், சென்னை, 2010.

[2] இராமநாதன் செட்டியார். *எட்டுத்தொகை*. செல்வம். முத்தையா நிலையம், சென்னை, 1973.

[3] கரிகாலன். நை. சி. *பத்துப்பாட்டு ஆய்வுகள்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.



Isbn Number: 978-93-91115-98-2

[4] சாமிநாதைய்யர். உ. வே. *சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும்.* டாக்டர் உ. வே. சா. நூல் நிலையம், சென்னை, முதல் பதிப்பு –1978.

[5] சுப்பிரமணியன். கா. *சங்ககாலசமுதாயம்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட். சென்னை, 1987.

[6] பரிமணம். அ. மா. பாலசுப்ரமணியன். கு. வெ. (ப.ஆ) *எட்டுத்தொகை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41. பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை-600098.

[7] பரிமணம். அ. மா. பாலசுப்ரமணியன். கு. வெ. (ப.ஆ) *பத்துப்பாட்டு* -1. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41. பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை - 600098.

[8] பரிமணம். அ. மா. பாலசுப்ரமணியன். கு. வெ. (ப.ஆ) *பத்துப்பாட்டு* -2. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41. பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை - 600098.

[9] பொன் புஸ்பராஜ். (உ. ஆ) *சிறுபாணாற்றுப்படை.* சாரதா பதிப்பகம், சென்னை, 2018.

[10] வேங்கடசாமிநாட்டார். ந. மு. (தொ.ஆ) *உருத்திரசன்மன்.* (ப.ஆ) கௌரா பதிப்பகம், சென்னை, 2011.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.


**Isbn Number: 978-93-91115-98-2**

# இணைப்பு

## கருத்தரங்க விவரம்

**பாண்டியன் கல்வி அறக்கட்டளை**

**மற்றும்**

**மகேஸ்வரி பதிப்பகம்**

**வழங்கும்**

**உலகத் தாய்மொழித் திருநாள் கருத்தரங்க அழைப்பு**

**தலைப்பு**

**தமிழ்மொழி இலக்கண இலக்கியத்தின் தொன்மையும் வளர்ச்சியும்**

**நாள்**

**09-04-2023**

**தளம்: கூகுள் மீட்**

**ஞாயிறு, ஏப்ரல் 9, 10:00am - 1:00pm**

**கூகுள் மீட் இல் இணைவதற்கான தகவல்**

**வீடியோ அழைப்பு இணைப்பு:**
**https://meet.google.com/uts-racq-gha**

# கருத்தரங்கக் குழு

**கருத்தரங்கப் புரவலர் & ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் த. மகேஸ்வரி**

பாண்டியன் கல்வி அறக்கட்டளை,

விருதுநகர்.

**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

**முனைவர் எஸ். கேசவன்,**

தலைவர், இந்து நாகரிகத்துறை,

சிரேஷ்டவிரிவுரையாளர், கலைத்துறை,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**முனைவர் அ. ஹெப்சி ரோஸ் மேரி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

கேரளப் பல்கலைக்கழகம், கேரளா.

**முனைவர் லொ. ஆ உமாமஹேஸ்வரி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

பெரும்பாக்கம், சென்னை.

**ஜெ. பா. சாம் செல்வகுமார்,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

நா. ம. ச. ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,

நாகமலை, மதுரை.

**முனைவர் நா. குமாரி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி, வேலூர்.

**முனைவர் அ. இராஜலட்சுமி,**
முனைவர் பட்ட மேலாய்வாளர்,
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்,
சென்னை.

**பா. பத்ரகாளி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குனியமுத்தூர், கோயம்புத்தூர்.

**முனைவர் ப. சசிரேகா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி, சென்னை.

**முனைவர் சு. ஏஞ்சல் ஜெயலெட் ராணி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
புனித அல்போன்சா கலை அறிவியல் கல்லூரி,
கருங்கல், கன்னியாகுமரி.

**குறிக்கோள்**

தமிழ் இலக்கண இலக்கிய விழுமியங்களை உலகத் **தாய்மொழித் திருநாள்** (21.02.2023) பொருட்டு **தமிழ்மொழி இலக்கண இலக்கியத்தின் தொன்மையும் வளர்ச்சியும்** எனும் தலைப்பில் இக்கருத்தரங்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்

இலக்கணம், இலக்கியம், கலாச்சாரம், பாரம்பரியம், வரலாறு, மானுடவியல், ஆன்மிகம் போன்ற ஏனைய விழுமியங்களைத் தமிழ்ப் பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் ஆய்வுக் கட்டுரைகள் வாயிலாகத் தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கிட இவ்வாய்ப்பினைப் பயன்டுத்திக் கொள்ள வேண்டுகிறோம். ஆய்வுக்கட்டுரைகள் கொடுக்கப்பட்டுள்ள பொருண்மையில் அமையலாம்.

- தமிழ் இலக்கண மரபு
- நவீன தமிழ் இலக்கண ஆய்வுகள்
- ஒப்பீட்டு இலக்கணம்
- தமிழ் கவிதைகள்
- தமிழ் புதினங்கள்
- தமிழ் நாடகங்கள்
- ஏனைய தமிழ் இலக்கிய வகைகள்
- தமிழ் இலக்கியங்களில் கல்வி நெறிமுறைகள்
- தமிழ் இலக்கியங்களில் பெண்ணியம்
- தமிழ் இலக்கியங்களில் சுற்றுப்புறச் சூழல்
- தமிழ் இலக்கியங்களில் உளவியல்
- தமிழ் இலக்கியங்களில் சமூகவியல்
- தமிழ் இலக்கியங்களில் கலாச்சாரம்
- தமிழ் இலக்கியங்களில் தத்துவங்கள்\
- தமிழர் கோவில் கலைகள்
- அயலகத் தமிழ் இலக்கியம்
- தமிழில் உலக இலக்கியம்
- தமிழ் ஆராய்ச்சி முறைகள்

- தமிழ் இலக்கிய ஆய்விதழ்கள்

இது போன்ற பிற தலைப்புகளிலும் ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

**கல்விசார் ஒருமைப்பாடு**

கருத்துத் திருட்டு ஓர் அறிஞருக்கு இழைக்கும் அநீதியாகும். எனவே, ஆய்வுக் கட்டுரைகள் சொந்த படைப்பாக இருத்தல் அவசியம். ஆய்வுக் கட்டுரைகள் கருத்துத் திருட்டு உலவி மூலம் சரிபார்க்கப்பட்டும் தகுந்த மதிப்பீடு செய்யப்பட்டும் பரிந்துரை வழங்கப்படும். சீரிய திருத்தங்கள் செய்யப்பட்ட கட்டுரைகள் மட்டும் ISBN எண்ணுடன் பிரசுரம் செய்யப்படும்.

**கட்டுரையாளர் கவனத்திற்கு**

1. ஆய்வுக்கட்டுரை தமிழில் அமைய வேண்டும்.
2. ஆய்வுக்கட்டுரை ஏ4 தாளில் 12 அளவு, 1.5 இடைவெளியுடன் ஏரியல் யுனிகோடு (தமிழ்), டைம்ஸ் நியூரோமன் (ஆங்கிலம்) எழுத்துருவில் தட்டச்சு செய்து இருக்க வேண்டும்.
3. கட்டுரைத்தலைப்பு, பணியிட முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் கண்டிப்பாக கட்டுரையில் இருக்க வேண்டும்.
4. ஆராய்ச்சியாளர்கள் தங்களுக்குரிய ORCID (**https://orcid.org/**) எண்ணை வழங்குதல் வேண்டும்.
5. ஆய்வாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் புத்தகங்கள், ஆய்விதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் மற்றும் இணையதள தரவுகள் (மிகையான இணையதள உரலிகள்

தவிர்க்கவும்) போன்ற குறிப்புகளை நேர்த்தியான மேற்கோளிட்டுக் குறிப்புப்பட்டியலில் இடம் பெற்றிருக்கிறதா என உறுதிச் செய்து கொள்ள வேண்டும்.

6. மேற்கோளிட்ட தரவுகள் மட்டும் துணைநூல் பட்டியலில் அமைய வேண்டும். அவை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தமிழ் அகரவரிசையில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
7. ஆய்வுக்கட்டுரை ஆய்வு நோக்கம் கொண்டு கருத்துத்திருட்டு இல்லாமல் அமைந்தால் மட்டுமே மதிப்பீட்டு நிலைக்குத் தேர்வு செய்யப்பெறும்.
8. ஆய்வாளர்களின் படைப்பில் கருத்துத்திருட்டு இருந்தால் பதிப்புக்குழு அக்கட்டுரையை நிராகரித்துவிடும்.
9. ஆய்வுக் கட்டுரைகள் இரு அகமதிப்பீட்டு முறைக்கு உட்படுத்தப்படுகிறது.
10. அறிஞர் பெருமக்களால் மதிப்புரை வழங்கப்பட்ட சீரிய திருத்தங்கள் செய்யப்பட்ட கட்டுரைகள் தகுதிக்கேற்ப ISBN & DOI எண்ணுடன் வெளியிடப்படும்.
11. தமிழ்த்துறை சார்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், ஆகிய அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப் படுகின்றன. ஆய்வுக்கட்டுரையைக் கணினிவழி தட்டச்சு செய்து 30.03.2023குள் **https://forms.gle/YtmiSePx8mvhhsA47** முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

12. **நெறிமுறைகளைப் பின்பற்றாத கட்டுரைகள் நிராகரிக்கப்படும். ஆய்வுக்கட்டுரை மாதிரி பார்க்கச் சொடுக்கவும். https://tinyurl.com/2p8799y2**

13. ஆய்வாளர்கள் கருத்தரங்கப் பதிவுக்கட்டணமாக ரூபாய் 350–ஐ கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிற்குச் செலுத்தவும்.

**காணொளி பங்கேற்பிற்கான விவரம்**

09.04.2023 ஞாயிறு அன்று ஆசிரியர் மற்றும் மதிப்புரை வல்லுநர்களுடன் ஆய்வுக் கட்டுரையாளர்கள் கலந்து உரையாட வாய்ப்பளிக்கப்படும். நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு ஆய்வுக்கோவையும் சான்றிதழும் வழங்கப்படும் (Hard Copy & Certificate).